

என் கண்கள் கண்டவை
ஆசிரியர்
Dr. கிளிபோர்டு குமார்
பதிப்பாசிரியர்
எஸ். தாயப்பன்
இயேசு கிறிஸ்து இன்றும் அதிசயங்களை செய்கிறார்
என்பதற்கு ஒரு நிதர்சனமான சாட்சி நூல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

என் கண்கள் கண்டவை

ஆசிரியர்

சுவி டாக்டர் கிளிபோர்டு குமார்

எண்.4, முதல் குறுக்குத் தெரு, வ.உ.சி. நகர்,
அண்ணா நகர், சென்னை - 600 102.
(போன்: 044 - 26630237)

பதிப்பாசிரியர்:

எஸ்.தாயப்பன்

நன்கொடை ரூ.10/-

என் கண்கள் கண்டவை - நவம்பர் 2015 - 5,000 பிரதிகள்

பதிப்பாசிரியரின் பிற நூல்கள்

		On Circulation	Rs.
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ்)	3,40,000	10/-
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (கன்னடம்)	65,000	10/-
3.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (மலையாளம்)	40,000	10/-
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தெலுங்கு)	10,000	10/-
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஹிந்தி)	15,000	10/-
6.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஒடிசா)	6,000	10/-
7.	**My Cry & Joyful Life (English)**	75,000	10/-
8.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	1,10,000	10/-
9.	பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், கன்னடம்)	1,20,000	10/-
10.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	50,000	10/-
11.	என் ஊழியக்காரனே?	20,000	10/-
12.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000	10/-
13.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	40,000	10/-
14.	நீங்களே எனக்கு சாட்சிகள்	20,000	10/-
15.	உண்மையான கடவுள் யார்?	25,000	10/-
16.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	20,000	10/-
17.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	15,000	10/-
18.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 1)	15,000	10/-
19.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 2)	15,000	10/-
20.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 1)	20,000	10/-
21.	நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் (பாகம் 2)	20,000	10/-
22.	நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் (பாகம் 3)	5,000	10/-
23.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், கன்னடம்)	10,000	10/-
24.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி - டாக்டர் கிறிஸ்டோபர்	15,000	10/-
25.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - டாக்டர் சுந்தர் ஏசுவடியான்	10,000	10/-
26.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	5,000	10/-
27.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	5,000	10/-
28.	பரலோகம் செல்ல எளிதான வழி (சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை)	5,000	10/-
29.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	10,000	10/-
30.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 1)	10,000	10/-
31.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 2)	10,000	10/-
32.	விவிலியமும் விஞ்ஞானமும்	10,000	10/-
33.	கிறிஸ்துவத்தைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும், அதற்குரிய பதிலும் (பாகம் 1)	10,000	10/-
34.	கிறிஸ்துவத்தைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும் அதற்குரிய பதிலும் (பாகம் 2)	10,000	10/-
35.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 1)	5,000	10/-

36.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 2)	5,000	10/-
37.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 3)	5,000	10/-
38.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 1)	5,000	10/-
39.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 2)	5,000	10/-
40.	சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே	5,000	10/-
41.	கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு	5,000	10/-
42.	தெய்வீக சுகம் உண்டா?- எபி சுந்தர்ராஜ்	10,000	10/-
43.	கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - சிஸ்டர் மரியா	10,000	10/-
44.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ்)	3,60,000	10/-
45.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (கன்னடம்)	60,000	10/-
46.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (ஹிந்தி)	30,000	10/-
47.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (மலையாளம்)	10,000	10/-
48.	VCD எழுந்து காட்டுவோம் (தமிழ்)	20,000	10/-
49.	VCD முக்திக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்)	15,000	10/-
50.	VCD கதாகாலட்சேபம் (தமிழ்	20,000	10/-
51.	VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே	10,000	10/-
52.	தமசோம் ஜோதிர்கமய	5,000	10/
53.	வேதமா? விஞ்ஞானமா? - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
54.	மனிதனே நீ யார்? - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
55.	சீரழிய சினிமா பாருங்கள் - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
56.	தெய்வத்தை தேடுவோம் வாருங்கள் - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
57.	இந்து மதம், இந்திய மதமா? - உறையூர் வளவன்	5,000	10/-
58.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அழைப்பு	5,000	10/-
59.	இராம ஜென்ம பூமி- உறையூர் வளவன்	5,000	5/-
60.	மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை - R. ஸ்டான்லி	5,000	5/-
61.	மனமாற்றத்தை பெருக்குவது எப்படி? - Rs. ஸ்டான்லி	5,000	5/-
62.	வாழ்க்கையைவளப்படுத்தும் வார்த்தைகள்	5,000	5/-
63.	நாலு வேதங்களின் நாயகர் இயேசு	10,000	5/-
64.	ஓர் அவசர அறைகூவல்	10,000	5/-
65.	கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக் குழுவும் இராணுவ சகோதரர்களும் (தமிழ், கன்னடம்)	5,000	5/-
66.	திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000	5/-
67.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில் - சாலமோன் ராஜா	5,000	5/-
68.	இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை	5,000	5/-
69.	ஆனந்த புதுவாழ்வு கண்டேன்	30,000	5/-
70.	நித்யஜீவன் தரும் நிகரில்லா இயேசு		5/-
71.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி - சாந்திதேவி	10,000	2.50
72.	மோட்ச வாழ்வுக்கு வழி - சாந்திதேவி	5,000	2.50
73.	DVD ஆனந்த புதுவாழ்வு (Telefilm)	2,000	100
74.	DVD அமாவாசை (Telefilm)	2,000	100

இந்த நூல் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி

எஸ்.தாயப்பன்
12, ஜீ.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ -1,
சேலையூர் பேபாஸ்ட், சென்னை - 600 073,
தொலைபேசி: 044-22234256, மின்னஞ்சல்: sakthiprabha@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1. M.O., D.D. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை M.O பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்: கொரியரில் பதிவு பார்சலில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்) 1 முதல் 15 விசிடி வரை அனுப்ப ரூ.50/-, 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.60/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப் படும்.

'வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்'

கர்த்தர் இந்த அடிமையைக் கொண்டு ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் வெளியிட்ட புத்தகங்கள், விசிடி மற்றும் டிவிடிக்கள் ஒவ்வொன்றிலும் எதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது என்பதை வாசகர்கள் அறிந்து, தேவையான புத்தகம், சிடிக்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக, 'வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்' என்னும் ஒரு நூலும் வெளியிட்டு இருக்கிறேன். ஆண்டவருடைய வருகைக்கு நீங்கள் ஆயத்தமாக, மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த, ஆதாயப்படுத்த ஆவிக்குரிய புத்தகங்களை தேர்வு செய்ய இந்த நூல் உங்களுக்கு உதவும்.

- எஸ்.தாயப்பன்

நன்கொடை - ரூ.5/-

பொருளடக்கம்

1.	என் கண்கள் கண்டவை	7
2.	நான் கண்டேன்!	11
3.	திகைத்திடும் போது!	16
4.	அற்புதங்கள் எங்கே?	22
5.	பரலோகத்தில் தேவ பெலனை என் கண்கள் கண்டது!	31
6.	தப்புவிக்கும் தேவன்!	44
7.	சிங்கத்தின் வாயைக் கட்டின தேவன்!	47
8.	மறை பொருள்களை அறிவிக்கும் இயேசு!	52
9.	கர்த்தர் பெரியவர்!	59
10.	ஆரோனின் கோல்!	64
11.	காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள்!	70

அறிமுக உரை

டாக்டர் கிளிபோர்டு குமார் அவர்களின் 'என் கண்கள் கண்டவை' என்ற புத்தகத்தை தமிழக விசுவாசிகளுக்கு அறிமுகப்படுத்துவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நிச்சயமாகவே இந்தப் புத்தகம் அநேகருடைய விசுவாசத்தைத் தூண்டி எழுப்பும். வல்லமையான ஊழியக்காரர்களை உருவாக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை.

'தமிழ்நாட்டு ஊழியக்காரர்களுக்குள் உங்களுக்கு மிகவும் பிடித்த, பிரியமான ஊழியக்காரர் யார்?' என்று ஒருவேளை நீங்கள் என்னைக் கேட்பீர்கள் என்றால், நான் தயக்கமின்றி டாக்டர் கிளிபோர்டு குமார் என்று சொல்லுவேன். காரணம் அவரது தெய்வீக அன்பு, தாழ்மை, பரிசுத்தம், தலைமை பாராத இடைவிடாத உழைப்பு! என் ஊழிய வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணமானவர்களுக்குள் டாக்டர் கிளிபோர்டு குமார் அவர்களும் ஒருவர் ஆவார்.

என் அரசாங்க வேலையை ராஜினாமா செய்து, முழு நேர ஊழியத்திற்கு இறங்க தீர்மானித்த போது என்னுடைய வீட்டிலும், குடும்பத்திலும், என் உறவினர்கள் மத்தியிலும் பலத்த எதிர்ப்பு எழுந்தது. ஆனால் அந்த வேளையில் டாக்டர் கிளிபோர்டு குமார் அவர்கள் எனக்காக மிகவும் ஜெபித்து, என்னை மிகவும் உற்சாகப்படுத்தி, 'கர்த்தர் உங்களை நிச்சயமாக வழிநடத்துவார். ஆவியின் வரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்புவார். ஆகவே தயக்கமில்லாமல் வாருங்கள்' என்று கூறியதுமல்லாமல், என் ஊழியத்திற்கு அநேக வாசல்களையும் திறந்து கொடுத்தார்.

இந்தப் புத்தகத்தில் டாக்டர் கிளிபோர்டு குமார், தன்னுடைய ஊழியத்தில் அவர் கண்கள் கண்ட அதிசயமானவைகளை தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இது ஆயிரத்தில் ஒரு பகுதியாகும். இன்னும் அவர் அநேக ஆவிக்குரிய புத்தகங்களை எழுதும்படி தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

– **ஜெ. சாம் ஜெபத்துரை**

அத்தியாயம் 1
என் கண்கள் கண்டவை!

'எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்' – 1 யோவான் 1:1

என் கண்கள் கண்டவை எனக்கே ஆச்சரியமாகவும், விசுவாசிகளுக்கு பக்தி விருத்திக்கு ஏதுவாகவும் தேவனுடைய நாமத்திற்கு மகிமையாகவும் விளங்குகிறது. ஆகவே இதை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள்!

அப்பொழுது நான் மதுரையில் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தேன். ஒரு மாலை வேளை. ஜெப நேரத்தில் கர்த்தருடைய பாதத்தில் நான் அமர்ந்து இருந்த போது என் உள்ளம் தேவனுடைய அன்பினால் நிரம்பினது. நான் என் மனக் கண்களை கடந்த காலத்திற்கு நேராய் திருப்பினேன். கர்த்தர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளையும் சிந்தித்துப் பார்த்தேன்.

அந்த வேளையில் திடீரென்று 'என் கண்கள் கண்டவை' என்ற குரல் எனக்குள் மென்மையாய் ஒலித்தது. கர்த்தர் என்னோடு கூட பேசுகிறதை உணர்ந்தேன். ஊழியத்தில் தேவன் எனக்குக் கொடுத்த அற்புதமான அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்படி ஆவியானவரால் ஏவப்பட்டேன். நான் அப்படி எழுதினால், அது அநேகரை விசுவாசத்திலே உறுதிப்படுத்தும், அவர்களுக்கு பிரயோஜனமாய் இருக்குமென்று ஆவியினால் உணர்த்தப்பட்டேன்.

'நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாம லிருக்கக் கூடாதே!' – அப்.4:20

கர்த்தர் என்னைக் கொண்டு செய்த மேன்மையான காரியங்களை ஒவ்வொரு விசுவாசிகளின் மூலமாகவும் செய்ய வல்லமையுள்ளவராக இருக்கிறார். **'விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன. என் நாமத்தினாலே பிசாசுகளைத்**

துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள். சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது, வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்' என்றார் – மாற் 16:17,18.

இதில் சொல்லப்பட்ட அத்தனை அதிசயங்களையும் அற்புதங் களையும் கர்த்தர் என்னுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் நிறைவேற்ற வல்லமையுள்ளவராக இருந்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென். இதே அடையாளங்களை கிறிஸ்துவை விசுவாசித்து இந்தப் புத்தகத்தை வாசிக்கிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவன் செய்ய வல்லமையுள்ளவராக இருக்கிறார். நீங்களும் விசுவாசிகளாக மாற வேண்டும் என்பதே என் ஆவல். கர்த்தர் மகிமைப்படும்படியாக இதை சமர்ப்பிக்கிறேன்.

இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது!

'உம்முடைய இரட்சண்யத்தை என்னுடைய கண்கள் கண்டது என்றான்' – லூக் 2:32. இயேசுவை, குழந்தையாக நம்முடைய கைகளிலே ஏந்தி, சிமியோன், அவரைக் கண்ணாரக் கண்டு அவருக்கு ஒரு பெயரைச் சூட்டினான். அந்தப் பெயர்தான் 'இரட்சண்யம்' என்பது! என்னுடைய இரட்சிப்பின் கர்த்தர், என்னுடைய இரட்சிப்பின் கீதமானவர் என்பது தான் அதின் அர்த்தம்! அன்று சிமியோனுடைய கண்கள் இரட்சண்யத்தைக் கண்டது போலவே, என்னுடைய கண்களும் என் இரட்சகரை நோக்கிற்று! கர்த்தர் கிருபையாய் எனக்கும் தம்முடைய இரட்சிப்பை தந்தருள வல்லமையுள்ளவராக இருந்தார். அல்லேலூயா!

என்னுடைய சொந்த ஊர் திருக்கோவிலூர். என்னுடைய திருமண வாழ்க்கையை நான் மிகவும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் ஆரம்பித்தேன். என் மனைவி ஒரு நல்ல டாக்டர். நாங்கள் சொந்தமாக எங்கள் முன்னோர்கள் கொடுத்த ஆஸ்பத்திரியை நடத்தினோம். என் கையில் 73 ஏக்கர் நிலமும் 16 வீடுகளும் எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. நான் விரும்பின எல்லாவற்றையும் நான் வாங்குவதற்கு எல்லா பொருளாதார வசதிகளும் எனக்கு இருந்தன. ஆகவே சந்தோஷமும், மகிழ்ச்சியும் உள்ள ஒரு வாலிபனாக, உலகத்தின் உல்லாசங்களை அனுபவிக்கிறவனாக, என்னுடைய ஜீவியத்தை நான் ஆரம்பித்தேன்.

ஆனால் காலங்கள் மாறக் கூடும். செல்வங்கள் மறையக் கூடும். துயரங்கள் சூழ்ந்து கொள்ளக் கூடும் என்று நான் அறியாமல் இருந்தேன். மூன்று ஆண்டுகள் வேகமாக கடந்தன.

நான் தொட்டவைகள் எல்லாம் நஷ்டமானது. நன்றாக விளைந்த என்னுடைய விளை நிலங்கள் எல்லாம் வறட்சியடைந்தன. பற்றாக்குறை பெருகினது. கடன் தொல்லை ஏற்பட்டது. எதைத் தொட்டாலும் அதில் ஆசீர்வாதம் இல்லாமற் போயிற்று.

எனக்கு ஒவ்வொன்றாக நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். குடும்பத்தில் ஏற்பட்ட பயங்கரமான பிரச்சினையையும் கடன் நெருக்கத்தையும் என்னால் சமாளிக்க முடியவில்லை. என்னுடைய மனைவி சென்னையில் பணி செய்ய போய்விட்டாள். ஆசீர்வாதமாக நடந்த ஆஸ்பத்திரி நஷ்டத்தைக் கண்டது. நான் ஒரு புறமிருக்க, குடும்பம் ஒரு புறமாகப் போனது!

என்னுடைய பக்தி வெறும் பாரம்பரிய கிறிஸ்தவனுடைய பக்தி தான்! வேதத்தை விரும்பி வாசித்ததும் இல்லை. மனம் திறந்து நான் கர்த்தரிடத்தில் ஜெபித்ததும் இல்லை. அதே நேரம் கர்த்தருடைய ஊழியக்காரரில் பலரும் எங்களுடைய வீட்டிற்கு வந்து செல்வார்கள். எங்களுடைய ஆஸ்பத்திரியிலும் ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஜெபக் கூட்டம் வைப்போம். ஊழியக்காரர்களுடைய ஜெபங்கள், பாடல்கள், சாட்சிகளையெல்லாம் கவனித்துக் கேட்பேனே ஒழிய, எனக்குள் எந்த மாறுதலும் வரவேயில்லை.

இப்படி பாரம்பரிய பேர் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜீவித்த போது ஒரு இரவு ஒரு தரிசனம் கண்டேன். அந்த தரிசனத்தில் எனக்கு முன்பாக மரித்த அநேக மனிதர்கள் உயிரோடு எழுந்து உட்கார்ந்திருப்பதைப் போல் கண்டேன். மறு பக்கத்தில் உயிரோடு இருக்கிறவர்களும் அமர்ந்து இருந்தார்கள். இரண்டு பேருக்கும் மத்தியிலே நான் என்னுடைய கையிலே ஒரு மைக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு பாடலைப் பாட ஆரம்பித்தேன். அந்தப் பாடல் இன்றைக்கும் என் நினைவில் தெளிவாக இருக்கிறது. அதை நான் கேசட்டிலும் பாடியிருக்கிறேன். அந்த சொப்பனத்தில் கிடைத்த புதிய பாடலை கீழே எழுதுகிறேன்.

சொப்பனம் போன்ற வாழ்வினிலே,
உம்மை அண்டினோர்க்கு ஆறுதலாய் – என் இறைவன்
உம் தரிசனம் தந்து தாங்கிக் கொள்வீர்
பாவி உம்மை தொடர்ந்தேன் – என் இயேசுவே

சரணம்

ஆற்றங்கரையோரம் அழுது நின்றேன்
என்னை ஆற்றுவார் யாரும் இல்லை என் இறைவா (யோர்தான்)

ஆயா ஆற்றைக் கடக்க துணை செய்தீரே
பாடுவேன் வாழ்நாளெல்லாம் - என் இயேசுவே

(மகிழ்ச்சி கானம் பாடல் 70)

என் தரிசனத்தில் இந்தப் பாடலை நான் பாடிய போது அங்கேயிருந்த அநேக அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் போயின. ஜனங்கள் தங்களை ஒப்புக் கொடுக்க முன் வந்தார்கள். ஒரு பெரிய எழுப்புதல் ஏற்படுவது போல் இருந்தது.

அதிகாலை நான் விழித்து எழுந்த போது என் உள்ளத்தில் அதே பாடலும், இசையும் ரீங்காரமிட்டு கொண்டேயிருந்தது. கர்த்தர் என்னை பாட்டு ஊழியங்களுக்கு ஆயத்தப்படுத்துகிறார் என்பதையும் அதன் மூலமாக நான் கிறிஸ்தவ உலகத்திற்கு அறிமுகமாவேன் என்பதையும், கர்த்தர் என்னை வல்லமையாக நிரப்பி, பிசாசின் மேலும், வியாதியின் மேலும் ஜெயமுள்ள ஊழியம் தருவார் என்பதையும் நான் அன்று உணரவில்லை!

அதைத் தொடர்ந்து அந்தப் பாடலின் இரண்டாவது அடியை நான் எழுத ஆரம்பித்த போது என் இருதயம் மிகவும் உடைந்தது. நான் செய்த எண்ணில்லாத பாவங்கள் எனக்கு முன்பாக வந்தது. இரண்டாவது சரணமாக நான் என்னுடைய உணர்விலே அந்தப் பாடலை எழுதி முடித்தேன்.

அந்த வேளை எனக்குள்ளே ஒரு பெரிய மாறுதல்! என் வாழ்நாள் எல்லாம் நான் உம்மைப் பாடுவேன் ஆண்டவரே என்று சொல்லி ஆண்டவருக்கென்று பொருத்தனை செய்தேன். ஆனால் ஜீவியத்திலோ மாறுதல் இல்லை. ஆயினும் அந்த ஒப்புக் கொடுத்தலை ஏற்றுக் கொள்ள என் ஆண்டவர் கிருபையுள்ளவராக இருந்தார். சில ஆண்டுகளுக்குள் என்னைத் தகுதிப்படுத்தினார்.

என் ஊழியத்தில் நான் அந்தப் பாடலையும் மற்ற பாடல்களையும் பிற்காலத்தில் எழும்பி நின்று பாடினபோது அநேக அசுத்த ஆவிகள் பயந்தோட ஆரம்பித்தது. ஜனங்கள் தங்களுடைய பாவ வழிகளை விட்டு விலகவும், இரட்சிக்கப்படவும் தேவன் உதவி செய்தார்.

தேவபிள்ளையே, அந்த தேவன் இன்றைக்கும் உன்னை ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். எனக்குக் கொடுத்த அனுபவங்களையும், வரங்களையும், வல்லமையையும் உங்களுக்கும் கொடுப்பதற்கு தேவன் பட்சபாதம் இல்லாதவர். தேவன் உன்னை அழைக்கும்போது அவருடைய அன்பின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து உன்னை ஒப்புக் கொடுப்பாயா? அவருடைய பொன் முகத்தை நோக்கிப் பார்ப்பாயா? அவர் பாதையைப் பின்பற்றுவாயா?

அத்தியாயம் – 2
நான் கண்டேன்!

'என்னைக் காண்பவரை நானும் கண்டேன்!' – ஆதி 16:13.

''இயேசு நின்று அவனை அழைத்து வரச் சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள்'' – மாற்கு 10:49.

கர்த்தருடைய அழைப்பைப் பாருங்கள். அன்றைக்கு தேவன் குருடனைப் பார்க்கும்படி அழைத்தார். என்னை தேவனுடைய சுவிசேஷ வெளிச்சத்தைப் பார்க்கும்படி, அறிவிக்கும்படி அழைத்தார்.

தேவனுடைய அழைப்பு என்பது பலவகையான நிலத்தில் விழுந்த விதைகளுக்கு ஒப்பாய் இருக்கிறது. கர்த்தரை ஏற்றுக் கொண்டு முன் வருகிறவர்கள் தங்களுடைய அர்ப்பணத்திற்கும், தியாகத்திற்கும், ஏற்றவாறு முப்பதும், அறுபதும், நூறுமாக பலன் கொடுக்கிறார்கள். கர்த்தருக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் கவனிக்க வேண்டிய காரியம் இது.

என்னுடைய முன்னாள் கிறிஸ்தவ வாழ்க்கையிலே நான் தூரத்திலே நின்று மற்ற ஊழியங்களை கவனிக்கிறவனாகவே இருந்தேன். எங்களுடைய ஆஸ்பத்திரியிலே நடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை ஆராதனையிலே பல வகையான ஊழியக்காரர்கள் வருவார்கள். லுத்தரன் சபையைச் சேர்ந்த ஊழியக்காரர்கள், பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த ஊழியக்காரர்கள் இன்னும் சுதேச பிரசங்கிமார்கள் வந்து கூட்டங்களை நடத்தினார்கள். அதனால் எந்த பிரயோஜனமும் ஏற்பட்டதாக நான் நினனத்ததேயில்லை.

ஒருநாள் பாஸ்டர் சாமுவேல் பொன்னையா என்ற பெயருள்ள ஊழியர் எங்கள் ஊருக்கு வந்திருந்தார்கள். முதலில் அவரை நான் ஊழியர் என்று நினைக்கவில்லை. ஒரு வியாபாரி என்று எண்ணியே அவரோடு கூட பேசிக் கொண்டு இருந்தேன். ஆனால், அவர் என்னிடத்தில் எங்கள் ஆஸ்பத்திரி திடலில் கூட்டம் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நானும் ஒன்றும் யோசிக்காமல் சம்மதம் தெரிவித்தேன். அவரோ அதை

ஒரு பெரிய கூட்டமாய் நடத்தி விட்டார். அப்பொழுது தான் அது ஒரு பெந்தெகொஸ்தே கூட்டம் என்று தெரிந்தது. சென்னையில் இருந்து பாடகர்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தார். பிரசங்கம் செய்ய வெளிநாட்டு போதகர் ஒருவர் வந்திருந்தார். அவருடைய பெயர் கலாஸ்டி ஜாங். நார்வே தேசத்தைச் சேர்ந்தவர்.

வெளி நாட்டு பிரசங்கியார் மிகவும் வல்லமையோடு கூட பிரசங்கித்தார். இயேசு சுகம் அளிக்கிறார், விடுவிக்கிறார் என்று கர்ஜனை செய்து சவால் விட்டார். அதை நான் கேட்ட போது அவருக்கு ஒரு நல்ல பிரசங்க சாமர்த்தியம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன். அந்தக் கூட்டங்கள் முடியும் வேளையில் என்னுடைய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு ஸ்திரீ ஜெபத்திற்காக மேடைக்குச் சென்றாள். அந்த ஊழியர் அவருடைய தலையிலே கை வைத்து இயேசு சுகம் அளிப்பதை விசுவாசிக்கிறாயா? என்று கேட்டார். அதற்கு அவர் ஆம் என்று சொன்னாள். உடனே அவர் அவளுக்காக ஊக்கமாக ஜெபித்தார். அவள் சத்தமிட்டு இப்பொழுது என் கண்கள் தெரிகிறது என்று சொல்லி மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தாள். எனக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் அவளுக்கு முற்றிலும் கண்கள் தெரியாத ஒரு நிலை இருந்தது. நான் அவளை சோதித்து வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க தீர்மானித்திருந்தேன். அவளின் கண்கள் இப்போது தெளிவாக தெரிந்ததும் அது என் உள்ளத்தில் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தினது.

அவளுடைய கண்கள் சுகமானதைக் கண்டு எங்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு மனிதனும் மேடைக்குக் கொண்டு வரப்பட்டான். அவனுக்கு குடல் ஏற்றம் கண்டு அறுவை சிகிச்சைக்காக மிஷன் ஆஸ்பத்திரிக்கு போக காத்து கொண்டிருந்தான். அவனை மேடைக்கு கொண்டு வந்தார்கள். அவனை அந்த ஊழியர் தூக்கி நிறுத்தினார். எனக்கு பயமாக இருந்தது. குடல் ஏற்றத்தினால் பாடுபட்டுக் கொண்டிருந்த அவனை அப்படி நிறுத்தி விட்டால் அவன் குடல் பிய்ந்து சேதமாகி விடுமோ என்று கலங்கினேன். ஆனால் அந்த போதகர் ஜெபித்து அவனை நடந்து குதிக்கச் சொன்னார். அவன் நடந்தான். அற்புதமாய்க் குதித்தான். மேடையில் வரிசையாக அற்புதங்கள் நடந்து கொண்டேயிருந்தன. இதையெல்லாம் என் கண்கள்

கண்டபோது எனக்குள் ஒரு பயமும், திகிலும், அதிர்ச்சியும், வியப்பும் மாறி, மாறி ஏற்பட்டது. இயேசு ஜீவிக்கின்றாரா? இதெல்லாம் என் கண்கள் பார்க்க நடக்கின்றதே என்று வியப்படைந்தேன்.

மூன்றாம் நாள் ஆனது. அந்தப் போதகர் இன்னும் வல்லமையாக பிரசங்கித்தார். கூட்டம் முடிந்து போதகர் எஸ்.பி. தானியலோடு அவர் புறப்பட்டார். திடீரென்று அவர் என் தலையின் மேல் தன் கைகளை வைத்து, ''ஆண்டவரே, இந்த மனிதனுடைய பெருமைகளையெல்லாம் நீக்கிப் போடுவீராக. உம்முடைய ஊழியக்காரனாய் மாற்றியருளுவீராக'' என்று ஊக்கமாக ஜெபித்தார். அந்த வார்த்தைகள் என் இருதயத்தைத் தொட்டாலும், நான் என்னை பரிபூரணமாய் கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க முடியாதவனாக உள்ளத்தைச் சற்றுக் கடினமாக்கிக் கொண்டு நான் கசப்போடு சென்று விட்டேன்.

சில நாட்களுக்குப் பிறகு நடராஜ முதலியார் தம்பதிகள் திருமணமானவுடன் என்னுடைய ஊருக்கு வந்தார்கள். என்னுடைய ஆஸ்பத்திரி திடலில் அவர் மூன்று நாட்கள் கூட்டங்களை நடத்தினார். அவர் பிரசங்கித்ததும் பாடினதும் என் உள்ளத்தையும் ஊரையும் அசைத்தது. முழு பெலத்தோடும், வல்லமையோடும் பிரசங்கித்தார். என் உள்ளம் தடுமாறியது.

என் மீட்பர் சென்ற பாதையில் நீ செல்ல ஆயத்தமா? என்ற பாடல் மிகவும் உருக்கமாயிருந்தது. கண்ணீரைப் பொங்கி வரச் செய்யும் அளவுக்கு மனதுக்கு உருக்கமாக இருந்தது. மட்டுமல்ல, அதை திரும்பத் திரும்ப பாடினபோது அந்தப் பாடல் எனக்குள்ளே, ஒரு சவாலை ஏற்படுத்தியது. 'தாகத்தாலும், பசியாலும், சோர்ந்தாலும் நிற்பாயா? அவமானங்கள் வந்தாலும் சிலுவை சுமப்பாயா?' - என்றெல்லாம் உணர்ச்சியோடு கூடப் பாடினார். கிருபை நிறைந்த அந்த பாடலுக்கு என்னை அர்ப்பணிக்க, நானோ ஆயத்தமாக இல்லை. கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆழமான அனுபவத்திற்குள் இறங்க மிகவும் தயங்கினேன். என்றாலும் அந்தப் பாடல் என்னுடைய இருதயத்தில் தொனித்துக் கொண்டே இருந்தது.

அதைத் தொடர்ந்து சகோ. ஜீவானந்தம் அவர்கள் வந்து எங்கள் இடத்தில் கூட்டங்கள் நடத்தினார்கள். அநேக அற்புதங்கள் நடந்தது. இயேசுவின் நாமத்திற்குப் பயந்து பேய்கள் பறந்தன. தொடர்ந்து சகோதரி பாப்பா சங்கர் வல்லமையாக எங்கள் திடலில்

ஊழியம் செய்தார்கள். அந்தக் கூட்டங்களில் என் மனைவி டாக்டர் ஹெலன் கர்த்தரின் அழைப்பிற்கு ஒப்புக் கொடுத்து இரட்சிக்கப்பட்டாள். அது எனக்கு விசனமாகப் போய் விட்டது. கோபப்பட்டேன்.

அதைத் தொடர்ந்து பல தேவனுடைய ஊழியக்காரர்கள் என்னோடு பழகி ஆவிக்குரிய அனுபவங்களில் என்னை நெருக்கி ஏவ ஆரம்பித்தார்கள். காலம் சென்ற போதகர் எஸ்.பி. தானியேல் அவர்களை என்னால் மறக்க முடியாது.

ஒரு பக்கம் ஆவிக்குரிய காந்த சக்தி என்னை இழுத்தது. மறுபக்கம் பாடுகள் என்னை அதிகமாகச் சூழ்ந்து கொண்டன. இதற்கிடையில் சென்னையில் எனக்கு சிநேகிதனாக இருந்த ஒரு பெரிய பணக்காரன் என் மேல் ஒரு பொய் கேஸை போட்டதுமல்லாமல், எனக்கு சூனியம் வைத்தான். எனக்கு அருமையாய் இருந்த ஒரு அதிகாரி எனக்கு விரோதமாகி அவனுக்குத் துணை நின்றார். என் மேல் நடந்த வழக்குகளில் நான் தோல்வியே அடைந்தேன். என்னுடைய சொத்து குறைய ஆரம்பித்தது. என் செல்வாக்கு குன்ற ஆரம்பித்தது. ஏதேதோ செய்து பார்த்தேன். முடியவில்லை. கர்த்தர் என்னை வளைத்து ஊழியனாக உருவாக்கிக் கொண்டிருந்தார். நானோ உணரவில்லை.

ஒருநாள் என் வாழ்க்கையில் மிகவும் சோதனையான நாள். காரணம், அன்றைக்கு எனக்கு மிக அவசரமாக ஒரு லட்சம் ரூபாய்க்கு மேலான பணம் தேவையாக இருந்தது. அன்றைக்கு எனக்கு பணம் கிடைக்காவிட்டால் என் மானமே போய்விடக் கூடிய நிலைமை. குடும்பம் சீர்குலைந்து விடும். வாழ்வதா? சாவதா? ஊரை விட்டு ஓடிவிடுவதா? தற்கொலை செய்து கொள்வதா? என்று தெரியாமல் ஒரு மத்தியான வேளையிலே தனிமையாக கண்ணீர் சிந்த ஆரம்பித்தேன். என் குடும்பத்தார் யாரும் என்னோடு கூட இல்லை. என்னுடைய வீட்டுக் காவல்காரர் மாத்திரமே வெளியில் இருந்தார். கலக்கத்தோடு கண்ணீர் சிந்தின வண்ணமாகவே அப்படியே துக்கத்தால் சோர்ந்து உறங்கி விட்டேன்.

அந்த வேளையில் என் உள்ளத்தில் ஒரு இனிமையான மெல்லிய குரல், ‘உன்னைக் கண்டழைக்கும் இயேசுவை மறந்து நீ எங்கே போகிறாய்?’ என்ற பாடல் கணீர் என்று தொனித்தது. தூக்கத்திலிருந்து எழும்பிக் கொண்டேன். அந்தப் பாடலைத்

திரும்பவும் பாட ஆசைப் பட்டேன். அந்தப் பாட்டுப் புத்தகத்தைத் தேடி, கண்டு பிடித்து ஜெப சிந்தனையோடு, ஆவியோடும், உண்மையோடும், நொறுங்கின உள்ளத்தோடும் பாட ஆரம்பித்தேன். எங்கே போவேன்? யாரிடத்தில் போவேன் என்று நின்ற வண்ணமாக அழுது ஜெபித்தேன்.

என்னைக் கண்டழைத்த இயேசு என்னைக் கைவிடவில்லை. அன்று என் மனதில் இருந்த பயங்கரமான கலக்கம் எப்படி என்னை விட்டு நீங்கியது என்று எனக்கே தெரியவில்லை. தெய்வீக சமாதானத்தால் என் உள்ளம் நிரம்பினது. கர்த்தருக்குள் புற தைரியம் கொண்டேன். அந்த பிரச்சனையும் நான் பயப்பட்டது போல் இல்லாமல் எப்படியோ மாறினது. என் வாழ்க்கையையும் மாற்ற காரணமாக இருந்தது.

இதை வாசிக்கும் தேவனுடைய பிள்ளையே, ஒரு நிமிடம் இயேசுவை நோக்கிப் பார். உன்னைக் கண்டழைக்கும் அவருடைய அன்பை நோக்கிப் பார். உனக்காக சிலுவையிலே இரத்தம் சிந்தின அவரை மறந்து நீ எங்கே போவாய்? அவரையல்லாமல் வேறு ஆறுதலின் இடம் எங்கே இருக்கிறது? மனித அறிவில் முடியாத சூழ்நிலையில் சிக்கி இருக்கும் நிலையில் உன்னைக் கண்டு அழைக்கும் இயேசுவைக் காண ஒப்புக் கொடுப்பாயா?

''நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை'' – (புலம்பல் 3:22) ஆமென்!

அத்தியாயம் - 3

திகைத்திடும் போது!

'இயேசு கடலின் மேல் நடந்து அவர்களிடத்தில் வந்தார்' - மத் 14:25.

வாழ்க்கையின் பாதையில் பல திகைப்புகள், போராட்டங்கள், என்ன நடக்குமோ என்று அறியாத பல விதமான சூழ்நிலைகள் ஏராளமாய் வரக் கூடும். நாம் சோர்ந்து போகும் போது திகில் நம்மை சூழ்ந்து கொள்ளக் கூடும். அந்த வேளைகளில் எல்லாம் நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒருவரே நமக்கு ஆறுதலும், தேறுதலும், சமாதானமுமாய் இருக்கிறார்.

11 நாளாகமம் 20 ஆம் அதிகாரத்தில் யோசபாத்திற்கு விரோதமாக அம்மோன் புத்திரரும், மோவாபியரும் இன்னும் ஏராளமான ஜனங்கள் எதிர்த்து வந்து நின்றார்கள். யோசபாத் பயந்தான். ஆனால் கர்த்தரைத் தேட ஒருமுகப்பட்டான். அவன் ஜெபித்த ஜெபம் 11 நாளா 20:12-இல் எழுதப்பட்டுள்ளது. இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்கு பெலன் இல்லை. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான். தேவன் அவனை விடுதலையாக்கின விதத்தைச் சற்று வேதத்தை எடுத்து வாசித்துப் பாருங்கள். இந்த வேத பகுதி என் வாழ்க்கைக்கு ஆசீர்வாதமாக இருந்தது.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நான் திகைத்திடும் போது, என் கண்கள் கண்ட கர்த்தருடைய அற்புதங்களை உங்களோடு கூட பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அது உங்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்தும். கர்த்தரை முற்றிலும் சார்ந்து கொள்ள உங்களுக்கு உறுதியாய் இருக்கும்.

அநேகர், என்னுடைய குடும்பத்திற்கு பில்லி சூனியம் வைத்து, எங்களுக்கு விரோதமாக பிசாசை ஏவி விட்டார்கள். அந்த ஏவலின் நிலைமையை நான் உணர்ந்தேன். பிசாசுகள் கிரியை செய்வதை நான் அறிந்தேன். ஆனாலும் அதில் ஜெபம் பெறும் வாழ்க்கையை நான் கண்டு கொள்ளவில்லை. வேத வசனங்கள் எனக்கு அதிகமாய் தெரியாமல் இருந்தது. 1 யோவான் 5:18இல் உள்ள

வாக்குத்தத்தை வாசித்துப் பாருங்கள். **'தேவனால் பிறந்தவன் எவனும் தன்னைக் காக்கிறான். அவன் பாவம் செய்யான் என்று அறிந்திருக்கிறோம். பொல்லாங்கன் அவனைத் தொடான்'**. அசுத்த ஆவியினால் தாக்கப்பட்டு திகைப்போருக்கு இந்த வசனம் மிகவும் பலத்த துருகமாகவும் அரணுமாகவும் அமைந்திருக்கிறது.

இப்படிப்பட்ட வாக்குத் தத்தங்களை நான் முன்பு அறியாதவனாக இருந்தேன். யாராகிலும் பேய், பிசாசு என்று சொன்னால் நான் அவர்களை கேலி, பரியாசம் செய்வது உண்டு. நான் அதை நம்பினது இல்லை. என் குடும்ப சொத்துக்கள் அழிவதற்கு காரணம் பில்லி சூனியமும் சாத்தானின் போராட்டங்களும் தான் என்பது அன்று எனக்கு புரியவில்லை. அவைகளில் நான் நம்பிக்கை இல்லாமல் இருந்தாலும் சத்துரு என்னை பின் தொடர்ந்து கொண்டே வந்தான்.

இந்த சத்துருவினுடைய போராட்டங்களினால் இரவு வேளைகளில் எனக்கு பயங்கரமான சொப்பனங்கள் உண்டாகும். அசுத்த ஆவிகள் நேருக்கு நேராக என்னை பயமுறுத்தி கலக்குவதை உணர்ந்தேன். அவனை ஜெயிக்க என்னிடம் வல்லமையோ பரிசுத்தமோ இல்லை. பயங்கர உருவங்கள் இரவு 12 மணிக்கு என் முன் தோன்றும். தூக்க மாத்திரைகள் மருந்துகள் எடுத்தாலும் இரவு 12 மணிக்கு திகில் கொண்டு எழுந்து விடுவேன்.

ஆகவே அநேக ஆவிக்குரிய கூட்டங்களுக்குச் சென்று அங்குள்ள பிரசங்கங்களை எல்லாம் கவனமாய்க் கேட்க ஆரம்பித்தேன். பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை வாஞ்சித்து கதறினேன். ஒரு பக்கம் உலகம் என்னை இழுத்தது. மறு பக்கம் கர்த்தரை விட்டால் வேறு வழி இல்லையே என்ற நிலை!

ஒரு நாள் மத்தியான வேளையில் என்னுடைய சகோதரனுடைய வீட்டிற்குச் சென்று மாடியில் படுத்து மேலே கூரையைப் பார்த்து சிந்தித்த வண்ணமாய் இருந்தேன். திடீரென்று அந்த வீட்டு ஓடுகளில் ஒன்று பெயர்ந்து அந்தரங்கத்தில் தொங்கியது. அது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், அதிசயத்தையும் கொடுத்தது. அதைக் கூர்ந்து பார்க்கும்படி எனது தலையை உயர்த்தினேன். அந்தரங்கத்தில் தொங்கிய அந்த ஓடானது திடீரென்று வேகமாக யாரோ வீசி அடிப்பதைப் போல என்னுடைய தலையை நோக்கி வந்தது. அந்த எதிர்பாராத வேளையில் என் அருகில் இருந்த வேதாகமத்தை கையில் பிடித்துக் கொண்டு அந்த ஓடு என்னுடைய தலையில் விழுந்து விடாமல் இருக்கும்படி விலகி ஓடினேன். அது நான் எந்த இடத்தில் தலையை வைத்துப் படுத்திருந்தேனோ அந்த

இடத்தில் அந்த ஓடு தலையணை மேல் வந்து பயங்கரமாய் விழுந்தது. அதைப் பார்த்து எனக்குள் ஒரு நடுக்கம் வந்தது. சத்துருவாகிய பிசாசு என்னைக் கொல்ல முயற்சிக்கிறான் என்பதைத் தெளிவாய் உணர்ந்து கொண்டேன். இயேசு கிறிஸ்துவினிடம் அடைக்கலம் புகுவதைத் தவிர, அவரையே நெருங்கி கிட்டச் சேர்ந்து அவருடைய கையில் என்னை ஒப்புக் கொடுப்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

அதை அடுத்து எனது தொண்டையில் இடது பக்க தைராய்டு சுரப்பியில் வீக்கம் கண்டது. சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் போய் பரிசோதனை செய்து பார்த்த போது அவர்கள் புற்று நோய் என்று சொல்லி விட்டார்கள். புற்று நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு வைத்தியம் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனக்குள் ஒரு மரண பயம் வந்தது. ஒரு பக்கம் பில்லி சூனிய ஏவுதல்களால் பேயின் போராட்டம், மறுபக்கம் மரணத்துக்கேதுவான வியாதி. அடுத்த பக்கம் பயங்கரமான பணப் பிரச்சினைகள், கடன் தொல்லைகள். என் மனைவி துறைமுகத்திலுள்ள ஆஸ்பத்திரியில் பணியாற்றி சம்பாதித்த பணம் எங்கள் குடும்பத்திற்குப் போதவில்லை. நான்கு குழந்தைகளை வைத்து பராமரிக்க எங்களால் முடியவில்லை. கடன் தொல்லைகள் மிகவும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. என்னாலும் வேலை செய்ய முடியவில்லை. இரவும் பகலும், திகைப்பும், திகிலுமே என்னுடைய பங்காய் இருந்தது. தேவ பிள்ளையே, ஒருவேளை இப்படிப்பட்ட அனுபவங்களின் வழியாக நீயும் கடந்து வருகிறாயோ? நிச்சயமாகவே இயேசுவிடத்தில் உனக்கு விடுதலை உண்டு. அவர் உன்னுடைய நிலையில் அற்புதத்தைச் செய்ய வல்லவராய் இருக்கிறார். தேவனைத் தேடுகிறதற்கு இதுதான் தக்க சமயம்! முற்றிலும் நீ உன்னை கர்த்தருக்கென்று அர்ப்பணிப்பாய் என்றால், அவர் உன்னைத் தூக்கி எடுத்து அற்புதங்களைச் செய்ய வல்லவராய் இருக்கிறார்.

என்னுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட சோதனைகள் சூழ்ந்த போது கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக் கொண்டேன். வேதத்தை பிரியமாய் அதிகமாய் வாசித்தேன். எங்கெல்லாம் முழு இரவு ஜெபம் நடந்ததோ அங்கெல்லாம் வாஞ்சையோடு ஓடினேன். எவைகளையெல்லாம் விட்டு விலக வேண்டுமோ அவைகளையெல்லாம் விட்டு விலகினேன். நான் கர்த்தரைத் தேட ஆரம்பித்தேன். கர்த்தர் என்னை உறுதியாய் பெலப்படுத்தினார். அவர் எனக்குத் தரிசனம் கொடுக்க சித்தம் கொண்டார்.

வேதம் சொல்கிறது. **'சகல மனிதரே கேளுங்கள். நீங்கள் கர்த்தரோடு இருந்தால் அவர் உங்களோடு இருப்பார். நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டு விட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டு விடுவார்.'** – 11 நாளா 15:2

முதல் தரிசனத்தில் ஒரு கரடு முரடான மரத்தினால் செய்யப்பட்ட சிலுவையை கண்டேன். இரண்டு கரங்கள் அந்த சிலுவையை என்னிடத்தில் எடுத்து கொடுத்தது. அந்த சிலுவையைக் கண்ட நான் மிகவும பயந்து விட்டேன். நடு இரவு விழித்தெழும்பினேன். என் உறவினரிடத்தில் ஓடிப் போய் நான் இப்படிப்பட்ட சிலுவையைக் கண்டேன் என்றேன். அவர் என்னை ஜெபிக்கும்படி சொன்னார். எனக்கு இருக்கும் சிலுவையே போதும் என்னுடைய வேதனைகளை என்னால் தாங்க முடியவில்லை. இனி மேற் கொண்டு இன்னொரு சிலுவை வேண்டாம் ஆண்டவரே, சிலுவை வேண்டாம் என்று கெஞ்சி ஜெபித்தேன். சிலுவையின் மேன்மை அறியாதவனாக இருந்தேன்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு மீண்டும் ஒரு தரிசனத்தை கண்டேன். இந்த தரிசனத்தில் கரடு முரடான சிலுவை அல்ல. நேர்த்தியாய் நல்ல முறையில் மரத்தில் இழைத்து செய்து இருந்த ஒரு சிலுவையைக் கண்டேன். என்றாலும் அது சிலுவையாய் இருந்த படியினால் அதை நான் உற்றுப் பார்த்து விட்டு ஆண்டவரை நோக்கி, ''ஆண்டவரே எனக்கு சிலுவை வேண்டாம்'' என்று கெஞ்சினேன்.

இந்த வேளையில் நான் புற்று நோயால் பாதிக்கப்பட்டு சரீரம் எல்லாம் உருக்குலைந்த நிலைமையிலே என்ன சம்பவிக்கும் என்று அறியாத ஒரு சூழ்நிலையில் இருந்தேன். சிலுவைக் காட்சியை ஒதுக்கிவிட்டு இரவு 12 மணிக்கு தூங்க முயற்சித்த போது, பயங்கரமான பயமுறுத்துகிற சக்திகள் என்னை நோக்கிக் கொண்டு வந்ததை நான் கண்டேன். அதைக் கண்டு இன்னும் பயந்து 'ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்' என்று கதறி கண்ணீரோடு வேண்டிக் கொண்டேன். அந்த வேளயில் கர்த்தர் எனக்கு மூன்றாவது தரிசனத்தைக் கொடுத்தார். அதுவும் ஒரு சிலுவையின் தரிசனம் தான். யாரோ ஒரு பரிசுத்தமான ஒருவர் நான் படுத்திருந்த இடத்திலிருந்து என்னை அழைத்துக் கொண்டு போய் ஒரு சிலுவையைக் காண்பித்து அதை எடுத்துக் கொள் என்றார். அந்தச் சிலுவையை நோக்கிப் பார்த்தேன். அது பொன்னாலும், வெள்ளியினாலும், செய்யப்பட்டிருந்தது. வெண்மையும், நீலமுமான

விலையுயர்ந்த கற்கள் அதில் பதிக்கப்பட்டு இருந்தது. என்னை நடத்திச் சென்றவர், அதை எடுத்துக் கொள் என்று அன்போடு சொன்னார்.

அப்பொழுது கல்வாரியின் அன்பு என் இருதயத்தை உடைத்தது. ஆண்டவரின் அன்பை உணர்ந்தேன். 'எனக்காக என் தேவன் ஏற்கனவே சிலுவை சுமந்தாரே! அந்த சிலுவை எத்தனை பாரமானதாக இருந்திருக்கும்! அப்படிப்பட்ட ஆண்டவரின் சிலுவையை நான் ஏன் சுமக்கக் கூடாது? கர்த்தர் இப்பொழுது கொடுத்திருக்கும் சிலுவையோ, விலையேறப் பெற்றதாக இருக்கிறதே? அதையே சுமப்பேன்' என்று தீர்மானித்தேன். 'ஆண்டவரே, உம்முடைய சிலுவையை நான் சுமப்பேன்!' என்று அர்ப்பணித்தேன். அந்த நாள் என் பாவங்கள் மன்னிப்பு பெற்ற நாள். அந்த நாள் நான் இரட்சிப்பு அடைந்த நாள். அந்த நாள் தேவ அன்பு அளவில்லாமல் என் உள்ளத்தை நிரப்பின ஒரு நாள். இவர்களுக்கு மன்னியும் என்று என் இயேசுவின் இரக்கம் என்னை மாற்றிய நாள்! அல்லேலூயா!

அதை அடுத்து வேலூரில் நடந்த ஒரு கூட்டத்தில் நான் மாற்கு 16:16இன் படி முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன். அன்று எனக்குக் கிடைத்த சந்தோஷம் இன்று வரையிலும் என்னை விட்டு நீங்கவும் இல்லை. கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நான் நீதியை நிறைவேற்றினேன்.

அதைத் தொடர்ந்து புற்று நோயின் சிகிச்சைக்காக வேலூரிலுள்ள சி.எம்.சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அன்று அநேக சோதனைகள் நடத்தி அறுவை சிகிச்சை செய்ய தீர்மானித்திருந்தார்கள்.

இந்த நோயினால் நாளுக்கு நாள் என்னுடைய பலம் குறைய ஆரம்பித்தது. தொண்டையில் அந்த புற்று நோய் வந்த படியினால் என்னுடைய குரலே மாறிப் போனது. தொண்டையிலுள்ள நரம்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டு விட்டன என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. என்னுடைய அருகிலே அவ்விதமான புற்று நோய்களோடும் கூட இரண்டு பேர் ஆபத்தான நிலைமையில் ஆபரேஷனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். நான் பிழைப் பேனா இல்லையோ என்று எனக்குத் தெரியவில்லை. கர்த்தரை நோக்கி கண்ணீரோடு கூட, 'ஆண்டவரே, நீர் எனக்கு ஜீவன் தந்தால் உமக்கு ஊழியம் செய்வேன்' என்று பொருத்தனை செய்தேன். என்னுடைய தொண்ட நரம்பு பாதிக்கப்பட்டிருப்பதால்

இனி பேசக் கூட முடியாது என்றார்கள். எங்கள் மூன்று பேருக்கும் ஒரே நாளில் ஆபரேஷன் நடந்தது! முடிவில் கர்த்தர் எனக்கு பரிபூரணமான விடுதலை கொடுத்தார். மற்ற இருவரும் இந்த நோய்க்குப் பலியாகி மரித்துப் போனார்கள். ஆபரேஷனுக்குப் பிறகு பேச முடியாது என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் ஒரு மாதத்திற்குள்ளாக கர்த்தருக்குப் பாட்டுப் பாடி சபையிலே சாட்சி சொல்ல என் தேவன் அற்புதத்தை செய்ய வல்லமையுள்ளவராக இருந்தார். என்னுடைய திகைப்பை மிகுந்த களிப்பாய் மாற்றினார். கர்த்தருடைய ஊழியத்தைச் சாட்சியோடு மாத்திரம் செய்ய ஆரம்பித்தேன்.

இதை வாசிக்கிற அருமையான தேவ பிள்ளையே, உன் வாழ்க்கையிலே திகைப்பின் அனுபவம் வரும்போது திகில் உன்னை சூழ்ந்து கொள்ளும் போது பயப்படாதே. கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவரில் நம்பிக்கை உடையவனாய் இரு. தானியேலின் வாழ்க்கையில் திகைப்பு கொடுக்கக் கூடிய காரியங்கள் நடந்தது. யோசேப்பு திகில் கொண்டு திகைத்தான். தாவீது மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தான். மோசேயும் கூட திகைத்தான். ஆனால் அவர்கள் எல்லோரும் கர்த்தரை நோக்கிப் பார்த்து பிரகாசம் அடைந்தார்கள். அவர்களைப் பிரகாசிப்பித்த தேவன், உன்னுடைய தேவன் இன்றைக்கும் ஜீவனுள்ளவராகவே இருக்கிறார். இப்போதே அவருடைய வல்லமை உன் மேல் இறங்கட்டும். இப்போதே அந்த திகிலின் சூழ்நிலையை மாற்றி தேவ சமாதானத்தினால் உன்னை நிரப்புவார். இப்பொழுதே கல்வாரியை நோக்கிப் பார்ப்பாயானால் கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். இதை வாசிக்கும் போது அவர் வல்லமை உன்னைத் தொடுவதாக. அல்லேலூயா!

திகைத்திடும் போது தேவ தூதர்கள் – என்னை
தாங்கி நடத்திட அருளுகின்றார்
முடிவு வரை என்னைக் காத்திடுவார்
என்றும் மாறாத இயேசு இன்றும் ஜீவிக்கின்றார்!
மறுபிறப்படைந்தேனே

(மகிழ்ச்சி கானம் பாடல் எண் 43)

அத்தியாயம் – 4
அற்புதங்கள் எங்கே?

'எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?' – நியா 6:13

அந்த நாளை என்னால் மறக்கவே இயலாது. ஏனென்றால் அந்த நாளில் தான் தேவன் என்னுடைய கைகளில் ஊழியத்தின் திறவு கோலைக் கொடுத்தார்.

இலங்கையிலிருந்து லில்லி என்ற ஒரு சகோதரி சென்னைக்கு வந்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் இலங்கையிலிருந்து கொஞ்சம் துணிமணிகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும், அவர்களைப் பார்த்துவிட்டு வரலாம் என்றும், என்னுடைய மனைவி என்னை அழைத்தாள். ஆகவே சில துணிகளை வாங்கும் படி நாங்கள் இலங்கையிலிருந்து வந்த அந்த சகோதரி தங்கியிருந்த வீட்டிற்கு போனோம். நாங்கள், துணிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் போது தானே திடீரென்று அந்தச் சகோதரி பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, பேச ஆரம்பித்தார்கள். 'என் மகனே, நீ என்னுடைய முழு நேர ஊழியத்திற்கு உன்னை ஒப்புக் கொடுத்தாய். ஆனாலும், இதுவரை என்னுடைய ஊழியத்திற்கு வராமல் போனாய். இதோ, நான் உன்னை கரம் பிடித்து நடத்துவேன். நீ என்னுடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும். ஓய்வில்லாத ஊழியத்தை நான் உனக்குக் கொடுத்தேன். மட்டுமல்ல. இதோ பிரபுக்களின் இருதயத்தைத் திறக்கிற திறவு கோல்களை நான் உன் கைகளில் கொடுத்தேன். ஓய்வில்லாமல், நீ ஊழியம் செய்வாய். நீ புறப்பட்டுப் போ' என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். இது எனக்கு அதிசயமாக இருந்தது. ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தது அவர்களுக்குத் தெரியாது. அன்று முதல் ஊழியங்களுக்காகக் காத்திருந்தேன்.

என்னுடைய ஊழியத்தை முதலில் பாடல் ஊழியமாக ஆரம்பித் தேன். ஆம், சில புதிய பாடல்கள் எழுதினேன். மலையாளத்தில் சகோதரன் ஜெ.வி. பீட்டர் அவர்களுடைய பாடல்களை தமிழ்ப்படுத்தினேன். எனக்கு வாத்தியக் கருவிகளை மீட்டுவதற்கு சில வாலிபப் பிள்ளைகள் முன் வந்தார்கள். நான் கர்த்தருடைய பாடல்களை பாடி சாட்சி கொடுத்த போதுதான் பரிசுத்த ஆவியானவர்

அநேகர் மேல் இறங்குவதையும் பெலப்படுத்துவதையும் பார்த்தேன். அநேக அசுத்த ஆவிகள் ஓடுகிறதையும் கண்டேன். கர்த்தருடைய கிரியை வல்லமையாக இருந்தது. மாற்கு 16:18இல் கூறியபடி கர்த்தர் கூட இருந்து கிரியை நடப்பித்து நடந்த அடையாளங்களாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.

1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாகர்கோவிலில் இந்திய தேவ சபையின் பொது கன்வென்ஷனில் பாடல்களைப் பாடுவதற்காக நான் அழைக்கப்பட்டேன். என்னுடைய ஊழியம் பாடல் பாடுவதாக மாத்திரம் இருந்தது. என்றாலும், நான் அங்கே இறங்கின போது எல்லா போதகர்களும் ஒரு மனமாக வரவேற்பு தந்தார்கள். எனக்கு ஏன் என்று புரியவில்லை.

அப்பொழுது தலைமை போதகராயிருந்த நவமணி அவர்கள் என்னைப் பார்த்து டாக்டர் குமார், இந்தக் கன்வென்ஷனில் பேச வேண்டிய இரண்டு அமெரிக்க மிஷனரிமார்களும் வரவில்லை. அவர்கள் இருவரும் ஏன் வரவில்லையென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, நீங்கள் தான் பேச்சாளராக இருந்து தேவ செய்தியை கொடுக்க வேண்டும். ஆகவே தயவு செய்து மறுக்காதீர்கள் என்றார்கள். நானும் என்னை அறியாமல் சரி என்று சம்மதம் தெரிவித்தேன். பரிசுத்தாவியானவர் ஒரு மனிதனை ஆயத்தப்படுத்தும் விதத்தைக் கவனித்துப் பாருங்கள்.

பெரிய கன்வென்ஷனில், அதிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலில் மிகவும் படித்த வேத அறிவுள்ள விசுவாசிகளின் மத்தியில் பிரசிங்கிப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை நினைத்து மிகவும் பயப்பட்டேன். மேடை ஏறும் போது கர்த்தர் என்னோடு கூட பேசின வசனம் சங் 119:92 ஆகும். **'உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், நான் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்'** என்பதே.

அந்த வசனத்தைக் கொண்டே நான் மேடையிலே தைரியமாய் ஏறி சில பாடல்களைப் பாடிவிட்டு, என்னுடைய சாட்சியை பகிர்ந்து கொண்ட பின்பு, இந்த வேத வசனத்தை விளக்கி அவர்களுக்கு பிரசங்கித்தேன். நான் பேசப் பேச ஆவியானவர் நான் பேச வேண்டியதையெல்லாம் எனக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டே வந்தார். ஆவியானவர் பிலிப்பின் மூலம் கந்தாகேயில் மந்திரிக்கு போதித்தது போல் எனக்கு இன்றும் போதிக்கிறார்.

நான் பேசி முடிக்கும் போது ஓர் அவசரச் சீட்டு என்னுடைய மேடைக்கு வந்தது. அந்தச் சீட்டை திறந்து பார்த்தேன். அதில் ஒரு சகோதரி நாகர்கோவிலில் உள்ள டாக்டர் ஜெயசேகரன்

ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலைமையில் இருப்பதாகவும் கூட்டம் முடிந்தவுடன் ஜெபிக்க வரவேண்டும் என்றும் எழுதியிருந்தது.

நான் தேவ சமூகத்திலே ஜெபித்துவிட்டு, கூட்டங்கள் முடிந்த வுடன் அந்தச் சகோதரியைப் பார்க்கப் போனேன். நான் போனபோது, அந்த சகோதரி சுய நினைவு இல்லாமல் படுத்திருந்தார்கள். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்து எனக்கு பழக்கமில்லை. நான் தேவாவியானவருடைய ஒத்தாசை யோடு கூட மாற்கு 16:17, 18 ஆகிய வசனங்களை வாசித்தேன். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என்று கர்த்தர் கொடுத்த வாக்குத் தத்தங்களை உறுதியாக பற்றிக் கொண்டு ஊக்கமாய் ஜெபித்தேன்.

அப்பொழுது கர்த்தர் அந்த சகோதரிக்கு இருக்கும் வியாதி என்ன வியாதி என்பதை வெளிப்படுத்தினார்.

அந்த வியாதியைச் சொல்லி, கர்த்தருடைய வாக்குத் தத்தங்களைப் பற்றிக் கொண்டு கர்த்தர் நிச்சயமாகவே சுகம் தருவார் என்று உறுதியாகக் கூறினேன். அவர்களோ சுய நினைவில்லாமல் இருந்தார்கள். நானோ அவர்கள் சுகமடைவார்கள் என்று உறுதி கூறிவிட்டு வந்தேன்.

இரவு என்னுடைய அறைக்கு வந்தபோது கர்த்தர் உண்மையாக என்னோடு பேசினாரா? நான் அந்த சகோதரிக்கு குறிப்பிட்டுச் சொன்ன வியாதி சரிதானா? கர்த்தர் உண்மையாகவே சுகப்படுத்துவாரா? என்ற சந்தேகங்கள் என்னை ஆட்கொண்டது. அப்பொழுது மாற்கு 9:23, 24 ஆகிய வசனங்கள் என்னுடைய ஞாபகத்திற்கு வந்தன.

''**நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்**' என்பதே அந்த வசனம் கர்த்தர் மேல் பாரத்தைப் போட்டு விட்டு தூங்கி விட்டேன்.

தேவபிள்ளையே, பல வேளைகளில் உனக்கு சந்தேகங்கள் வரும்போது, இந்த வசனங்களை மீண்டும், மீண்டும் உபயோகப் படுத்துவாயாக. ''**ஆண்டவரே, என்னுடைய அவிசுவாசம் நீங்கும்படி செய்யும்**'' என்று விசுவாசத்தோடு கூட கண்ணீரோடு மன்றாடுவாயாக. அப்பொழுது கர்த்தர் உன் அவிசுவாசத்தை யெல்லாம் நீக்கி அற்புதத்தைச் செய்தருளுவார்' (மாற்கு 9:24)

காலையிலே அந்த சகோதரியின் குடும்பத்தார் எனக்கு மீண்டும் வாகனத்தை அனுப்பி, இன்னொரு முறை வந்து ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். எனவே, நான் அவர்களைக் காணச் சென்றேன்.

எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. என்னவென்றால் அவர்கள் பரிபூரண சுகத்தோடு எழுந்து இருந்தார்கள். அந்த சகோதரி சொன்னார்கள். 'ஐயா, நேற்று இரவு நீங்கள் வேதத்தை திறந்து வாசித்த போது, வானத்திலிருந்து தேவ தூதனைப் போல் யாரோ ஒருவர் இறங்கி வந்து என்னைத் தொட்டார். நான் உணர்வடைந்தேன். வேதத்தை வாசித்தவர் யார் என்று அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறேன். ஆகவே உங்களை அழைத்தேன்' என்றார்கள்.

அவர்கள் சொன்ன சாட்சி என் இருதயத்தைப் பெலப்படுத்தியது. என் விசுவாசம் மிகவும் உறுதிப்பட்டது. கர்த்தருடைய கிருபையினால் கருத்தோடு வேதத்தை வாசித்து, ஜெபிக்கும் போது, கர்த்தர் தம்முடைய தேவ தூதர்களை அனுப்பி அற்புதத்தைச் செய்கிறார் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டேன். கண்ணீரோடு துதித்தேன். கர்த்தர் கொடுத்த இந்த பரிபூரணமான சுகம் எனக்கு விசுவாசத்தையும் மகிழ்ச்சியையும் கூட்டித் தந்தது. **'என் கைகளைப் போருக்கும். என் விரல்களை யுத்தத்திற்கும் பழக்கி வைக்கின்ற தேவன் அவர்' – சங். 144:1.**

அன்று முதல் என் ஜெபத்தில் தேவனை நோக்கி தேவனே உம்முடைய தேவ தூதர்களை அனுப்பும் என்று ஜெபிக்கலானேன். அன்று தானியேலின் ஜெபத்தைக் கேட்டு, சிங்கங்களின் வாயைக் கட்ட தேவ தூதனை அனுப்பின ஆண்டவர். இன்றைக்கும் நம்முடைய ஜெபங்களைக் கேட்டு வேத தூதர்களை அனுப்ப ஆவலாக இருக்கிறார். நான் இந்த அனுபவத்தைப் பலமுறை ருசித்திருக்கிறேன்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு இரவில் தரிசனங்களில் அநேக தேவதூதர்கள் என்னைச் சந்தித்திருக்கிறார்கள். எனக்குப் பாடல்கள், இராகங்கள் சொல்லிக் கொடுக்கவும், வசனங்கள் கற்றுக் கொடுக்கவும் கர்த்தர் தம்முடைய தூதர்களுக்கு கட்டளைக் கொடுத்துக் கொண்டு வருகின்றார்.

இந்த அனுபவம் என்னுடைய சொந்த வாழ்க்கையில் மாத்திரமல்ல. நான் யார் யாரோடு நெருங்கிப் பழகினேனோ அவர்கள் வாழ்க்கையிலும் கூட அற்புதங்களைக் காண நெருக்கி ஏவினது. உங்களுக்கு இந்த அனுபவம் வேண்டுமா? மத் 5:8, எபி 1:14 வாசித்து ஆயத்தப்படுத்துங்கள்.

அற்புதங்கள் எங்கே? எங்கள் முற்பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? என்று தூதனோடு கேட்ட சிமியோனைப் போலவே நானும் தேவனிடத்தில் உறுதியாய்க் கேட்கலானேன்.

எலியாவின் தேவன் எங்கே? யோர்தானை பின்னிட்டுத் திரும்பப் பண்ணுகிறவர் எங்கே? என்றெல்லாம் நான் உறுதியாக கேட்டு ஜெபித்த போது கர்த்தர் அற்புதங்களை நிகழ்த்த வல்லமையுள்ளவராக இருந்தார்.

இந்த ஊழியத்தின் மூலமாக வியாதிகள் குணமாவது மாத்திரமல்ல. ஆணியங்கள் உடைந்தன. மந்திர வாதங்கள் அழிந்து போயின. மந்திரவாதிகள் எதிரே நிற்கக் கூடாதபடி கர்த்தரின் வல்லமை அபரிமிதமாய் வெளிப்பட்டது. கர்த்தர் அற்புதமாய் பண நெருக்கடிகளையெல்லாம் சந்தித்தார். தேவ தரிசனங்களை ஏராளமாய்க் கொடுத்தார்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போதே, ஒரு தரிசனத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்தார். சென்னையிலே பிரசித்தி பெற்ற பாங்க் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு மனிதரை ஒன்றரை மாதங்களாக காணவில்லை. அவரை எவ்வளவோ தேடிப் பார்த்தார்கள். ரேடியோவிலும், டி.வி.யிலும் விளம்பரம் கொடுத்துப் பார்த்தார்கள். ஆனால் அவரோ கிடைக்கவில்லை. ஆகவே, ஒருவேளை அவர் மரித்துப் போயிருக்கலாம் என்று தீர்மானித்து விட்டார்கள்.

ஒரு செவ்வாய்க் கிழமை அன்று அவர் மனைவி மாலை வேளையில் என்னைப் பார்க்க வந்தார்கள். நான் அந்தச் சகோதரியைப் பார்த்து, ''சகோதரியே தேவன் இன்றைக்கும் அற்புதத்தை செய்ய வல்லவர். உன்னுடைய கணவன் மரிக்கவில்லை. மூன்று நாட்களுக்குள் கர்த்தர் அற்புதத்தைச் செய்வார். வந்தவுடன் நீ அவரை என்னிடத்தில் அழைத்துக் கொண்டு வருவாய்' என்று சொல்லி ஜெபித்தனுப்பினேன்.

சரியாய் மூன்று நாட்கள் கடந்து சென்றது. மாலை 6 மணிக்கு என் வீட்டிற்கு முன் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதிலிருந்து காணாமல் போன அந்த சகோதரன் கீழே இறங்கினார். அவர் மனைவியும் கூடவே வந்திருந்தார்கள்.

அவருக்காக மூன்று நாட்களுக்கு முன்பு நான் சென்னையிலே ஜெபித்த போது, அவர் மேலிருந்த ஒரு பொல்லாத ஆவி அவரை அலைக்கழித்து, அவரை விட்டு விலகிச் சென்றது. அந்தப் பொல்லாத ஆவிதான் அவர் நினைவை மாற்றி அவரை பாண்டிச்சேரியில் முதலாவது கொண்டு போய் வைத்திருக்கிறது. ஜெப நேரத்தில் அந்த ஆவி விலகிப் போன படியினால், அவர் சுய நினைவடைந்தவராய் சென்னைக்குத் திரும்பி வந்தார். கர்த்தர் மகிமைப்பட்டார். அல்லேலூயா!

இதை வாசிக்கிற கர்த்தருடைய பிள்ளைகளே, அற்புதங்கள் யாருக்கோ, எங்கோ நடக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்காதீர்கள். உங்களுடைய வாழ்க்கையிலும் இன்றே அற்புதத்தை நிகழ்த்த என் தேவன் ஜீவனுள்ளவராகவே இருக்கிறார்.

யோவான் 14:14இல் கூறியபடி நீங்கள் அவருடைய நாமத்தினால் எதைக் கேட்டாலும் அவர் அதை உங்களுக்கு நிச்சயமாகவே தந்தருளுவார். இது மாத்திரமல்ல. நீங்கள் நினைக்கிறதற்கும் வேண்டிக் கொள்கிறதற்கும், அதிகமாக உங்களிலே அவர் அதிக்மான காரியங்களைச் செய்ய வல்லமையுள்ளவர்.

இயேசு சொன்னார்; **'என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று அவர் வாக்களித்திருக்கிறார்'** (யோவான் 14:12, 13)

இந்த வசனங்களைக் குறித்து மூலப்பாஷைகளில், **'என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதைச் செய்வேன்'.** அது ஒருவேளை இல்லையென்றாலுங் கூட நான் உங்களுக்கு உருவாக்கி, சிருஷ்டித்து தருவேன் என்று எழுதப்பட்டிருக்கிறது. சகோதரனே, சகோதரியே, நீங்கள் எதிர்பார்க்கும் அற்புதத்தை தேவன் இப்பொழுதே உங்களுக்குச் செய்ய ஆயத்தமாக இருக்கிறார். பெற்றுக் கொள்வீர்களா?

கிதியோன் தன்னுடைய ஜீவியத்தில் கர்த்தரோடு அற்புதங்களோடும், அடையாளங்களோடும் ஜீவிக்க சித்தங் கொண்டான். எங்கள் முற்பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? என்று அவன் உரிமையோடு கேட்கிறான் – நியா 6:13.

அந்த நாட்களில் இஸ்ரவேலர் மீதியானியரின் அடிமைத்தனத்தில் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். மீதியானியர் வெட்டுக் கிளிகளைப் போல், இஸ்ரவேல் தேசத்திற்கு வந்து தேசத்தைக் கொள்ளையடித்து, ஜனங்களை வேதனைப்படுத்தினார்கள். இஸ்ரவேலர் அவர்களுக்குப் பயந்து மலைகளிலும், குகைகளிலும் ஒளிந்து வாழ்ந்தார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் கர்த்தர் கிதியோனைப் பார்த்து, 'பராக்கிரமசாலியே' என்று அழைத்தார். அப்பொழுது தன்னுடைய மனகிலேசத்தையெல்லாம் கிதியோன் வெளிப்படுத்தி, அந்த தேவதூதனைப் பார்த்து கர்த்தர் எங்களோடிருந்தால் இவைகளெல்லாம் எங்களுக்கு சம்பவிப்பானேன். எங்கள்

முற்பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்கள் எங்கே? என்று கேட்டான்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் வழி நடத்திக் கொண்டு வந்த போது ஒவ்வொரு நாளும் அந்த வாழ்க்கை அற்புதமாகவே இருந்தது. அவர்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய் போகவுமில்லை. காலில் இருந்த பாதரட்சை தேய்ந்து போகவுமில்லை. எவ்வளவு அற்புதம் பார்த்தீர்களா? – (உபா 29:5). ஒரு மூன்று வயது குழந்தை வனாந்தரத்தில் நடந்திருக்குமென்றால், அந்த 40 ஆண்டும் அந்த குழந்தை உடுத்தியிருந்த உடை, அந்த குழந்தையின் வயதுக்கேற்றபடி வளர்ந்திருக்கும். பாதரட்சைகளும் வளர்ந்திருக்கும். அத்தனை இஸ்ரவேலரின் வாழ்க்கையிலும் அற்புதங்கள் நடந்தன. அதைத் தான் கிதியோன் கேட்டான். ஆகையால் அவன் கைகள் மூலமாகவே, கர்த்தர் மீதியோனியரை முறியடித்தார். உனக்கும் இதை அவர் இன்று செய்ய வல்லவர். நீ கிதியோனைப் போல, தேவனை தரிசிக்க ஆயத்தமா?

நான் 1987இல் திருச்சி ஒய்.எம்.சி.ஏ.ல் கூட்டம் நடத்தினபோது, தேவனுடைய அற்புதங்களைக் காண வேண்டும் என்ற ஆவல் எனக்குள்ளே வந்தது. என்னுடைய விசுவாசம் என்னை ஏவி எழுப்பிக் கொண்டேயிருந்தது. அன்று மாலை கூட்டத்தில் கூடி வந்திருந்த விசுவாசிகளைப் பார்த்து, உங்களுக்கு இன்று மழை வேண்டுமா? என்று கேட்டேன். அநேகர், 'ஆம் வேண்டும்' என்று பதில் கூறினார். சரி அப்படியென்றால், கர்த்தர் உங்களுக்கு மழையை வருஷிக்கப் பண்ணும்படி நான் ஒரு பாடலைப் பாடப் போகிறேன். கர்த்தர் மழையைத் தருவார்' என்று சொல்லி 'மலைகளே, மகிழ்ந்து பாடுங்கள்' என்கிற பாடலைப் பாடினேன். அந்தப் பாடல் சங் 98:8, ஏசாயா 55:2 என்ற வசனங்களை ஆதாரமாகக் கொண்ட பாடல் மழை வருவதற்கு எவ்விதமான சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இல்லாத வேளையில் பாடலைப் பாடி முடித்தவுடனே தானே மழை பெய்தது. நானும் ஜனங்களும் அற்புதத்தைக் கண்டோம். அங்குள்ள கர்த்தரின் பிள்ளைகள் இதை சாட்சியாகப் பார்த்தார்கள்.

அது போல 13.9.87இல் நான் கல்லுங்கடி (நான்குநேரிக்கருகில்) உள்ள சி.எஸ்.ஐ. சபையில் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்த போது கர்த்தருடைய ஆவியானவர் என்னை விசுவாசத்தில் பெலப்படுத்தினார். நான் விசுவாசிகளைப் பார்த்து நாம் மழை கேட்டு கர்த்தரிடத்தில் ஒரு பாடல் பாடுவோம் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்தார்கள். பாட ஆரம்பித்தபோது, கர்த்தர் என்னை மிகவும் பெலப்படுத்தினார். ஒரு வாலிப சகோதரன் ஓடிப் போய், தன்னுடைய வீட்டில் இருந்த ஒரு குடையை எடுத்துக் கொண்டு வந்தான். அது அநேகருக்கு ஒரு விளையாட்டு போலவே

இருந்தது. நானோ அதை விசுவாசத்திற்கு அடையாளமாகக் கொண்டு பக்தி வைராக்கியத்தோடு கூட பாடினேன். மணி மாலை 3.30. அப்பொழுது கர்த்தர் பலத்த மழையை அருளிச் செய்தார். அது வரை குழாயில் தணணீர் வராமல் இருந்தது. அன்று இரவே தண்ணீர் வந்தது. அந்த ஊர் போதகர் ரெவரெண்ட் ஜே. பால்ராஜ் அவர்கள் அதை நன்கு அறிவார். அதன் மூலம் கர்த்தர் அநேகருடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்.

வேதம் சொல்லுகிறது. **'கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால் நீங்கள் அந்த காட்டத்தி மரத்தை நோக்கி நீ வேரோடு பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.'** கர்த்தரே இதை சொல்லியிருக்கிறார் - லூக் 17:6. நாம் செய்ய வேண்டிய ஜெபம் எல்லாம் ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை எங்களுக்கு வர்த்திக்கச் செய்யும் என்பதுதான்.

இந்தோனேஷியாவில் உள்ள திமோர் என்ற இடத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்த மெல்டாரியைக் குறித்து கேள்விப்பட்டிருப்பீர்கள். ப என்ற புத்தகத்தில் தேவன் அவரைக் கொண்டு செய்த அநேக அற்புதங்களைக் குறித்து எழுதியிருக்கிறார். ஒருமுறை அவரும், அவரின் குழுவினரும் ஒரு கிராமத்தில் ஒரு வீட்டிற்குச சென்றிருந்தார்கள். அந்தச் சூழுல் சென்ற இருபது பேருக்கும் மிகுந்த பசி. ஏதாவது அந்த வீட்டில் கிடைக்காதா என்று எதிர்பார்த்துச் சென்ற அவர்களுக்கு பெரிய ஏமாற்றம்தான் காத்திருந்தது. ஏனெனில் அந்த வீட்டில் இருந்ததெல்லாம் ஒரே ஒரு துண்டுக் கிழங்கும், ஒரு கப் டீ மாத்திரமே.

என்றாலும் அவர்கள் விசுவாசத்தை தளர விடவில்லை. அவர்கள் தேவனை நோக்கி ஆண்டவரே, அன்று ஐந்து அப்பங்களையும் இரண்டு மீனையும் கொண்டு ஐயாயிரம் பேரை போஷித்தீரே. இன்றைக்கும் நீர் ஜீவனுள்ளவரல்லவா? அற்புதங்களைச் செய்கிறவரல்லவா? என்று ஊக்கமாக ஜெபித்தார்கள்.

அந்த வீட்டிலிருந்த தாய் அந்த குழுவின் அளவைப் பார்க்காதபடி கர்த்தரின் வல்லமையைப் பார்த்தாள். அதைப் பங்கிட்டுக் கொடுக்க ஆரம்பித்தாள். எடுக்க எடுக்க அந்தக் கிழங்கு வந்து கொண்டே இருந்தது! இருபது பேருக்கும் பூரண திருப்தியாக கிடைத்தது மாத்திரமல்ல. அவர்களோடு கூட இருந்த நாய்க்கும் கூட கிழங்கை எடுத்து வைத்தார்கள். எல்லோரும் பூரண திருப்தியோடு சாப்பிட்டு முடிக்க கர்த்தர் அந்த நாளில் கிருபை செய்தார். நம் கர்த்தர் மாறாதவர். இன்றும் அவர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, அற்புதம் எங்கோ, எப்பொழுதோ ஒரு சந்தர்ப்பத்தில் நடந்தது. இப்பொழுதெல்லாம் நடக்காது என்று போதகத்தை கேட்டு சோர்ந்து போக வேண்டாம். ஜீவிக்கின்ற இயேசுவை மாத்திரம் பாருங்கள்.

ஆந்திராவில் உதயகிரி என்ற இடத்தில் நான் ஊழியம் செய்து விட்டு நெல்லூருக்குப் புறப்பட்டு வந்தேன். என்னிடம் போதிய பணம் இல்லை. என்னிடமிருந்த பணம் எல்லாம் இரண்டே இரண்டு பேருக்கு மாத்திரமே டிக்கெட் வாங்க போதுமானதாக இருந்தது. மட்டுமல்ல, நான் தொடர்ந்து சென்னையிலிருந்தும் பயணம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் டிக்கெட் கவுண்டரின் அருகே வந்த போது அங்கிருந்த கிளார்க் சொன்னார். உங்கள் டிக்கெட் வந்து விட்டது. பெற்றுக் கொள்ளுஙகள் என்றார், எனக்கு ஒன்றும் புரியாமல் திகைத்தேன். தொடர்ந்து அந்த கிளார்க் கேட்டார். 'பைபிள் வைத்திருக்கும் மனிதர் நீர் தானே?' என்றார். நான் சந்தேகத்தில் சுற்றும் முற்றும் பார்த்து வேறு யாராவது பைபிள் வைத்திருக்கிறார்களோ? என்று கவனித்தேன். அதற்குள்ளாக ஒருவர் என்னிடத்தில் மிகவும் அன்போடு கூட என்னைக் கூப்பிட்டு, 'ஐயா ஆறு மாதங்களுக்கு முன்பு நீங்கள் இந்த இடத்திற்கு வந்திருந்தீர்களே. சகோதரன் விஜயகுமார் அவர்களுடைய வீட்டில் நீங்கள் எனக்காக ஜெபித்தீர்கள். உங்களுடைய ஆண்டவர் வேலையில் உயர்வைக் கொடுப்பார் என்று நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் சொன்னபடியே எனக்கு பதவி உயர்வு கிடைத்தது. இன்று இந்த புக்கிங் கிளார்க் வேலையில் இருந்து அடுத்த உயர்ந்த பதவிக்கு மாற்றிக் கொள்ள வந்தேன். என்னுடைய பெயர் ராஜசேகர். ஆகவே நான் உங்கள் எல்லாருக்கும் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்து விட்டேன் என்றார். எனக்கிருந்த சந்தோஷம் தாங்க முடியவில்லை. கர்த்தர் அற்புதத்தைச் செய்ய வல்லவராய் இருந்தார். அவரைத் துதித்தேன்.

என்னுடைய ஆரம்ப நாட்களில் ஊழியங்களில் என்னென்ன அற்புதங்கள் நடந்ததோ அந்த அற்புதங்களை ஆண்டவர் இப்போதும் நடத்தி வருகிறார். என்னுடைய நீண்ட பிரயாணங்களுக்கும், ஊழியங்களுக்கும் என்னுடைய பெரிய குடும்பத்திற்கும் அவரே போதுமானவராக இருக்கிறார். இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமையான தேவனுடைய பிள்ளையே, உன் வாழ்க்கையிலும் அவர் அற்புதத்தைச் செய்வார். **'ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களை எண்ணி முடியாத பெரிய அதிசயங்களையும் செய்கிறவர்.' 'அவருடைய நாமம் அதிசயமானவர். அற்புதங்களின் தேவன்.'** உடனே அற்புதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் - 5

பலவீனத்தில் தேவபெலனை என் கண்கள் கண்டது!

ஊழியம் கர்த்தருடையது. அவரே ஊழியத்திற்குக் கிருபைகளைத் தருகிறவர்! மனிதனின் பொருத்தனையினாலும் ஜெபத்தினாலும் மாத்திரம் அற்புதங்கள் நிகழ்வது இல்லை. தேவனுடைய கிருபையும் ஜனங்கள் மேல் அவருக்கிருக்கிற மனதுருக்கமே அற்புதங்களை நடத்துகின்றது. கர்த்தருடைய ஊழியங்களிலே என் ஆண்டவர் எனக்கு துணை நிற்பதையும் அவர் மேன் மேலும் ஜனங்கள் மேலும் மனதுருகி அற்புதங்களைச் செய்கிறதையும் ஏராளம் தடவை கண் கூடாகக் கண்டிருக்கிறேன்.

ஒரு முறை நான் ஆந்திராவில் காகிதாலப்பூர் என்ற ஊருக்கு ஊழியத்திற்குச் சென்றிருந்தேன். ஒரே ஒரு கிறிஸ்தவ குடும்பம் மாத்திரமே என்னுடைய ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அங்கே ஊழியம் செய்து கொண்டிருந்த போது கூட்டத்தின் நடுவிலே ஒரு சிறு குழந்தை மிகவும் பயங்கரமாக வலிப்பு வந்து அலறியது. அடுத்த வினாடி அது தன்னுடைய கண்களை மூடி விட்டது. குழந்தை இறந்து விட்டது என்று அங்கிருந்த ஜனங்கள் சொல்லி அழுதார்கள்.

அந்தக் காட்சி என்னுடைய உள்ளத்தை மிகவும் உருக்கியது. நான் பயந்து மிகுந்த கவலையோடு கூட என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தேன். அங்கிருந்த ஜனங்கள் அப்போது குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். ஆனால் அங்கிருந்த தலைமை ஆசிரியர் தேவதானம் (நாரையா) என்பவர் இடைமறித்து அந்தக் குழந்தையை என்னிடத்தில் கொண்டு வரும்படி சொன்னார். ஆகவே அந்தக் குழந்தையை என்னிடத்தில் கொண்டு வந்தார்கள். ஆனால் என்னுடைய விசுவாசமோ மிகவும் பலவீனப்பட்டு தள்ளாடிக் கொண்டிருந்தது. நாரையா என்பவர் இயேசு இருக்கின்றார். கவலைப்பட வேண்டாம் என்று ஜனங்களிடம் சொன்னார்.

அப்போது என்னோடு கூட இருந்த என் உடன் ஊழியக்காரர் பாஸ்டர் ஜெயக்கர் என்னை ஊக்கப்படுத்தி, தைரியப்படுத்தி, ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார். நானும் ஊழியர் ஜெயக்கரும் தேவனை நோக்கி ஆண்டவரே, நீர் மரித்தவர்களை உயிர்ப்பிக்கிற தேவன். லாசருவே நீ எழுந்து வா என்று சொன்னபோது அவன் கல்லறையிலிருந்து எழுந்து வந்தான். அதுபோல இன்று அற்புதத்தைச் செய்யும் என்று ஊக்கமாக மன்றாடினோம். கர்த்தர் எங்களுடைய ஜெபத்தைக் கேட்க சித்தம் கொண்டார். கொஞ்ச நேரத்திற்குள்ளாக குழந்தை கண்களைத் திறந்தது. முற்றிலும் சுகம் அடைந்தது. கர்த்தர் அற்புதமான விடுதலையைத் தந்தார். என் இயேசுவின் மகிமையை ஜனங்கள் உணர்ந்தார்கள். ஆனால்...

கொஞ்ச நேரத்திற்குள் அந்த இடத்தை நோக்கி ஒரு ஸ்திரீ அலறிக் கொண்டு வந்தாள். அவளிடமிருந்த அசுத்த ஆவி பேசினது. 'நான்தான் இதைச் செய்தேன். இந்த ஊரில் இருக்கும் பெரிய தேவதை நான். உடனே ஊரை விட்டு நீ வெளியே போக வேண்டும். இல்லாவிட்டால் நான் உன்னை என்ன செய்கிறேன் பார்' என்று சவால் விட்டது. அதை நான் கர்த்தருடைய கரத்தில் ஒப்புக் கொடுத்தேன். அதை அடுத்து அருகிலுள்ள இடங்களுக்கு நான் ஜெபிக்க புறப்பட்டு போய் விட்டேன். மீண்டும் நான் அங்கு வந்து என்னை அழைத்திருந்த வீட்டாரோடு உணவு அருந்த போனபோது அந்த ஸ்திரீ தண்ணீரில் மூழ்கின ஈரத் துணியோடுகூட அந்த வீட்டுக்கு எதிரில் வந்து நின்றாள். அவளோடு கூட கிராம ஜனங்கள் எல்லோரும் ஏராளமாக வந்திருந்தார்கள். அந்தக் கிராம ஜனங்கள் என்னைப் பார்த்து, 'இந்த தேவதைதான் வல்லமையானது. எங்களுக்கு இந்த தேவதை இருக்கிறபடியால் நீங்கள் உடனே இந்த ஊரை விட்டு வெளியே போய் விடுங்கள்' என்று சொன்னார்கள்.

அந்த வார்த்தை என் இருதயத்தை உடைத்தது. நான் உடனே வானத்தை அண்ணாந்து பார்த்து எனது தேவனை நோக்கி கண்ணீர் சிந்தி அழுது ஜெபித்தேன். நான் ஜெபித்த உடனே இந்த ஸ்திரீ பயங்கரமாக அலற ஆரம்பித்தாள். 'நான் ஒருவருக்கும் பயப்படமாட்டேன் என்று சொன்னேனே. ஆனால் இப்போதும் எனக்குப் பின்னாக இயேசு நின்று கொண்டு என்னை போ என்று சொல்கிறார். அவர் என்னிலும் பெரியவராய் இருக்கிறார். அவருக்கு முன்பாக நிற்க எனக்கு சக்தி இல்லை. நான் புறப்பட்டு

செல்கிறேன்' என்று சொல்லி அந்த ஆவி அவளை விட்டு ஓடினது. கர்த்தருடைய நாமம் அந்தக் கிராமத்தில் மகிமைப்பட்டது. அந்த ஸ்திரீ இயேசுவை ஏற்றுக் கொண்டாள். இப்போது அந்த கிராமத்திலுள்ள இரட்சிக்கப்பட்ட புற மதஸ்தர் அங்கு ஒரு சிறிய ஆலயத்தைக் கட்டி கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நானும் அந்த எளிமையான ஜனத்தை அடிக்கடி சந்திக்கின்றேன்.

தேவ பிள்ளையே, உன்னை பெலவீனன் என்று சொல்லாதே. மனம் சோர்ந்து போகாதே. கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார். தேவ பிரசன்னத்தை உணர்ந்து தைரியமாக, உற்சாகமாக ஊழியம் செய்வாயாக. அவர் அற்புதங்களைச் செய்கிறவர். நீ கர்த்தருடைய வல்லமையை மாத்திரம் நம்பி ஊழியம் செய்வாய் என்றால் அவர் நிச்சயமாக உன் விசுவாசத்தைக் கனப்படுத்துவார். மறை பொருள்களை வெளிப்படுத்தித் தருவார். பவுல் பலவீனத்தோடு கலாத்தியா நாட்டில் ஊழியத்திற்கு முதல் முறை சென்றார். தேவன் அவரை உபயோகித்தார். உன்னையும் உபயோகிக்க அவரின் பெலமுள்ள கரத்தின் கீழ் வருவாயா?

சில இடங்களுக்கு ஊழியத்திற்குச் செல்லும் போது, அங்குள்ள ஜனங்கள் பல காரியங்களை மனம் விட்டு ஊழியரிடத்தில் பகிர்ந்து கொள்வார்கள். ஐயா, எங்கள் வீட்டில் இவ்வளவு பணம் காணாமல் போய்விட்டது. ஐயா இவ்வளவு நகை இங்கே வைத்து இருந்தேன். யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். ஐயா யாரோ வீட்டுக் கதவை உடைத்து வீட்டிலுள்ள முக்கியமான பொருட்கள் அனைத்தையும் கொண்டு சென்று விட்டார்கள் என்றெல்லாம் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் அவர்களுக்காக ஜெபிட்டுண்டு. ஆண்டவரே, அந்த பொருட்கள் வந்து சேரட்டும். குடும்பத்துக்குள் பிரச்சினைகள் ஏற்படாதபடி பாதுகாத்துக் கொள்ளும் என்று வேண்டிக் கொள்ளும் போது, கர்த்தர் இவ்விதமான அற்புதங்களை அருமையாய் செய்கிறார். அவர்களும் கர்த்தரை நேசிக்க இது பிரயோஜனமாக உள்ளது. திருச்சி 'பெல்'லில் சகோ. ஆண்டர்ஸன் குடும்பத்திலும் இவ்விதமாக அற்புதங்கள் நடந்து இருக்கிறது. பொருட்களுக்கு மேலாக அந்த குடும்பங்களுக்கு இழந்துபோன சமாதானத்தை மீண்டும் தேவன் அவர்களுக்கு திரும்பத் தந்தருளினார். தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன்.

என்னுடைய ஊழியத்திலே கர்த்தர் குழந்தை, இல்லாதவர்களுக்கு கிருபையாக குழந்தை பாக்கியத்தை தந்ததைக் கண்ணாரக் கண்டு வருகிறேன். வேதத்தை வாசிக்கும் போது கர்த்தர் சாராளுக்கு குழந்தை கொடுத்ததைக் காணலாம். மலடியாய் இருந்த அன்னாளுக்கு குழந்தைக் கொடுத்ததை நாம் அறியலாம். அதே ஆண்டவர் இன்றைக்கும் அற்புதங்கள் செய்து வருகிறார். குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகளுக்கு கர்த்தர் இன்றும் நன்மை செய்து அவர்களுடைய குறையை எல்லாம நீக்கிப் போடுகிறார். அநேகர் டாக்டர் சொல்லும் கருத்துகளால் அவிசுவாசம் அடைந்து போகிறார்கள். ஆனால் பரம வைத்தியராகிய கர்த்தரோ உன் வைத்தியரைப் பார்க்கிலும் மிகப் பெரியவராய் இருந்து அற்புதங்களைச் செய்கிறார்.

பாளையங்கோட்டையில் சகோதரன் எலியாசும் அவருடைய மனைவி கஸ்தூரியும் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே கர்த்தர் அற்புதமாகக் குழந்தை பாக்கியத்தைத் தந்தருளினார். எத்தனையோ ஆண்டு காலங்கள் குழந்தை இல்லாமல் இருந்தார்கள். வேதத்தின் மூலமாக மழலை செல்வங்களைப் பெற்றுக் கொண்டார்கள். இன்று கர்த்தருக்கு சாட்சியாக வாழ்கிறார்கள். அப்படியே சேலத்திலுள்ள சிஎஸ்ஐ போதகர் பிரின்ஸ் பீட்டர் குடும்பத்தாரைக் கர்த்தர் ஆசீர்வதித்து ஒரு ஆண் குழந்தையை அருளினார். நாகமலை புதுக்கோட்டை போதகர் சாமுவேல் அவர்களுக்கும் இந்த ஆண்டு பெண் குழந்தையை தந்தருளினார். நாகர்கோவில் ஆலன்ராய் தம்பதிகளுக்கு பெண் குழந்தையைக் கட்டளையிட்டார். ஆண் வாரிசு இல்லாத சகோ. டி.பி. ஜெபக்குமாருக்கு ஆண் குழந்தையைத் தந்தார். இதற்காக சனிக்கிழமைகளில் நானும் என்னைச் சார்ந்த சிவகாசி குடும்பத்தார்களும் உபவாசமிருந்து ஜெபிக்கிறோம். திருமணமாகாத பிள்ளைகளுக்கும் பிரிந்திருந்த குடும்பங்களுக்கும் ஜெபித்து வருகிறோம். இது போன்ற பிரச்சனையுள்ள அனைவரும் சனிக்கிழமைகளில் உபவாசமெடுத்து சங்.29ஐ தியானித்து, ஜெபித்து கர்த்தரின் சத்தத்தைக் கேட்க வேண்டுகிறேன். தொடர்ந்து வேறே அத்தியாயத்திலும் இதைப் பற்றி விவரிக்கிறேன்.

சிலரை நான் நேரில் பார்த்தது இல்லை. கடிதத்தின் மூலமாக தொடர்பு கொள்ளும் போது அவர்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கும் போது கர்த்தர் அவர்களுடைய வாழ்க்கையில் அற்புதத்தைச் செய்கிறார்.

சூலூரில் இருக்கும் வால்ட்டர் ஸ்டெல்லா அவர்களை தேவன் ஆசீர்வதித்து இரண்டு குழந்தைகளைக் கட்டளையிட்டார். நான் எழுதிக் கொண்டே போகலாம். கர்த்தர் அவ்வளவு அருமையான அற்புதங்களை என் கண்கள் காணும்படி கிருபை செய்து இருக்கிறார்.

கர்ப்பங்கள் தடைப்பட்டிருப்பதற்கு பலவகையான காரணங்கள் உண்டு. சிலருடைய சரீரத்தில் குழந்தை பிறக்கக் கூடாதபடி ஆண்களுக்கு உயிர் அணுக்கள் செத்ததாய் இருக்கக் கூடும். அவ்வாறு இருக்கிறவர்களுக்கு குழந்தை பிறக்காது என்று டாக்டர்கள் கூறி இருக்கக் கூடும். பெண்களுக்கு கர்ப்பப் பையிலும் டியூபிலும் தடையிருக்கலாம். சிலர் மேல் அசுத்த ஆவிகள் குடி கொண்டிருந்து உண்டாகிற கர்ப்பத்தை எல்லாம் கலைத்து கொண்டிருக்கும். நான் ஊழியம் செய்யும் போது அசுத்த ஆவிகள் நான் தான் இவளுடைய கர்ப்பத்தை அடைத்து இருக்கிறேன். அவள் குழந்தை உண்டாகாதபடி தடுத்து கொண்டிருக்கிறது நான்தான். உங்களால் என்ன செய்ய முடியும் என்று சவால் விடுவதுண்டு. நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கும் போது அந்த அசுத்த ஆவிகள் ஓடிவிடும். கர்த்தர்அந்த மகளுடைய வாழ்க்கையில் அற்புதத்தைச் செய்வார்.

சில வேளைகளில் பிசாசு மின்சாரத்தை வைத்து அதன் மூலமாய் ஊழியத்தைத் தடுக்க முயற்சிப்பது உண்டு. நான் திருநெல்வேலி அருகிலுள்ள மேலச்செவல் என்ற இடத்தில் ஊழியம் செய்யும் போது கூட்டங்கள் ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு திடீரென்று ஒரு பலத்த காற்று வீசினது. அந்த வேளையில் அருகிலிருந்த மின்சார கம்பம் அடியோடு சரிந்து விழுந்து மின்சாரம் தடைப்பட்டது.

உடனே அந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் திருநெல்வேலியிலிருந்து ஜெனரேட்டர் கொண்டு வந்தார்கள். ஆனால் சாத்தானோ அந்த ஜெனரேட்டரையும் வேலை செய்ய விடாமல் தடுத்து விட்டான். எனவே மின்சாரம் இல்லாமல் பெரிய மைதானத்தில் நான் கர்த்தருடைய செய்தியை ஆரம்பித்தேன். கூட்டம் முடிந்தவுடன் அசுத்த ஆவி ஒரு பெண்ணின் மேல் இருக்க அவள் அலறிக் கொண்டு ஓடி வந்து விழுந்தாள். நான்தான் இதைச் செய்தேன். மின்சாரம் இல்லாவிட்டால் எப்படி கூட்டம் நடத்துவீர்கள் என்று பார்க்க விரும்பினேன். ஆனால் நீங்கள் கூட்டம் நடத்தி முடித்து விட்டீர்கள் என்று சொல்லிவிட்டு மிகவும்

சத்துமாக இயேசுவே உமக்கு முன்பாக என்னால் நிற்க எனக்கு வல்லமை இல்லை என்று சொல்லி பூமியை அடித்து விலகி ஓடியது.

கர்த்தர் அந்த மகளுக்கு விடுதலையைத் தந்தது மாத்திரமல்ல, அதிசயமாக அநேக அற்புதங்களையும் கட்டளையிட்டார். மேலச்செவல் மக்கள் கர்த்தரின் கிரியைகளைக் கண்டார்கள்.

நான் மலேசியாவில் ஊழியம் செய்யும்போது இரண்டு இடங்களில் மின்சாரம் இல்லாமல் போனது. அதற்காக நான் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். கர்த்தருடைய வார்த்தைகளை கூறுவதற்கு கர்த்தர் எனக்கு கிருபையும் பெலனையும் தந்து இருக்கிறார். நம்மை பெலவீனப்படுத்துவது சாத்தானின் வேலை. பெலப்படுத்துகின்றவர் நம்முடைய கிறிஸ்து. அல்லேலூயா!

திருத்தணி என்ற இடத்திற்கு நான் ஊழியத்திற்கு சென்றிருந்தபோது அங்கு மின்சாரம் இல்லாமல் போய்விட்டது. எனவே ஊழியத்திற்கு அழைத்த தங்கராஜ் என்ற ஆசிரியர் விளக்குகளைக் கொண்டு வந்தார். மின்சாரம் இல்லாமல் இருப்பது சாத்தானுடைய போராட்டம் என்று நான் உணர்ந்து கொண்டேன். இந்த வேளையில் அங்கு ஒரு வாலிப பெண்ணை ஜெபிப்பதற்கு என்னிடத்தில் கொண்டு வந்தார்கள். அந்தப் பெண் இரண்டு ஆண்டுகளாக அசுத்த ஆவியின் பிடியில் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். நான் அவளுக்காக ஜெபிக்க ஆரம்பித்த போது அவளுக்குள் இருந்த அசுத்த ஆவி பேசினது. என்னுடைய பெயர் ஜெயபால். நான் மின்சாரக் கம்பியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டேன். இப்போது இந்தப் பெண்ணை பிடித்திருக்கிறேன். என்னை விரட்ட மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால் மின்சாரம் கொடுப்பேன் என்றது.

ஆவியில் வைராக்கியம் அடைந்து நான் அசுத்த ஆவியைப் பார்த்து நான் உன்னை விரட்டி விட்டுத்தான் இந்தக் கூட்டத்தை நடத்துவேன் என்று கர்த்தருடைய நாமத்தில் சவால் விட்டேன். உடனே என்னை அழைத்தவரை அது தாக்க ஆரம்பித்தது. அவர் மிகவும் பலவீனப்பட்டார். நானும் என் உடன் ஊழியர்களும் வல்லமையாக ஜெபிக்க ஆரம்பித்தோம். கர்த்தருடைய வல்லமை அந்த மகள் மேல் இறங்கினபடியால் அந்த அசுத்த ஆவி புறப்பட்டு ஓடிப் போனது. மின்சாரமும் தடையின்றி கிடைத்தது. தேவ பிள்ளையே, பிசாசின் கொஞ்ச வல்லமையைக் கண்டு மனம் சோர்ந்து போகாதே. தேவனுடைய வல்லமை கோடானு கோடி மடங்கு பெரியது. அதை நாம் அனுபவிக்க நமக்கு சிறிது விசுவாசம் மாத்திரமே தேவை.

கர்த்தர் அதை உங்களுக்கு அருளுவாராக. மன நோயினால் பாதிக்கப்பட்ட அநேகர் என்னிடத்தில் வருவார்கள். அதனுடைய மூல காரணம் சாத்தானாகக் கூட இருப்பதுண்டு. அநேகர் காக்கா வலிப்பு என்று சொல்லுகிற வியாதியினால் வருகிறவர்களும் உண்டு. பெரும்பாலும் இப்படிப்பட்ட வியாதிகளுக்கும், மனநோய்களுக்கும் மூலக்காரணம் சத்துருவினுடைய வேலைதான்.

மாற்கு 9 ஆம் அதிகாரத்தில் வாசிக்கும் போது ஒரு வாலிபனின் தகப்பன் கர்த்தரிடம் வந்து பிள்ளையை அசுத்த ஆவி பிடித்து தீயிலும், தண்ணீரிலும் தள்ளி விடுவதைக் குறித்து ஆண்டவரிடம் சொல்லி முறையிட்டான். அதைத் துரத்த சீஷர்களால் முடியாமல் போய்விட்டது. ஆனால் கர்த்தர் அதை துரத்தி விட்டு சீஷர்களைப் பார்த்து இப்படிப்பட்ட அசுத்த ஆவிகள் உபவாசத்தினாலும், ஜெபத்தினாலுமேயன்றி வேறு எவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

ஒரு வாலிபப் பிள்ளையை எனக்குத் தெரியும். அவள் நாட்டியமாடுவதற்கு நாட்டிய அரங்கத்திற்கு சென்றாள். அரங்கேற்றமான பின்போ மனநோயினால் பாதிக்கப்பட்டாள். அவளுடைய அறிவு மங்கினது. அவளுடைய பெற்றோர் அவளை குணமாக்க எத்தனையோ முயற்சிகள் எடுத்தார்கள். ஒன்றிலும் சுகம் கிடைக்கவில்லை.

பிறகு அவளை என்னிடத்தில் ஜெபிக்க கொண்டு வந்தார்கள். கர்த்தர் எனக்கு அப்போது ஒரு தரிசனத்தைக் கொடுத்து அவளுக்கு நடந்த அந்த சம்பவத்தை விளக்கிச் சொன்னார். அரங்கேற்றத்தின் போது ஒரு சிலை முன் அந்த பிள்ளை நின்ற போது அந்த மகள் தாக்கப்பட்டாள். நாங்கள் கூடி ஜெபித்தோம். நம்முடைய தேவனுடைய வல்லமை அந்த மகளிடம் இறங்கியது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இன்று அந்தக் குடும்பம் சந்தோஷமாக உள்ளார்கள். வேறு பிரிக்கப்பட்ட அனுபவத்தோடு வாழ்கின்றார்கள்.

இன்னொரு முறை நான் ஒரு ஊருக்குச் சென்றிருந்த போது ஒரு இளம் பெண்ணை குறித்துக் கேள்விப்பட்டேன். அவள் மிகுந்த மனநோயினால் கஷ்டப்படுவதாகவும் அதனால் அந்த ஊரார் நடுக்கம் கொண்டு இருப்பதாகவும் அறிந்தேன். நான் அதை கேள்விப்பட்டவுடன் அந்த ஊருக்குச் சென்றேன். அந்த பிள்ளையின் தகப்பன் எனக்கு எதிர் கொண்டு ஓடி வந்தார். ஐயா என் மகளுக்கு பைத்தியம் முற்றி விட்டது. அவள் இப்போது ஒரு

பாட்டை பாடினாள். ஆறு பேர் ரதம் ஏறி வருகின்றார்கள். ஆட்டம் முடிந்தது என்று சொல்லி ஆடுகிறாள் என்றார் பரிதாபமாக! நான் அவரைப் பார்த்து சொன்னேன். அவளை ஆட்டுகிற (ரதம்) காரில் ஏறி வந்து இருக்கிறோம். அவளை ஆட்டுகிற அத்தனை அசுத்த ஆவிகளையும் இயேசுவின் நாமத்தினால் இன்றே துரத்திச் செல்வோம் என்று அவரை தைரியப்படுத்தினோம். கர்த்தர் எங்களுடைய ஜெபத்தைக் கேட்டார். தேவன் அதிசயமான விடுதலையைக் கட்டளையிட்டு அந்த பிள்ளையை இரட்சித்தார்.

காக்கா வலிப்பு நோயுள்ள அநேக குடும்பத்திற்கு ஜெபித்திருக்கிறேன். சென்னையில் 18 ஆண்டுகளாக காக்கா வலிப்பினால் வேதனைப்பட்ட ஒரு தாய்க்கு ஜெபிக்கும்படியாக என்னை அழைத்துச் சென்றார்கள். நான் ஜெபித்தபோது கர்த்தர் சில காரியங்களை எனக்கு வெளிப்படுத்திக் கொடுத்தார். அதை எல்லாம் தேவ சமூகத்தில் சொல்லி குடும்பத்தின் சாபங்கள் நசுக்கப்பட ஜெபித்தேன். அன்றைக்கே கர்த்தர் அந்தத் தாய்க்கு அற்புத சுகத்தைத் தந்தார். இன்று அந்த தாய் சுகம் பெற்று ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. அதன் பின்பு அந்த தாய்க்கு காக்கா வலிப்பு நோய் வரவே இல்லை. கர்த்தர் அற்புத சுகத்தை கொடுக்க வல்லமை உள்ளவராயிருந்தார். அல்லேலூயா!

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, விசுவாசத்தினால் இப்படிப்பட்ட வியாதிகளுக்கு, ஜெபிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு நமக்கு அதிகமாக விசுவாசமும், உபவாசமும் ஜெபமும் தேவை. நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறும் போது ஊழியர்களில் கர்த்தருடைய நாமம் விளங்கும் போது சத்துரு எவ்வளவு தடை செய்ய முடியுமோ அவ்வளவு தடைகளை செய்கிறான். காரில் பிரயாணம் செய்யும் போது வாகனத்தின் மேல் சத்துரு தடை செய்வதை பார்த்திருக்கிறேன். ஆனால் தேவனோ துணை நிற்கிறார்!

சமீபத்தில் நான் பெங்களூருக்குப் போனபோது காரணம் இல்லாமல் காரில் எஞ்சின் நின்று விட்டது. நின்று கொண்டிருந்த இடத்திலேயே டயரில் பெரிய ஆணி குத்தி பஞ்சர் ஆகி இருந்தது.

எனவே நாங்கள் கூடி ஜெபித்தோம். அங்கிருந்த சகோ துரைராஜ் மனைவி தீர்க்கதரிசனமாக உங்கள் காரின் முன்பாக ஏராளமான கத்திகள் இருப்பதைப் பார்க்கிறேன் என்றார்கள். அப்போதே நாங்கள் எஞ்சினை பழுது பார்க்காமல் மிகவும் முயற்சியோடு கூட

காரை சென்னைக்கு ஓட்டிக் கொண்டு வந்தோம். வழியில் நான்கு முறை பஞ்சர் ஆகிவிட்டது. எல்லாம் நல்ல டயர்கள்தான். அதற்கு பஞ்சர் ஒட்டினவர்கள் என்ன இப்படி ஆகிவிட்டதே என்று சொல்லி ஆச்சரியப்பட்டாரகள். ஆனால் எந்த தடைகளும் இல்லாதபடி ஊழியங்கள் செய்வதற்கு என் தேவனோ மிகவும் அதிகமான வல்லமை உள்ளவராக இருந்தார்.

ஒருமுறை கருத்த பிள்ளையூர் என்ற இடத்திற்கு ஊழியத்திற்கு சென்றிருந்தேன். அங்கே சகோதரன் ஸ்டீபன் இருதயராஜ் அவர்களுடைய தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு முறை அவர் தோட்டத்தில் நின்று கொண்டிருந்த போது அவருக்கு அருகில் இருந்த தென்னை மரத்தின் மேல் பயங்கரமான இடி விழுந்தது. தென்னை மரம் பிளந்து விட்டது. அந்த மரத்தில் இருந்து 10 அடி தூரத்தில் நின்ற அவர் மிக ஆச்சரியமாக உயிர் தப்பினார்.

அவருடைய தோட்டத்திற்கு ஜெபிக்க நான் நல்ல ஒரு காரை எடுத்துக் கொண்டு போய் இருந்தேன். நான் ஜெபித்துவிட்டு திரும்பி வரும்போது கார் டிரைவர் காரை திருப்பிக் கொண்டு வந்து நிறுத்தினார். அந்த வேளையில் நான் திடீரென்று ஆவியினால் நிரப்பப்பட்டேன். தேவ ஆவியானவர் என்னைப் பார்த்து நீ இன்று இந்த இடத்தில் தங்கி விடு என்றார். ஆனால் என்னோடு கூட வந்தவர்கள் இன்று எப்படியாவது இந்த ஊரை விட்டு பாபநாசம் போய்விட வேண்டும் என்று சொன்னார்கள். எனவே நான் காரில் ஏறி உட்கார்ந்தேன். உடனே கார் எஞ்சின் நின்று விட்டது. டிரைவரும் என்னவெல்லாமோ செய்து பார்த்தார். அவரால் ரிப்பேர் செய்ய முடியவில்லை. நான் எல்லோரையும் காரில் அமர வைத்துவிட்டு எஞ்சின் மேல் கைகளை வைத்து ஜெபித்தேன். உடனே கார் இயங்கி ஓட ஆரம்பித்தது. கர்த்தர் மீண்டும் என்னிடம் இந்த ஊரில் தங்க வேண்டுமென்று சொன்னார். கூட இருந்தவர்கள் சம்மதிக்கவில்லை. வி.கே.புரம் வந்தபோது மீண்டும் கார் நின்று விட்டது. அதை ரிப்பேர் செய்வதற்கு யார் யார் எல்லாமோ முழு இரவும் போராடினார்கள். ஆனால் அந்த காரை ஓட்ட முடியவில்லை. பின் அந்த டிரைவர், ஐயா, நீங்கள் அங்கேயே தங்க வேண்டும் என்று சொன்னது சரி. அங்கு தங்கியிருந்தால் இவ்வளவு கஷ்டம் நமக்கு வந்திருக்காது என்றார். பொல்லாங்கனாகிய சாத்தானின் தந்திரங்களை அறிந்து கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்ப்படிவோமாக.

கர்த்தர் நமக்கு கொடுக்கிற ஆலோசனையின்படி நடக்கும் போது அது எப்போதுமே ஆசீர்வாதமாய் இருக்கும். தேவனுடைய

ஆலோசனையை மீறி நடக்கும் போது பிலேயாமுக்கு வந்த கட்டுகள் தான் நமக்கும் ஏற்படும். 1 இராஜாக்கள் 13 ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். அங்கு தேவனுடைய மனிதனாய் இருந்த ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் மனிதனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினால் அவனுடைய வாழ்க்கை முழுவதும் வீணாய் போனது.

தேவ பிள்ளையே, கர்த்தருக்கென்று உன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து நீ நடக்கும் போது, கர்த்தருடைய வார்த்தையின்படி செய்ய கவனமாய் இருப்பாயாக. அவருடைய வார்த்தைக்கு செவிசாய்த்து முற்றிலும் கீழ்ப்படியாமல் இல்லாவிட்டால் 'எலியாவே, உனக்கு இங்கே என்ன காரியம்' என்று கேட்டு எலியாவை துரத்தியதைப் போல் உன்னை ஓட வைப்பார் (1 இராஜா 19:9). இவைகளை எல்லாம் என் அனுபவத்தில் என் கண்கள் கண்டதால் கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக நீங்கள் இதன்படி நடக்க உங்களுக்கு எழுதுகிறேன். அநேகர் நாள் பார்த்து, காலங்களையும், நியமங்களையும் பார்த்து திருமண காரியங்களை நடத்துகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுப்பதைப் பார்க்கிலும் உலக பழக்கத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். முடிவில் அவர்கள் வேதனையை அனுபவிக்கிறார்கள். - எரே. 10:2.

கர்த்தருடைய ஆலோசனையின்படி நீ செய்வாயானால் உனக்கு எல்லாம் ஜெயமாய் இருக்கும். நீ ஆசீர்வதிக்கப்படுவாய்.

நாங்கள் பிரயாணங்களில் சில அதிசயங்களைக் கண்டிருக்கிறோம். ஒருமுறை நானும் சகோதரன் ராபின்சனுமாக டில்லிக்கு போய்க் கொண்டிருந்தோம். என்னோடு சகோதரர் ஜெயசீலனும் வந்தார். ரெயிலில் பிரயாணம் செய்தது எனக்கு ஆசீர்வாதமாய் இருந்தது. இரவு 10 மணிக்கு சகோதரர் ராபின்சனின் மகளுக்கு ரொட்டி வாங்குவதற்கு ஓடிக் கொண்டருந்த ரயிலிலே கேன்டீனுக்குச் சென்றோம். அன்று செவ்வாய்க்கிழமை. இரவு நான் உபவாசத்தோடு வந்தேன். நாங்கள் அந்த கேன்டீனை அடைந்தபோது அங்கு வேலை செய்தவர்கள் எல்லோரும் மிகுந்த பயத்தோடு காணப்பட்டார்கள். என்ன என்று பார்த்தபோது ஒரு மனிதனை ஐந்து பேர் பிடித்து வைத்திருந்தார்கள். அவர்கள் என்னைப் பார்த்து ஐயா இந்த மனிதன் மேல் ஒரு பயங்கரமான ஆவி இருக்கிறது. அது அவனை கொல்லும்படி இழுத்துக் கொண்டு வெளியே போகிறது. அவன் ஓடும் ரயிலில் இருந்து குதித்து செத்து விட்டால் நாங்கள் யாவரும் பாதிக்கப்படுவோம். என்ன செய்வது என்று தெரியவில்லை என்றார்கள்.

உடனே நான் வேதத்தை கையில் பிடித்து எல்லோரும் பார்க்கத் தக்கதாக ஊக்கமாக ஜெபித்தேன். அவனை பிடித்துக் கொண்டிருந்தவர்களை அவனை விட்டு விடும்படியாகக் கேட்டேன். அதற்கு அவர்கள் நாங்கள் ஐந்து பேர் அவனை பிடித்தும் கூட எங்களுடைய பலத்தினால் அவனை நிறுத்த முடியவில்லை. நீங்கள் எப்படி தனியாளாக அவனை பிடிக்கப் போகிறீர்கள். உங்களால் முடியாது. நீங்கள் அவனுடைய அருகிலே போக வேண்டாம் என்றார்கள்.

நான் தைரியமாக இயேசுவின் நாமத்தைச் சொல்லிக் கொண்டு அருகே நின்ற போது அவன் நேராக எங்களுடைய கால்களில் வந்து விழுந்தான். அது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஜீவிக்கிற இயேசுவின் நாமத்தினாலே அந்த அசுத்த ஆவியை, விரட்டி அப்புறப்படுத்தினோம். அந்த கேன்டீனில் உள்ளவர்கள் சந்தோஷப்பட்டார்கள். கர்த்தர் மகிமைப்பட்டார். எங்களுக்கு ரொட்டியும் கிடைத்தது!

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எந்த நேரத்திலும் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். என்னுடைய 22 ஆண்டு ஊழியங்களில் ஓய்வு என்று நான் எடுத்தது கிடையாது. ஓய்வு எடுக்க நினைத்தால் என்னுடைய சரீரம் பலவீனப்பட்டு விடும். கர்த்தர் அதை அனுமதிப்பது இல்லை. என்னால் முடிந்த அளவுக்கு கர்த்தருக்கு ஊழியத்தை செய்து வருகிறேன்.

அசுத்த ஆவிகள் நம்மைக் கண்டு பயந்து ஓட வேண்டுமென்றால் நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்தம் நிலைத்திருக்க வேண்டும். மாயவரம் என்ற இடத்தில் தஞ்சை பாஸ்டர் ஜெயச்சந்திரன் என்ற ஊழியரோடு ஊழியம் செய்தபோது ஒரு வீட்டிற்குச் சென்றேன். அங்கே ஒரு பெண் பிள்ளை சூனியத்தால் பாதிக்கப்பட்டு வாழ முடியாத நிலையில் இருந்தாள், மட்டுமல்ல அந்த பிள்ளையைப் பிடித்த ஆவி அவளை மேலும் மேலுமாக தொந்தரவு செய்தது.

நான் அந்த இடத்தை விட்டு உடனே செல்ல வேண்டியதாக இருந்தபடியினால் மிகவும் ஊக்கமாக தேவனை நோக்கி ஆண்டவரே உம்முடைய தேவதூதர்களை அனுப்பும் என்று கேட்டுக் கொண்டேன். கர்த்தர் தனது மிகாவேல் தூதனையும் காபிரியேல் தூதனையும் அனுப்பினார். உடனே அந்த அசுத்த ஆவி அலறி உங்கள் ஆண்டவர் உங்கள் ஜெபங்களைக் கேட்டு பெரிய தூதர்களையும் அனுப்புகின்றாரே என்று அந்த ஆவி அலறியது.

தொடர்ந்து நாங்கள் ஜெபித்துக் கொண்டே இருந்தோம். அப்போது அந்த அசுத்த ஆவி எங்களோடு கூட ஜெபித்த இரண்டு பேருடைய குறைகளைச் சொன்னது. ஒருவனை பார்த்து உங்களோடு இவன் ஜெபிக்கின்றான். அவன் ஒரு திருடன் என்றது. உடனே அவன் தன்னுடைய பாவத்தைக் கண்ணீரோடு அறிக்கையிட்டு ஆம் உண்மைதான். நான் ஒரு பொருளை திருடி என்னுடைய சிநேகிதனுக்கு கொடுத்து விட்டு வந்தேன் என்றான். மற்றவனை சுட்டிக் காட்டி ஒரு சினிமா பெயரைச் சொன்னது. உடனே அவன் அழுது நான் நேற்றிரவு அந்த சினிமா பார்த்துவிட்டு வந்தேன் என்று ஒப்புக் கொடுத்தான். அந்த இரண்டு பேர் ஒப்புக் கொடுத்தவுடன் அந்த அசுத்த ஆவி பெலன் இழந்துபோனது. கர்த்தர் அற்புதமான விடுதலையைத் தந்தார். அந்த மகள் தங்கள் குடும்பத்தோடு மகிழ்ச்சியோடு வாழ்கிறாள். கர்த்தர் குழந்தை பாக்கியத்தையும் கட்டளையிட்டார்.

தேவ பிள்ளையே, ஊழியத்திற்குச் செல்லும் போது உன்னை நீ ஆராய்ந்து பார். உன்னுடைய இருதயத்தில் பரிசுத்தம் உண்டா என்று பரிசோதித்து பார். **'இருதயத்தில் சுத்தம் உள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்'** என்று வேதம் சொல்லுகிறது. - மத் 5:8. நீ பரிசுத்தமாய் இருந்தால் உன்னோடு தேவன் இருப்பார். கர்த்தருடைய ஊழியத்தில் இது என் கண்கள் கண்ட உண்மையான அனுபவம். உன் உடன் ஊழியர்களும் பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

ஒருமுறை என்னுடைய வீட்டிற்கு கங்கா என்ற சகோதரி மன நோயுடன் வந்தார்கள். இயேசுவின் அன்பை அவர்களுக்குச் சொல்லி விவரித்த போது அற்புதமான விடுதலையை பெற்றுக் கொண்டார்கள். அன்று முதல் அவர்கள் ஒரு சுவிஷேகியைப் போல அநேகரை கர்த்தர் அண்டை வழி நடத்தினார்கள். பயங்கரமான அசுத்த ஆவிகளும் குடும்பங்களை அலைக்கழிக்கும் ஆவிகள் பிடித்திருந்த பலர் அந்த சகோதரியால் கர்த்தருக்குள் வழி நடத்தப்பட்டு அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். எப்போதும் தேவனுடைய பிள்ளைகள் ஒருமனப்பட்டு சத்துருவுக்கு விரோதமாகப் போராட வேண்டும் என்பதை தேவன் விரும்புகிறார். **'ஜனங்கள் தம்மை தடவியாவது கண்டுபிடிக்க சித்தமுள்ளவராக இருக்கின்றார்'** - அப். 17:27.

நான் ஒரு கூட்டத்தில் ஒரு அசுத்த ஆவியை துரத்தின போது அதுபோக மறுத்தது. என்ன என்று கேட்டபோது என்னுடன் கூட

ஊழியத்தில் இருக்கிற மனுஷன் பரிசுத்தவான் அல்ல. என்னை ஏன் துரத்துகிறாய் என்று கேட்டது. தேவ பிள்ளையே, நீ பரிசுத்தமாய் இருக்கிறது மட்டுமல்ல, உன்னோடு கூட இருக்கிற மக்களையும் பரிசுத்தப்படுத்து. அப்போதுதான் உன்னால் ஜெயத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நான் காஞ்சிபுரத்தில் மாரநாதா சபையில் ஒருநாள் கன்வென்ஷனில் பேசிக் கொண்டிருந்தேன். என்னை அழைத்து ஜெபிக்க சொன்ன போது கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு ஒரு மகளின் ஜுரத்தை இறக்கிக் கொடுத்தார். மாலைக் கூட்டத்திற்கு அந்த பிள்ளை சுகமாக வந்தது. கூட்டம் முடிந்தவுடன் மேடையை விட்டு இறங்கி வந்தேன். எல்லா ஜனங்களும் ஜெபிக்க வந்து கொண்டிருந்தார்கள். அந்நேரம் ஒரு பயங்கரமான ஆவி அந்த பெண்ணின் மேல் இருந்து அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது. இந்த பிள்ளை இரட்சிக்கப்பட்ட பிள்ளை அல்லவா? அப்படி இருக்க பிசாசே ஏன் இந்த பெண்ணை தொட்டாய் என்று அதட்டினேன். அதற்கு அந்த பிசாசு சொன்னது: அவள் முன்பு இரட்சிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் இவள் மூன்று மாதங்களாக ஜெபிப்பது இல்லை. தேவனை விட்டு தூரமாய் போய்விட்டாள். ஆகவேதான் நான் இவளைப் பிடித்தேன் என்றது. கர்த்தருடைய நாமத்தினில் ஜெபத்தைக் குறித்து ஒரு விளக்கம் கொடுத்து விட்டு ஊக்கமாய் ஜெபித்தேன். கர்த்தர் அந்த மகளுக்கு நல்ல விடுதலையைக் கொடுத்தார். இப்போது அந்த குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவர்களுக்குக் குழந்தைகளையும் தந்து இருக்கிறார். அவர்கள் போதகர் நேசையா அவர்களின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். என் கண்கள் கண்டவைகளை எல்லாம் உங்களுக்கு விவரித்து சொன்னது என்னுடைய பெருமைக்காக அல்ல. இவை ஊழியத்தில் நான் கற்றுக் கொண்ட பாடங்கள்! நீங்களும் அறிந்து கொண்டு உங்கள் பரிசுத்தத்தைப் பரிசோதித்துக் கொள்ளும்படி விரும்புகிறேன். **'பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாக மாறுங்கள்'** – எபே. 6:11–18.

நாம் ஆராதிக்கிற தேவன் பரிசுத்தமுள்ளவர். **'பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பதில்லையே'** என்று வேதம் சொல்கிறது. தேவபிள்ளையே, தேவன் எதிர்பார்க்கிற பரிசுத்தத்தை அவர் உனக்குத் தந்தருள்வாராக. ஆமென் – எபி 12:14.

அத்தியாயம் – 6
தப்புவிக்கும் தேவன்!

'அவர் என்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்' – சங் 91:3.

'சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது' – மாற்கு 16:18.

ஒருமுறை பிள்ளையான்மனை என்ற ஊருக்கு நான் ஊழியத்திற்கு சென்ற போது என்னோடு கூட மதுரையைச் சேர்ந்த எஞ்சல் ஜெயசீலன் தன்னுடைய உறவினர் வீட்டிற்கு பக்கத்து ஊருக்கு அழைத்துச் சென்றார்.

அந்த குறிப்பிட்ட வீட்டில் தாய்க்கு விரோதமாக சூனியம் வைக்கப்பட்டிருந்தது. எனவே அவர்கள் என்னை ஜெபத்திற்கு அழைத்தபோது நான் போய் அவர்களுக்காக ஊக்கமாக ஜெபித்து கர்த்தருடைய ஆசீர்வாதத்தைச் சொல்லி விட்டு வந்தேன். இரண்டு நாட்கள் கழித்து அந்த வீட்டிலுள்ளவர்கள் மீண்டும் என்னைப் பார்க்க வந்தார்கள். வரும் போது எனக்கு முட்டை பொரித்து எடுத்துக் கொண்டு வந்தார்கள். நான் கூட்டத்திற்குப் புறப்படுவதற்கு முன்பாக அவர்கள் கொண்டு வந்த பொரித்த முட்டையிலே ஒரு முட்டையை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தேன். என் மகனுக்கும் ஒரு முட்டையை எடுத்துக் கொடுத்தேன்.

நான் அந்த முட்டையை என் வாயில் எடுத்துப் போட்ட உடனே அது நெரு நெரு என்று ஏதே ஒரு மாதிரியாக இருந்தது. அதனுடைய ருசியும் வேறு விதமாக இருந்ததினால் எனக்கு சந்தேகம் வந்து விட்டது. மகனைக் கூப்பிட்டு நீ அந்த முட்டையை சாப்பிடாதே என்று சொல்லி நானும் சாப்பிடாமல் அப்படியே வைத்து விட்டேன். அதைத் தொடர்ந்து கூட்டத்திற்கு சென்று நான் செய்தியை பிரசங்கித்தேன்.

நான் கூட்டம் முடிந்து வந்த போது அந்த முட்டையைக் கொண்டு வந்த தாய் மிகவும் தலை வலியோடு சரீர வேதனையோடும் கூட கஷ்டப்பட்டு கொண்டிருப்பதாக கூறினார்கள். நான் அவர்களை

அழைத்துக் கொண்டு வரச் சொன்னேன்! அவர்கள் வந்த போது அவர்களுக்காக ஊக்கமாக ஜெபித்தேன். அவர்களுக்கு தலைவலி மிகவும் அதிகமாக இருந்தபடியினால் அவர்கள் அப்படியே கட்டிலில் படுத்திருந்தார்கள். சரீரம் முழுவதும் நடுங்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று எனக்கு அந்த முட்டையின் ஞாபகம் வந்தது. நான் அதில் பாதியை சாப்பிட்டு விட்டு மீதியை அப்படியே வைத்திருந்தேன். அந்த முட்டையைப் போய் எடுத்து அதன் மேல் கைகளை வைத்து ஜெபித்து அதை தூக்கி எறிந்து மீண்டும் அந்த சகோதரிக்காக நான் ஊக்கமாக ஜெபித்தேன்.

கர்த்தர் உடனே அந்த சகோதரிக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இமைப் பொழுதிலே அவர்கள் விடுதலை அடைந்து எழுந்து உட்கார்ந்தது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாய் இருந்தது. ஐயா என்னுடைய வேதனை எல்லாம் இமைப் பொழுதிலே ஓடிவிட்டது! தற்போது நான் பூரண சுகமாக இருக்கிறேன்.

சகோதரியைப் பார்த்துக் கேட்டேன். அம்மா இந்த முட்டையைப் பொரித்தது யார்? நீங்கள் முட்டையைப் பொரித்துக் கொண்டிருக்கும் போது வேறு யாரேனும் வீட்டிற்கு வந்தார்களா என்று கேட்டேன்.

ஏனென்றால் ஆண்டவர் என் கண்களுக்கு அந்நேரத்தில் ஒரு மலையாள மந்திரவாதியை காண்பித்தார். நான் அதைக் குறித்து அவர்களிடத்தில் விசாரித்தேன்.

அதற்கு அந்த வீட்டுக்காரர் சொன்னார். 'ஐயா எங்களுடைய வீட்டைப் பூட்டி இருந்தோம். ஆனால் பூட்டியிருந்த வீட்டிற்குள்ளாக ஒருவர் நடந்து வந்ததை நான் பார்த்தேன். மதியம் மூன்றரை மணி போல் இருக்கும் என் மனைவி உங்களுக்கு முட்டை தயார் படுத்திக் கொண்டிருந்தாள். என்னுடைய கண்களுக்கு அந்த மந்திரவாதியை போன்ற உருவம் வீட்டிற்குள் வந்ததை உணர முடிந்தது. உங்களுடைய ஜெப எண்ணெயை பார்த்து முறைத்து விட்டு அவன் உள்ளே சென்றான். அவன் நிழல் போல் சென்றபடியினால் நானும் அவனை பின்னால் தொடர்ந்து போனேன். ஆனால் அவன் அங்கே காணோம். அதன் பின் தான் என் மனைவி முட்டை பொரித்து எடுத்துக் கொண்டு வந்தாள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்'' என்றார்.

அதற்கு பிறகு கர்த்தர் எனக்கு தரிசனத்தில் அந்த மந்திரவாதி எப்படி வந்தான்? என்ன செய்தான் என்பதை எல்லாம் தெளிவாக வெளிப்படுத்திக் கொடுத்தார். அது மாத்திரமல்ல. நான் வல்லமையோடு ஜெபித்த போது கர்த்தர் அந்த நோய்க்கு மந்திரவாதியின் வல்லமையிலிருந்து பரிபூரணமாக விடுதலையைத் தந்தார்.

அந்த நாளில் இயேசு என்னையும் என் மகனையும் கிருபையாய் காத்துக் கொண்டார். என் கண்கள் கண்ட அற்புதங்களை நான் நினைக்கும் போது கர்த்தர் எவ்வளவு ஆச்சரியமும் அதிசயமுமானவர் என்பதை நினைத்து என் உள்ளம் நன்றியால் பொங்குகிறது. வேதம் சொல்லுகிறது: **'தேவனால் பிறந்தவன் தன்னைக் காத்துக் கொள்கிறான். பொல்லாங்கன் அவனைத் தொடான்''** இது எத்தனை உண்மையான ஒரு வசனம். ஒரு மனிதன் கர்த்தரை நெருங்கி வரும்போது அவனுக்கு அவர் யாவையும் செய்கிறார். **'எந்த ஒரு ஊழியன் தேவனை கனம் பண்ணுகிறானோ, அவனை நிச்சயமாக கர்த்தர் கனம் பண்ணி ஆசீர்வதிக்கிறார்.'**

ஒரு வாலிபப் பையனுக்கு விரோதமாக சூனியம் வைத்து அவன் பயங்கரமாக வீட்டின் கதவுகளை உடைத்து எல்லோரையும் அடித்துக் கொண்டிருந்தான். என்னை சென்னை போலீஸ் மோகன் கூப்பிட்டுச் சென்றார். களைத்து போயிருந்த நேரம். ஆண்டவரே உமது தூதர்களை அனுப்பும், களைத்திருக்கிறேன் என்று ஜெபித்துக் கொண்டே ஆட்டோ ரிக்ஷாவில் அந்த வீட்டின் முன் நின்றேன். அந்த வாலிபன் பாய்ந்து என்னைத் தாக்க வந்தான். அவன் தெருவில் பறந்து வந்தது போல் இருந்தது. ஆனால் ஒரு தேவ தூதன் அவனைத் தட்டிப் போட்டதை உணர்ந்தேன். ஒரு ஆட்டுக்குட்டியை அடக்கினது போல் கர்த்தர் அடக்கிப் போட்டார். அந்த வாலிபன் விடுதலை அடைந்து சுகதேகியாக பரிசுத்த வாழ்வு வாழ்கிறான்.

நாங்கள் ஊழியங்களுக்குச் செல்லும் போதெல்லாம் கர்த்தர் என்னைக் காத்துக் கொள்வது மட்டுமல்லாமல், என்னோடு பிரயாணம் செய்கிறவர்களையும் அவர் காத்துக் கொள்கிறார். நான் யார் யாருக்கெல்லாம் ஊக்கமாக ஜெபிக்கிறேனோ அவர்களையும் கர்த்தர் காத்து வழி நடத்துகிறார். அல்லேலூயா!

அத்தியாயம் 7

சிங்கத்தின் வாயைக் கட்டின தேவன்!

'கர்த்தர் தானியேலின் பட்சம் நின்றார். அவனுக்கு உதவி செய்து சிங்கத்தின் வாயைக் கட்டிப்போட்டார். சிங்கம் அவனைச் சேதப்படுத்தவில்லை' – தானி 6:20.

காரணம், என்ன தெரியுமா? தானியேல் ஒரு நல்ல ஜெப வீரன். இரவும், பகலும் கர்த்தருடைய முகத்தைப் பார்த்து ஜெபிக்கிறவன். அவனுடைய விரோதிகள் இவ்விதமாய் அவன் தன்னுடைய பலகணிகளை எருசலேமுக்கு நேராக திறந்து வைத்து ஜெபிக்கிறதைக் கண்டார்கள். ஆனால், ராஜாவோ அவன் இடைவிடாமல் தேவனை ஆராதித்துக் கொண்டிருக்கிறதைக் கண்டார். ஆகவேதான் கர்த்தர் அவனுக்காக சிங்கங்களின் வாயைக் கட்டிப் போட்டார். அல்லேலூயா!

அருமையான தேவனுடைய பிள்ளையே, நாம் வேதத்தை வாசிக்கும் போது ஏதோ ஒரு கதையையோ, சரித்திரத்தையோ வாசித்து விட்டு செல்வது போல எண்ணாமல், தேவன் அன்று செய்த எல்லா செயல்களையும் அற்புதங்களையும் இன்றைக்கும் செய்ய வல்லவராக இருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். அவருடைய வாக்குத் தத்தங்களை அப்படியே நம்பி, ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறதாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கர்த்தர் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் நம்முடைய வாழ்க்கையில் செய்தருளுவார்.

இன்று நம்முடைய ஊழியர்களுக்கு விரோதமாக சிங்கங்கள் எழும்பி வருகிறது. சாத்தான், பிசாசுகளையும் மந்திரவாதிகளையும் சர்ப்பங்களையும் தேள்களையும் கொண்டு வருகிறான். அசுத்த ஆவிகளைக் கட்டும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். சத்துரு கெர்ச்சிக்கிற சிங்கம் போல வரும்போது தானியேலின் தேவனை நினைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களுடைய வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்ய வல்லமையுள்ளவர்.

எனக்கு ஒரு அருமையான நண்பர் உண்டு. அவர் பெயர் திரு. வின்சென்ட் ராஜேந்திரன். எங்கள் ஊரில் தலைமை ஆசிரியராக உள்ளார். சிறு வயதில் இருந்தே நாங்கள் நெருங்கின நண்பர்கள். அவருடைய வீட்டைச் சுற்றி பெரிய தோட்டங்களும் நிலங்களும்

உண்டு. அங்கு ஏராளமான நல்ல பாம்புகள் உண்டு. அந்த ஏராளமான நல்ல பாம்புகளை அவர் அடித்துக் கொல்லுவார், சுட்டும் வீழ்த்துவார். எப்பொழுதும் பாம்புகளுக்கும் அவருக்கும் இடையே ஒரே போராட்டம்தான்.

ஊழியத்தின் துவக்கத்தில் ஒருநாள் நான் அவருடைய வீட்டிற்குப் போனபோது அவர் பாம்புகளினால் வருகிற தொல்லைகளை எல்லாம் விவரித்தார். நான் மிகவும் ஊக்கமாக ஆண்டவரே, உம்முடைய அதிசயமான நாமத்தினாலே இங்கே வருகிற சர்ப்பங்களின் வாயைக் கட்டிப் போடுகிறேன். அவைகள் எந்த சேதமும் செய்யாதபடி பாதுகாத்துக் கொள்ளும் என்று சொல்லி ஜெபித்தேன்.

இது ஒருவேளை உங்களுக்கு ஒரு சாதாரணமான ஜெபமாக, எளிதான ஒரு காரியமாகத் தோன்றலாம். நானோ உண்மையும், உத்தமுமாய் வேண்டிக் கொண்டேன். அந்த நாட்கள் என்னுடைய விசுவாசம் வளர்ந்து வந்த நாட்கள் என்னுடைய நண்பர் அந்த ஜெபத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

நான் ஜெபித்த சில நாட்களுக்குப் பிறகு அவருடைய வீட்டில் உள்ள நாய்கள் ஏராளமான குட்டிகள் போட்டது. ஒரு நாள் இரவில் நல்ல இருட்டில் அவர் வீட்டிற்குள் வந்த போது ஒரு நாய்க் குட்டி வாள் வாள் என்று கத்திக் கொண்டேயிருந்தது. அவர் இருட்டு என்று பொருட்படுத்தாமல் அந்த திசையை நோக்கி ஓடி அந்த நாய்க் குட்டியை தூக்கியெடுத்து பாதுகாப்பான வேறொரு இடத்தில் வைத்தார். அது அமைதியானது.

ஐந்து நிமிட நேரத்திற்கு பிறகு மற்றொரு நாய்க்குட்டி வாள் வாள் என்று கத்த ஆரம்பித்தது. அவர் மீண்டும் அந்த இருட்டிற்குள் சென்ற சத்தம் வந்த திசையை நோக்கிப் போய் அந்த நாய்க் குட்டியை தூக்கியெடுத்தார். அதை மறுபக்கத்தில் யாரோ பிடித்திருப்பது போல் தோன்றியது.

பிறகு வீட்டில் இருந்த டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு வந்து சுற்றிப் பார்த்த போது, அங்கே ஒரு பயங்கரமான நாகப் பாம்பு நாய்க் குட்டிகளின் நடுவில் படமெடுத்து நின்று கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அவருக்கு அந்த இரண்டு நாய்க்குட்டிகளையும் நல்ல பாம்பின் வாயில் இருந்து எடுத்தது தெரிய வந்தது! அந்தப் பாம்பு நாய்க்குட்டிகளை விழுங்கப் போகிற நேரம் அவர் அதைப் பிடித்து காப்பாற்றி எடுத்ததை தெளிவாக அறிந்து கொண்டார். அந்தப் பாம்பு அந்த இடத்திலேயே நின்று படமெடுத்துக் கொண்டிருந்தது. அவர் போய் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்து சுட்டுக் கொன்று போட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு நான் அவரைச் சந்தித்த போது சூழ உள்ள ஆட்களிடம் சொன்னார். 'இதோ சர்ப்பங்களையும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கட்டுகிறேன். தானியேலின் ஜெபத்தைக் கேட்டு சிங்கத்தின் வாயைக் கட்டுகிற தேவனுடைய நாமத்தினால் கட்டுகிறேன் என்று சொல்லி என் நண்பர் ஜெபித்தார். அந்த ஜெபம் எவ்வளவு வல்லமையுள்ளதாய் இருந்திருக்கிறது பாருங்கள்' என்று கூறி மிகவும் ஆச்சரியப்பட்டார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமையான தேவனுடைய பிள்ளைகளே, லூக் 10:19ஐ வாசித்துப் பாருங்கள். **'இதோ சர்ப்பங்களையும், தேள்களையும், மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமைகளையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது'** என்று கிறிஸ்துவே நமக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். ஏன் அந்த அதிகாரத்தை நாம் பயன்படுத்துவதில்லை?

சங்கீதம் 91:13ஐ வாசித்துப் பாருங்கள். **'சிங்கத்தின் மேலும் விரியின் பாம்பின் மேலும் நீ நடந்து, பால சிங்கத்தையும் வலுச் சர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்'** என்று கர்த்தர் வாக்குத்தத்தம் கொடுத்துள்ளாரே! அந்த வல்லமையை பெறுவோமா?

ஒருமுறை நான் வண்டிப் பெரியாறில் ஊழியத்திற்குச் சென்றிருந்த போது, அங்கே ஒரு சகோதரன் என்னை சந்தித்தார். அவர் சொன்னார்: 'ஐயா என்னுடைய வீட்டின் அருகில் ஏலக்காய் எஸ்டேட்டில் இரண்டு நல்ல பாம்புகள் இருந்து மகா பெரிய தொல்லை கொடுக்கிறது. இரண்டு பெரிய நாய்களைக் கூட கொன்று விட்டது. ஒன்றை அடித்து விட்டார்கள். மற்றதோ மகா பெரிய தீமை செய்கிறது. இரவு அங்கு நடமாட கூட முடியாமல் போகிறது' என்றார்.

அந்த வீட்டிற்கு என்னை ஜீப்பில் அழைத்துச் சென்றார்கள். நான் அந்த வீட்டை நெருங்கின போது அங்குள்ள ஆட்களும் கூட வந்து ஐயா, அநேகர் வந்து பார்த்து விட்டுப் போனார்கள். அந்தப் பாம்பை யாராலும் பிடிக்க முடியவில்லை. அது மிகவும் பயங்கரமாய் இருக்கிறது. நாங்களும் ஏதேதோ செய்து பார்த்து விட்டோம் என்று சொன்னார்கள்.

அப்பொழுது நான் ஜெபித்தேன். ஆண்டவரே, நீர் வல்லமையுள்ள தேவனாக இருக்கிறீர். உம்முடைய வல்லமையால் நீர் இப்பொழுது இந்த சர்ப்பத்தின் வாயைக் கட்டிப் போட வேண்டும். தானியேல் 6:20இன்படி நீர் அன்றைக்கு சிங்கத்தின் வாயைக் கட்டிப் போட்டது போல இன்று நான் இந்த சர்ப்பத்தின் வாயைக் கட்டிப் போடுகிறேன் என்று சொல்லி ஜெபித்தேன்.

மட்டுமல்ல, ஒரு செம்பிலே தண்ணீர் எடுத்து அதை இயேசுவின் இரத்தமாக மாறும்படி ஜெபித்து ஆண்டவரே, இந்தத் தண்ணீர் தெளிக்கக் கூடிய இடங்களில் எல்லாம் உம்முடைய தூதன் வந்து நிற்க வேண்டும். ஏனென்றால், எபி 1:14லிலே கர்த்தர் பணிவிடை ஆவிகளாக தேவதூதனை கொடுத்திருக்கின்றீர் என்று சொல்லி ஜெபித்து விட்டு நான் போய்விட்டேன்.

ஏறக்குறைய இரண்டு நாட்கள் கழித்து அங்கு உள்ளவர்கள் சொன்னார்கள். ஐயா, இரண்டு நாட்களாக பாம்பு எந்த தொல்லையும் கொடுக்கவில்லை. நீங்கள் எந்த இடத்திலிருந்து ஜெபித்தீர்களோ அந்த இடத்திற்கு சற்று மேலேதான் ஒரு சந்தில் அந்தப் பாம்பு இருந்திருக்கிறது. அது இரண்டு நாட்களாக எங்கும் போகாமல் அங்கேயே இருந்து விட்டது. அங்கேயுள்ளவர்கள் போய் அதைப் பார்த்துத் துரத்தின பின்பு அது கீழே குதித்து விட்டது. சிறிது தூரம் சென்றது. பின்பு அதனால் முன்னும் பின்னும் செல்ல முடியவில்லை. பின்னும் செல்ல முடியவில்லை. அது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஏன் இந்தப் பாம்பு ஓடாமல் இருக்கிறது? இது வேகமாக ஓடி மறைந்து விடுமே? என்று சொல்லி பிரமித்தார்கள்.

அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்: வந்தவர் தேவதூதனை அனுப்பி இந்தப் பாம்பை பிடிக்கும்படி கட்டளையிட்டார் அல்லவா? உங்களுக்குத் தெரியாதா? தேவ தூதர்கள் இந்தப் பாம்பைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாம் அதை எளிதாக அடித்து விடலாம் என்று சொல்லி அவர்கள் கையிலே கம்பும், தடியும் எடுத்துக் கொண்டு வந்து மிகவும் எளிதாக அடித்து விட்டார்கள்.

அற்புதங்களைச் செய்கிற தேவன் இன்றைக்கும் ஜீவிக்கிறார். தானியேலின் தேவன் இன்றைக்கும் மகிமையான காரியங்களைச் செய்து கொண்டேயிருக்கிறார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தேவன் நமக்கு துணை நிற்கும்படி தேவதூதர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார் என்பது சத்திய வாக்கு. லூக் 19:19ஐ எப்போதும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். என் ஊழியத்திற்கு அது மிகவும் பிரயோஜனமாய் இருந்திருக்கிறது.

ஒருமுறை நான் ஒரு ஊரில் ஊழியம் செய்து கொண்டிருந்த போது என் வாட்சை ஒருவன் திருடி விட்டான். அங்குள்ள ஊழியக்காரர் அதைக் குறித்து விசாரித்துக் கொண்டிருந்தார். ஒருவன் மேல் சந்தேகப்பட்டு அந்த ஊரில் இருந்த ஊழியக்காரர் சிலர் ஆத்திரமான வார்த்தைகளைச் சொல்லி விட்டார். அவ்வளவு

தான் அந்த வாட்சை எடுத்தவன் மீண்டும் அந்த வாட்சை எடுத்துக் கொண்டு வந்து அதே இடத்தில் வைத்து விட்டு, அவன் என் மேல் மிகவும் கோபங்கொண்டு, வாட்ச் அதிலேயே தானே இருக்கிறது. நீங்கள் வீணாய் என் மேல் சந்தேகப்பட்டு விட்டீர்களே என்று கோபப்பட்டான்.

அன்று மாலை அந்த ஊரில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் மேடையில் நான் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தேன். ஏறக்குறைய இருபது பேர் சைக்கிளில் வந்து பின்னால் நின்று கொண்டிருந்தனர். கூட்டம் முடிந்து நான் என் அறைக்கு வந்தபோது அத்தனை பேரும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்.

என்னைக் கண்டவுடன் அவர்கள், நீ இவ்வளவு நேரம் எங்கே இருந்தாய்? என்று கேட்டார்கள். அந்தக் கேள்வி எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. நான் சொன்னேன். நீங்கள் எல்லோரும் பார்க்கக் கூடிய வகையில் நான் தானே பிரசங்கித்தேன். ஏராளமான பாடல்களும் பாடினேன் என்றேன்.

அதற்கு அவர்கள் நாங்கள் உன்னை அடிக்கும்படியாக வந்தோம். இப்போதும் அதற்காகத்தான் இருக்கிறோம். ஆனால் இவ்வளவு நேரம் நீ எங்கே இருந்தாய் என்று எங்களுக்குத் தெரியவில்லை. நீ மேடையில் இருந்ததாக பொய் சொல்லுகிறாயே என்றார்கள்.

நான் கர்த்தரிடத்தில் அமைதியாய் ஜெபித்தேன். கர்த்தாவே நீர் எப்படி எலியாவிடமும் எலிசாவிடமும் இருந்தீரோ அப்படியே இந்த ஏழை ஊழியனாகிய என்னோடும் இருக்கின்றீரே என்று துதித்தேன். கர்த்தர் எனக்கு எந்தச் சேதமும், இல்லாமல் அவர்களுடைய கைகளில் இருந்து என்னையும் உடன் ஊழியர்களையும் காத்துக் கொண்டார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, உனக்கு விரோதமாய் ஜனங்கள் அசுத்தமான வார்த்தைகளைப் பேசிக் கொண்டு உன்னுடைய உள்ளத்தைப் புண்படுத்துகிற வேதனையான காரியங்களைச் சொல்லி உன்னை அடிக்கவும், கொல்லவும், நிர்மூலமாக்கவும் வரும்போது நீங்கள் பயப்படாமல் இருங்கள். தேவனாகிய கரத்தரை உங்களுடைய பக்கத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு வருகிற சகல ஆபத்துகளிலும் அவர் உங்களோடிருந்து உங்களை விடுவிப்பார்.

கர்த்தருக்குச் சித்தமில்லாதபடி நம்முடைய தலையிலிருந்து ஒரு முடி கூட விழுவதில்லை. வேதம் அதை நமக்கு வாக்குத்தத்தமாக சொல்லவில்லையா? அந்த வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொண்டு ஜெயம் பெறுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் – 8
மறை பொருள்களை அறிவிக்கும் இயேசுவே!

கணவனுக்கும் மனைவிக்கும் பிரச்சினை ஏற்பட்டு அதனால் பிரிந்திருக்கும் அநேக குடும்பங்களுக்காக நான் ஜெபித்திருக்கிறேன். குடும்பங்களில் பிரச்சினைகள் வருவதினால் ஏற்படும் வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. பிள்ளைகள் அநாதைகளைப் போல தவிப்பார்கள். குடும்பத்தில் நிம்மதியும் அற்றுப் போகும். இப்படிப்பட்ட குடும்பபங்களின் கண்ணீரை கர்த்தர் துடைக்க இரக்கமுள்ளவராய் உள்ளார். உடைந்து போன அநேக குடும்பங்களை கர்த்தர் இணைத்திருக்கிறதை என் ஊழியங்களில் கண்டிருக்கிறேன். இனி இந்த குடும்பம் ஒன்றாய் சேராது என்று கைவிடப்பட்டவர்களின் வாழ்க்கையிலும் கர்த்தர் பெரிய அற்புதங்களைச் செய்திருக்கிறார்.

ஒரு குடும்பத்திற்காக ஜெபிக்கும்படி நான் அழைக்கப்பட்டிருந் தேன். அந்தக் குடும்பத்தில் கணவன் மனைவியை விட்டு விட்டு எங்கோ போய்விட்டார். ஏழு ஆண்டுகள் காலமாக அவர் எங்கே போனார், எங்கே இருக்கிறார் என்று யாருக்கும் தெரியவில்லை. அதைப் பற்றி எந்த செய்தியும் கிடைக்கவில்லை. ஆனால் அந்தக் குடும்பத்திற்காக நான் ஊக்கமாக ஜெபித்த போது சில நாட்களுக்குள் அந்த சகோதரியின் கணவன் அற்புதமாய் வீடு வந்து சேர்ந்தார். அந்தக் குடும்பம் ஒப்புரவானது. இப்போது அவர்கள் மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள்.

நான் பாளையங் கோட்டைக்கு சென்றிருந்த போது ஒரு சகோதரி ஜெப விண்ணப்பத்தோடு கூட வந்திருந்தார்கள். காரணம் அவர்களுடைய கணவனார் அவரை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் தனிமையாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நான் ஜெபித்து விட்டு, இன்னும் 40 நாட்களில் உங்களுடைய கணவரிடத்திலிருந்து செய்திகள் கேட்பீர்கள். உங்களுடைய குடும்பம் ஒன்றாகும் என்று சொன்னேன். அப்படியே சில நாட்களுக்குள் அவரிடத்திலிருந்து அந்த சகோதரிக்கு அன்புடன் கடிதம் வந்தது. அவர்கள் ஒப்புரவாகி சமாதானமானார்கள். அருமையான தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர் மாத்திரமல்ல.

ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறவராகவும் இருக்கிறார். அவருடைய நாமத்தின் மகிமைக்காக நாம் எதைக் கேட்டாலும் அவர் அதை செய்தருளுகிறார். வேத வாக்கியங்களை வாக்குத் தத்தமாக பற்றிக் கொண்டு ஊக்கமாக ஜெபிக்க வேண்டியது நமது கடமை. யோவான் 14:14 இல் வாசித்துப் பாருங்கள். அங்கு இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்கும் எத்தனை அருமையான வாக்குத் தத்தம் கொடுக்கிறார். '**என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்**' என்கின்றார்.

அநேக பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளைக் குறித்து பாரமடைகிறார்கள். பிள்ளைகள் சரியாக வளர வில்லையே, பிள்ளைகளுக்கு போதிய ஞானம் இல்லையே; பிள்ளைகளுடைய எதிர்காலம் எப்படி இருக்குமோ என்றெல்லாம் எண்ணி கலங்குகிறார்கள். அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் உங்களுடைய பிள்ளைகளை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யுங்கள். இனிமேல் தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக எங்கள் பிள்ளைகளை வளர்ப்போம் என்று உறுதி கொள்ளுங்கள். தேவன் அற்புதமாக நடத்துவார்.

அநேகர் ஜெபிக்கும் போது அது வேண்டும், இது வேண்டுமென்று ஆண்டவரை நச்சரித்துக் கேட்பார்கள். அப்படிக் கேட்காமல், 'ஆண்டவரே, உம்முடைய நாமத்தின் மகிமைக்காக இதைச் செய்யும். ஆண்டவரே உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும். உமக்குச் சித்தமானால், இதைக் கொடும். ஆண்டவரே, உம்முடைய நாமத்தின் மகிமைக்காக நீர் அற்புதம் செய்தால், நான் உமக்கு சாட்சியாய் இருப்பேன்' என்று கேளுங்கள். அப்பொழுது கர்த்தர் நிச்சயமாக உங்களுடைய வேண்டுதலுக்கு செவிகொடுப்பார்.

கர்த்தரிடத்தில் ஆவிக்குரிய காரியங்களைக் கேளுங்கள். உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்களை விரும்புங்கள். தீர்க்கதரிசன வரங்களை நாடுங்கள்.

கர்த்தர் எனக்குக் கொடுத்த வரத்தின் வல்லமையை மற்றவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். '**தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டுப் போவார்கள் என்று வேதம் சொல்கிறது**' – நீதி 20:18. கடைசி நாளில் '**மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உள்ள குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள். வாலிபர்கள் தரிசனங்களைக் காண்பார்கள். மூப்பர்கள் சொப்பனங்களைக் காண்பார்கள்**' என்று அவர் வாக்குப் பண்ணியிருக்கிறார் – அப் 2:17.

என்னுடைய ஊழியத்தில் எரேமியா 33:3ஐ வாக்குத்தத்தமாக பற்றிக் கொண்டு ஜெபிக்கிறேன். அப்பொழுது கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுத்து அநேக காரியங்களைச் செய்கின்றார். கர்த்தர் சொன்னார்: '**என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமாகிய பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்**' என்று வாக்குப்பண்ணி இருக்கிறார்.

தேவ பிள்ளையே, உன்னுடைய புத்திக்கெட்டாத பெரிய காரியங்களை கர்த்தர் உனக்குச் செய்வார். நீ நினைக்கலாம் இது மனுஷனால் கூடாதது. இது எங்கே நிறைவேறும்? கர்த்தர் எங்கே பதில் அளிக்கப் போகிறார்? என்று நீ எண்ணி இருக்கக் கூடும். ஆனால் '**மனிதரால் கூடாதது தேவனால் கூடும்**' என்பதை மறந்துவிடக் கூடாது.

புதுக்காடு என்ற ஒரு எஸ்டேட் இருக்கிறது. அது கேரளாவில் சூரங்கிஸாறு எஸ்டேட்டின் அருகே இருக்கிறது. அந்த எஸ்டேட்டில் சரியான விளைச்சல் இல்லை. எல்லாம் நஷ்டமாக இருக்கிறது. ஆகவே நீங்கள் இங்கு வந்து ஜெபிக்க வேண்டுமென்று சகோதரர் தனசிங் என்பவர் என்னை அழைத்தார். எஸ்டேட் சொந்தக்காரர் மனைவி இந்துவாய் இருந்து சமீபத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு பல விதமான வியாதிகளும் நோய்களும் இருந்தது. கட்டிடங்களும் மரச்சாமான்களும் பாதி செப்பும் பாதி செப்ப முடியாத அளவில் கிடந்தது.

நானும், இன்னும் சில சகோதர சகோதரர்களுமாக ஜெபிப்பதற்காக அங்கு சென்றோம். நான் ஆண்டவரிடத்தில் 'ஆண்டவரே, அவர்கள் எங்களை ஜெபிக்க அழைத்திருக்கிறார்களே, நாங்கள் என்ன ஜெபிக்க வேண்டும்? என்ன சொல்ல வேண்டும்? என்பதை எங்களுக்கு வெளிப்படுத்தும்' என்றேன்.

ஆவியானவர் எங்களை நேராக எஸ்டேட்டுக்குள் போகும்படி வழி நடத்தினார். போகும் வழியில் அங்கு உள்ளவர்கள் எங்களுக்கு டீ கொடுத்தார்கள். அதைச் சாப்பிட்டுவிட்டு போங்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஆவியானவரோ, எங்களை துரிதமாக ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வழி நடத்திச் சென்றார். அங்கே போனபோது எல்லையிலே ஒரு கல்லறை இருந்தது. ஆவியானவர் என்னை அந்த இடத்தில் நிறுத்தி சில வெளிப்பாடுகளைக் கொடுத்தார். கர்த்தர் சொன்ன காரியங்களைக் குறித்து நான் விசாரித்தபோது, 'ஆம் ஐயா, நீங்கள் சொல்வது எல்லாம் உண்மை

என்று ஆமோதித்தார்கள். கர்த்தர் எதைக் குறிப்பிட்டு ஜெபிக்கச் சொன்னாரோ அதை செய்தேன். மேலும் போராட்டங்கள் நீங்க சிறிது தண்ணீரை எடுத்து ஜெபித்து அந்த எல்லையில் தொல்லை செய்து வரும் ஆவியை கடிந்து கொண்டு அந்த தண்ணீரை அவரிடமே கொடுத்து இதை உங்கள் எல்லையெங்கிலும் சென்று தெளித்து வாருங்கள் என்று அனுப்பினேன்.

அவர் சென்ற போது ஏதோ ஒன்று மிகுந்த சத்தத்தோடே புறப்பட்டுச் செல்வதை அவர் உணர்ந்ததாக என்னிடம் வந்து சொன்னார். அன்று முதல் ஒரு பெரிய விடுதலையை கர்த்தர் அந்த எஸ்டேட்டுக்கு கட்டளையிட்டார். ஆறு மாதங்கள் கழித்து நான் மீண்டும் அந்தப் பக்கம் போன போது அந்த இடத்தில் சாபங்கள் எல்லாம் மாறிப் போய் இருந்ததைக் கண்டேன். கட்டி முடிக்காமல் இருந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் நிலங்கள் நல்ல விளைச்சலைக் கொடுத்தது. குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன. அவர்களும் கர்த்தருக்குள் சாட்சிகளாய் மாறினார்கள்.

நம்முடைய தேவன் மறை பொருட்களை வெளிப்படுத்துகிறவர்! அந்தரங்கத்திலுள்ள பொக்கிஷங்களை எடுத்துத் தருகிறவர். நான் செய்யும் காரியங்களை ஆபிரகாமுக்கு மறைப்பேனா என்று கூறி தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்தினார். அவர் தம்முடைய ஊழியக்காரர், தீர்க்கதரிசிகளுக்கு அறிவிக்காமல் ஒரு காரியத்தையும் செய்யார் என்று வேதம் சொல்கிறது. அருமையான தேவனுடைய பிள்ளையே, உங்களுடைய குடும்ப காரியங்களை கர்த்தரிடத்தில் விசாரியுங்கள். மறை பொருள்களை வெளிப்படுத்துகிற தேவனே, ஏன் எனது குடும்பத்தில் கஷ்டம் நஷ்டம்? ஏன் பாடுகள்? ஏன் வேதனைகள்? என்று விசாரித்தால் கர்த்தர் அதற்கான காரணங்களையும் தீர்வையும் சொல்லித்தர வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

எத்தனையோ பேர் திருமண காரியங்களைக் குறித்தும் எதிர்காலங்களைக் குறித்தும் வியாபாரங்களைக் குறித்தும், பதில் சொல்ல முடியாத கேள்வியோடு கூட என்னை அணுகுவார்கள். தூத்துக்குடியில் எஸ்எல்எஸ் குடும்பத்தினர் தங்களுடைய வியாபாரம் மிகவும் நஷ்டமடைந்து கொண்டே இருப்பதாகவும், அதற்கு நான் ஜெபிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

நான் உடனே புறப்பட்டு அவர்கள் தொழில் ஸ்தாபனத்திற்கு சென்று அவர்களுக்காக ஊக்கமாக ஜெபித்தேன். ஆண்டவரே, இந்த தொழிலுக்கு விரோதமாக யாராவது மந்திரவாதம் செய்து

வைத்திருந்தால் வெளிப்படுத்தும். இதை எடுத்துப் போடும் என்று சொல்லி வந்து விட்டேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்களுடைய வியாபாரக் கிடங்கில் கிணற்றில் ஏதோ விழுந்தது. இறங்கிப் பார்த்த போது அங்கு மந்திரம் எழுதப்பட்ட தகடு கிடப்பதை பார்த்து அதை வெளியே எடுத்துப் போட்டார். நான் தகடுகளை எடுத்துப்போட வேண்டும் என்று சொல்லவில்லை. அவைகள் எங்கிருந்தாலும் தேவனுடைய வல்லமையினால் நிர்மூலமாகும் என்று நான் அறிவேன். ஆனாலும் கர்த்தர் அவைகளை வெளிப்படுத்தும் போது அதை எடுத்துப் போடுவது நல்லது.

தேவன் அந்த நாள் முதற் கொண்டு அவர்களை ஆசீர்வதிக்க சித்தம் கொண்டார். இப்போது அவர்கள் குடும்பமாய் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தேவனுக்கு சாட்சியாய், இருக்கிறார்கள். நான் அங்கு போகும் போதெல்லாம் ஊழியத்திற்கு பிரயோஜனமாக உள்ளார்கள். கர்த்தர் மறை பொருள்களை வெளிப்படுத்துகிற தேவன். கூப்பிடும்போது பதிலளிப்பார்.

தேவன் மறை பொருள்களை வெளிப்படுத்துவது மாத்திரமல்ல. எதிர்காலங்களின் திட்டங்களையும் வெளிப்படுத்துகின்றார். என் ஆரம்ப கால ஊழியங்களில் சென்னை இந்திய தேவ சபையில் கர்த்தருடைய பிள்ளைகளோடு கூட ஜெபிப்பேன். அநேக வாலிபப் பிள்ளைகள் ஜெபத்திற்கும் ஊழியத்திற்கும் என்னோடு சேர்ந்து கொள்வார்கள். கர்த்தரின் பிரசன்னம் எங்களுக்கு அளவில்லாத சந்தோஷத்தைத் தந்தது. வெளிப்பாடுகள் நிறைந்திருக்கும் கர்த்தர் அன்று கொடுத்த வாக்குத் தத்தங்களின்படி செய்த சில காரியங்களை கூறுகின்றேன்.

ஒரு நாள் வேதாகமக் கல்லூரி மாணவர்களோடு ஜெபிக்கும் போது பரிசுத்தாவி இறங்க வாலிபர்கள் பாடித் துதித்தார்கள். அன்று கர்த்தர் போதகர் பெஞ்சமின் மகனை நீ ஊழியத்தில் பிரவேசிப்பாய். வெளிநாடுகளில் தங்குவாய் என்று வாக்கு சொன்னார். அந்த தம்பி, ஜார்ஜ் பி.எஸ்சி படித்து விட்டு, வேலைக்காக முயற்சித்துக் கொண்டிருந்தார். கர்த்தரின் வாக்கின்படி ஆஸ்திரேலியாவில் படித்து அமெரிக்காவில் ஊழியராக போய் சேர்ந்தார். இன்று தேவசபை ஒவர்சீயராக இருக்கும் சகோதரன் வெல்லஸ்லி சாலமோனையும் கர்த்தர் உலக வேலையை விட்டு ஊழியத்திற்கு வா என்று கூறினார். அவரோ பயந்தார். கர்த்தரோ 'உயர்த்துவேன்' என்று வாக்குக் கொடுத்தார். அது நிறைவேறியது. ஒருமுறை கிறிஸ்துவ சகோதரன் என்னை கேள்விகள் கேட்க அதே இடத்திற்கு வந்தார். ஜெபித்த போது கர்த்தர் அவன் உள் பாக்கெட்டில் வைத்திருந்த

ஜாதகக் குறிப்பை சுட்டிக் காட்டி அதை எடுத்து வெளியே போடச் சொன்னார். அதன் பிறகு அவர் கேள்வி கேட்கவில்லை, ஜெபித்துக் கொண்டார்.

மதுரையில் இருதய வியாதியினால் மரண அவஸ்தையிலிருந்த சகோதரன் ராஜ் பொன்னையா அவர்களை கர்த்தர் விடுதலையாக்கினதை உங்கள் மத்தியில் சொல்கிறேன். அவர் திடீரென்று பயங்கர இருதய வலியினால் கஷ்டப்பட்டு மதுரை ஹார்லிராம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவரை நான் போய் பார்க்க வேண்டுமென்று சொல்லி எனக்கு அவசரமாக கடிதம் எழுதினார்கள். நானோ மதுரைக்கு காலதாமதமாகத்தான் சென்றேன். 27.7.88 ஆம் தேதி காலை மதுரையில் அவருடைய மகள் நான் தங்கியிருந்த அறைக்கு வந்து அழுதாள். என்ன என்று கேட்டபோது, ''அப்பாவுடைய சரீரத்தை வீட்டிற்குக் கொண்டு போகிறார்கள். நீங்கள முந்தி வந்திருந்தால் அப்பா பிழைத்திருப்பார்களே, இப்பொழுது எல்லாம் முடிந்து விட்டது'' என்றாள்.

விசுவாசத்தைப் பெலப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை. நான் வருகிறேன். அவரை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போக வேண்டாம். ஆஸ்பத்திரியில் இருக்கட்டும் என்று சொல்லி ஒரு மணி நேரம் கழித்து ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். நான் போன போது எல்லாம் முடிந்த நிலையில் இருந்தது. உறவினர்கள், அவரைக் கொண்டு போவதற்காக ஆயத்தமாய் இருந்தார்கள். பேதுரு, ''ஆண்டவரே அமிழ்ந்து போகிறேன். இரட்சியும்'' என்று சொல்கிற சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது – மத் 14:30.

அந்த நேரத்தில் தலைமை டாக்டர் அங்கு வந்தார். அவரோடு நான் வாதாடி இன்னும் சிறிது நேரம் வைத்திருங்கள் என்று சொன்னேன். இதற்கு மேல் என்ன செய்ய முடியும் என்று அவரும் என்னோடு விளக்கிப் பேசிக் கொண்டிருந்தார். நான் ஜெபிக்கப் போகிறேன். நேரம் தாருங்கள் என்று சொன்னேன். அப்பொழுது, அவர் நீங்கள் ஜெபிக்கலாம். இரண்டு மணி நேரம் கழித்து கொண்டு போய் விடுங்கள். யாரும் சத்தம் போட்டு அழக் கூடாது என்று சொல்லி கடந்து விட்டார். நான் அவர் படுத்திருந்த அறைக்குள் சென்று ஏசாயா 53:4,5–ஐ உறுதியாய் பற்றிக் கொண்டு ஜெபிக்க ஆரம்பித்தேன். '**அவர் தாமே நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்**' என்ற வார்த்தையைச் சொல்லி நான் ஜெபித்துவிட்டு, எல்லோரும் ஜெபத்தோடிருங்கள்

என்று சொல்லி விட்டு அந்த கதவருகே நின்று கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு பெரிய சத்தம் அந்த அறையில் இருந்து வந்தது.

அவர் ஆங்கிலத்தில் 'கர்த்தருடைய ஊழியக்காரர் வந்திருக்கிறார். நீ போ' என்று இரண்டு முறை சத்தமாகச் சொன்னார். மரித்துக் கொண்டிருந்த மனிதனுடைய வாயில் இருந்து இப்படிப்பட்ட ஒரு வார்த்தை சத்தமாக வருவது கஷ்டம். நான் அங்கிருந்த தாயாரைப் பார்த்து, இப்படி சத்தம் போட்டது யார்? என்று கேட்டேன். அவர்கள் எனக்குப் புரியவில்லை என்று சொன்னார்கள். கர்த்தருடைய பிரசன்னம் இருக்கிறது என்று உணர்ந்து கொண்டு ஜெபித்தேன். தேவன் அவர் ஜீவனைத் திருப்பிக் கொடுப்பேன் என்று வாக்குத் தத்தம் கொடுத்தார்.

மீண்டும் அந்த தலைமை டாக்டர் வந்து அவரைப் பார்த்து இந்த மனிதன் மோட்சத்துக்குப் போய்விட்டுத் திரும்ப பூமிக்கு வந்திருக்கிறான். இது ஒரு அற்புதம் என்று சொன்னார். அந்த குடும்பத்தாரோடு கூட சேர்ந்து ஜீவன் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரக் கூட்டமும் நடத்தி விட்டு வந்தேன்.

விருதுநகரில் சில குடும்பத்தார் கடந்த மாதங்களில் ஜெபத்திற்கு வந்திருந்தார்கள். அதில் ரதி மேதுரை என்ற சகோதரி சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டார்கள். ஜி.டி.டி. டெஸ்டும் நிரந்தரமான சர்க்கரை வியாதி என்று தீர்மானிக்கப்பட்டது. கர்த்தருடைய கரத்தில் அந்தப் பிள்ளையை ஒப்புக் கொடுத்து ஜெபித்து அனுப்பினேன். அந்த நாள் முதற்கொண்டு இந்த மூன்று மாதமும் சர்க்கரை நோய்க்கான அறிகுறி அந்தப் பிள்ளைக்கு வரவில்லையென்று கடிதம் வந்திருக்கிறது.

என் மனைவி அல்ட்ரா சோனகிராம் மூலமாக சிறு நீரகத்தில் கட்டி டியூமர் புற்று நோய் சம்பந்தப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டவள். ஜெபத்தோடு 1986 பிப்ரவரி மாதம் அறுவை சிகிச்சைக்காக ஆயத்தப்படுத்த ஆன்ஜியோகிராம் என்ற எக்ஸ்ரேக்காக அனுமதிக் கப்பட்டாள். அன்று கண்ணீரோடு ஜெபித்தேன். மாலை 6 மணி போல் யாரோ தூதர்கள் பாடுவதுபோல் என் காதில் கேட்டது.

'காரிருள் சூழ்ந்தாலும் பாடு
கடலாழங்களிலும் நீ பாடு
கலங்காதே திகையாதே பாடு
காத்திடும் கர்த்தனை நாடு – புகழ் சொல்லி'

இந்த பாடல் கேட்கும் போதே அந்த கட்டி இருந்த இடம் தெரியாமல் போனது. **'நானே உன் பரிகாரியான கர்த்தர்'** ஆமென். அல்லேலூயா!

அத்தியாயம் 9
கர்த்தர் பெரியவர்!

'உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்' - 1 யோவான் 4:4

நம்முடைய தேவன் பெரியவர்; அவர் வல்லமையுள்ளவர். மகத்துவமானவர். உலகத்திலுள்ள சகல அதிகாரமும் ஆளுகையும் அவருடையது. **'வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'** என்று நம்முடைய அருமை ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அவருடைய வல்லமையை வெளிப்படுத்துவது நமக்குக் கிடைக்கிற பாக்கியம் அல்லவா?

கோடம்பாக்கத்தில் அசெம்பிளிஸ் ஆப் காட் என்ற சபையில் போதகர் சார்லஸ் ஆரோன் என்ற தேவ ஊழியர் சபையை நடத்தி வருகிறார். அந்த சபை விரிவாக்கப்பட்ட போது அதற்கு ஜன்னலுக்காக மரங்கள் தேவைப்பட்டது. ஒரு குடும்பத்தினர் தங்கள் வீட்டிலுள்ள வேப்ப மரத்தை நன்கொடையாக கொடுத்தார்கள். இந்த மரத்தை அறுத்து வேண்டிய ஜன்னல் கதவுகளை செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்கள்.

ஆனால் அந்த வேப்பமரத்தில் பல அசுத்த ஆவிகள் குடி இருந்து கொண்டிருந்தன. மரத்தை அறுக்கச் சென்ற ஆட்களை அந்த அசுத்த ஆவி தாக்கியது. கூட இருந்த ஒரு பெண் பிள்ளையை இது அதிகமாகத் தாக்கியது. இன்னொருவர் மேலும் ஒரு அசுத்த ஆவி அலைக்கழித்துக் கொண்டு போய் ரயில் தண்டவாளத்தில் தள்ளியது.

அந்த அசுத்த ஆவி சொன்னது: நான்தான் இந்த மரத்திலுள்ள தேவதை. உங்களுக்கு வேறொரு மரம் கிடைக்கவில்லையா? ஏன் இந்த மரத்தை அறுக்கிறீர்கள்? ஏன் என்னை தொந்தரவு செய்கிறீர்கள்? என்றுகேட்டது. ஆகவே, அவர்கள் மேற்கொண்டு அறுப்பதற்குப் பயந்து அப்படியே நிறுத்தி விட்டார்கள்.

அருமையான பாஸ்டர் சார்லஸ் ஆரோன் என்னிடத்திலே இந்தச் சம்பவத்தைக் கூறினார். அப்படியா வாருங்கள் நாம் சென்று அதை அறுப்போம் என்று கூறி ஜெபித்து விட்டு நானும், பாஸ்டரும் சகோதரர் ஜெபக்குமார் இன்னும் சகோதரர்களுமாகச் சென்றோம். மரம் அறுக்கும் ஆட்களையும் அழைத்துக் கொண்டு போனோம்.

எல்லோரையும் பரிசுத்தமாக, தூய்மையாக வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

நாங்கள் அங்கே போகும் போது பக்கத்திலுள்ளவர்கள் எங்களைத் தடுத்தார்கள். நீங்கள் அந்த மரத்தின் அருகில் சென்றால், பஸ்பமாகி விடுவீர்கள் என்று எச்சரித்தார்கள். என்றாலும் நாங்கள் அருகில் நெருங்கி வெட்டத் தீர்மானித்தோம். நான் ஜெபித்தேன். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவனும் பரிசுத்த பேதுருவோடும் அப்போஸ்தலர்களோடும் இருந்து உலகத்தின் முடிவு பரியந்தம் இருப்பேன் என்று சொன்ன தேவனும் என்னில் வாசம் செய்கிறவராக இருக்கிறபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். பிதாவே, உம்முடைய வல்லமையுள்ள நாமத்தினால் இந்த மரத்தை அறுக்கிறோம். உலகத்தில் இருக்கிறவனைப் பார்க்கிலும் எங்களில் இருக்கிறவர் பெரியவர் என்று சொல்லி மரத்தை வெட்டினேன். என்னோடு சேர்ந்து பாஸ்டர் சார்லஸ் ஆரோன் அவர்களும் வெட்டத் தொடங்கினார்கள். அதற்குப் பிறகு அங்குள்ளவர்கள் வேகமாக வந்து பிடித்து அறுக்க ஆரம்பித்தார்கள். அந்த பிசாசால் பிடிக்கப்பட்டிருந்த அந்த மரம் இன்று ஆலயத்திற்கு ஜன்னலாக இருக்கிறது. அல்லேலூயா!

தேவ பிள்ளைகளே, கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற அதிகாரங்கள் மிகவும் பெரியது. அவற்றை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் பரிசுத்தம் தேவை. சிலருக்கு விசுவாசம் இருக்காது. ஜெபம் இருக்காது. ஜெபம் இருக்கும். ஆனால் பரிசுத்தம் இருக்காது. இப்படிப்பட்டவர்களால் தேவன் கொடுத்திருக்கும் அதிகாரங்களையும் வல்லமைகளையும் உபயோகிக்க முடியாது.

உபாகமம் 28:1 முதல் 11 வசனங்களில் கர்த்தர் அநேக வசனங்களை நமக்கு வாக்குத் தத்தமாக கொடுத்திருக்கிறார். **'நீ கீழாகாமல் மேலாவாய் வாலாகாமல் தலையாவாய்'** என்பது தேவனுடைய வாக்குத்தத்தம். அநேகர் விசுவாசிக்காத படியினாலும், ஜெப உரிமை பாராட்ட முடியாததாலும், இந்த வாக்குத் தத்தங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. சிலர் தங்களுக்குப் பூர்வீகமான சாபங்கள் இருக்கிறது. அதனால் தான் கஷ்டப்படுகிறோம் என்று சொல்லி விட்டுப் போய் விடுகிறார்கள். இன்னும் சிலருடைய வியாபாரங்கள் செழிப்பதில்லை. இதற்கு காரணமென்ன? தேவன் அவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை அவர்கள் உரிமை பாராட்டாததே காரணமாகும். கர்த்தரோ நம்மை ஆசீர்வதிக்க சித்தங் கொண்டிருக்கிறார். ஆனால், நாமோ அவருடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாதபடி தள்ளாடிக் கொண்டிருக்கிறோம். காரணம்,

அவருடைய வாக்குத் தத்தங்களை உரிமை பாராட்டி ஏற்றுக் கொள்ளாததினால்.

சிலர் பணத் தேவைகளோடு கூட, கடன் பிரச்சனையோடு கூட, ஜெபிக்க வருவார்கள். ஐயா, நீங்கள் ஜெபிக்கும்போது வியாதிகள் சுகமாகிறது. பிசாசுகள் ஓடி விடுகிறது. ஆனால் பணம் எப்படி வரும்? வானத்திலிருந்து விழுமா? அல்லது பரிசுச் சீட்டின் மூலம் கிடைக்குமா? என்றெல்லாம் கேட்கிறார்கள்.

கர்த்தர் இப்படித்தான் கொடுப்பார். அப்படித்தான் கொடுப்பார் என்றும் நாம் எண்ணி எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. கர்த்தர் எப்படியும் கொடுக்க வல்லமையுள்ளவர். வேதத்தை வாசித்துப் பாருங்கள். லட்சக்கணக்கான இஸ்ரவேல் ஜனங்களை அவர் எவ்வளவு அதிகமாய் போஷித்தார். வானத்தில் இருந்து மன்னாவைப் பொழியச் செய்தார். காடைகளைக் கொண்டு வந்து அவர்களுடைய கூடாரங்களின் அருகே குவித்தார். இரவெல்லாம் ஒரு மீனைக் கூட பிடிக்க முடியாமல் திணறின பேதுருவின் வலைகள் கிழியும்படியாக மீன்களைக் கொண்டு வந்து அற்புதத்தைச் செய்தார். தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றி தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார். நம்முடைய தேவன் அற்புதங்களின் தேவன். அவர் எப்படியும் அற்புதங்களை நிறைவேற்றுவார். '**அவர் ஆராய்ந்து முடியாத அதிசயங்களையும், எண்ணி முடியாத பெரிய காரியங்களையும் செய்கிறவர்**' என்று வேதம் சொல்லுகிறது.

பேதுருவும், யோவானும், பிறவி சப்பாணியைப் பார்த்த போது, அவர்கள் ஆவியிலே வைராக்கியம் கொண்டார்கள். '**பொன்னும், வெள்ளியும் என்னிடத்தில் இல்லை என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன் என்று சொல்லி அவனைத் தூக்கி விட்டார்கள்.**' அவன் நடந்தான், குதித்தான், தேவனை மகிமைப்படுத்தினான். அருமையான தேவ பிள்ளைகளே, நாமும் நமக்குத் தேவையான காரியங்களுக்காய் ஜெபிக்கும் போது வேத வசனத்தை வாசித்து, விசுவாசித்து அதின் படியே தேவனிடத்தில் மன்றாட வேண்டும்.

என்னுடைய ஊழியத்திலே வேலையில்லாத அநேகம் பேருக்கு ஜெபித்ததின் விளைவாக கர்த்தர் அவர்களுக்கு அற்புதமாய் அதிசயமாய் நல்ல நல்ல வேலைகளைக் கொடுத்திருக்கிறார். வேலை கிடைக்காத எந்த சாத்தியமும் இல்லாத வேளையிலும் கர்த்தர் ஜெபங்களைக் கேட்டு தமது வாழ்க்கையை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

சில குடும்பங்கள் கடனில் மூழ்கி போயிருக்கும். கடனை கட்டுவதற்கு எந்த நிர்வாகமும் இல்லாதபடி தவிப்பார்கள். 'ஐயா

எனக்கு அதிகமாகக் கடன் பிரச்சினை இருக்கிறது. யாரும் என்னை விடுவிக்கவில்லை. ஆயிரக்கணக்கில் பணம் யார் கொடுக்க இயலும்?' என்று சொல்லுவார்கள். ஆனால் வேதம் நீ அநேகம் பேர்களுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய் என்று திட்டமும் தெளிவுமாய் சொல்லுகிறது. கடனில்லாத ஜீவியத்தைத் தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார். ஆகவே கர்த்தர் நிச்சயமாகவே நம்மை ஆசீர்வதிக்கிறார்.

அநேக குடும்பங்களிலே கடன் வருவதற்கு ஒரு காரணம் உண்டு. அவர்கள் கர்த்தருடைய காரியத்தில் உண்மையில்லாமல் இருப்பதுதான். கர்த்தருக்குச் சேர வேண்டிய தசம பாகம் காணிக்கை கொடுக்க பிரியப்பட மாட்டார்கள். கர்த்தருக்குக் கொடுக்கும் போது கர்த்தர் நம்மை வானத்தின் பலகணிகளைத் திறந்து நிச்சயமாகவே ஆசீர்வதிப்பார்.

கர்த்தர் எனக்கு செல்வமும், செல்வாக்கும் கொடுத்த நாட்களில் நான் போதுமான அளவு கர்த்தருக்குக் கொடுக்க பிரியப்படவில்லை. ஏதோ கொஞ்சம் கொடுத்து விட்டு திருப்தியடைவேன். ஆகவே, என் சொத்துக்கள் கரைய ஆரம்பித்தது. ஆனால், நான் கர்த்தருடைய ஊழியத்திற்கு வந்த போதோ நானும், என் மனைவியும் கர்த்தருக்கு தசமபாகம் கொடுக்க தீர்மானித்தோம். கர்த்தருக்கு நாங்கள் தாராளமாக, மனப்பூர்வமாகக் கொடுத்த நாளிலிருந்து கர்த்தர் என்னுடைய குடும்பத்தை மிகவும் ஆசீர்வதித்தார். நானும் என் மனைவியும் தசம பாகம் கொடுக்கத் தவறியதில்லை. ஆகவே, சாதாரண டாக்டராக இருந்த என் மனைவியை மிகவும் அதிகமாய் உயர்த்தி தலைமை மருத்துவ அதிகாரியாக கொண்டு வந்தார்.

ஒருமுறை என்னுடைய குடும்பத்தில் மிகவும் நெருக்கடியான நிலைமை இருந்தது. என்னுடைய மனைவியின் சம்பளத்தை மாத்திரம் கொண்டு குடும்பத்தை நடத்துவதில், பிரச்சினைகள் ஏற்பட்டது. ஆனால், கர்த்தர் செய்த அற்புதத்தை என்னால் மறக்க இயலவில்லை. மிகவும் நெருக்கடியான நேரத்தில் அவளுக்கு திடீரென்று எதிர்பாராத ஒரு சம்பள பாக்கி கிடைத்தது. அவளுக்கு வரவேண்டிய பணம் கொஞ்சம் தான். ஆனால் அரசாங்கமோ, அவளுக்கு ரூ.20,000/– கொடுத்தது. பணத்தை அதிகமாக முதலில் கொடுத்து விட்டு, பின்பு மாதா மாதம் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக பிடித்தார்கள். எப்படி இந்த அதிசயம் நடந்தது என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது.

தேவன் என்னுடைய குடும்பத்தில் மாத்திரமல்ல, யார் யாருக்கு எல்லாம் பாரத்தோடு ஜெபிக்கிறேனோ, யார் யாருக்கெல்லாம் தேவன் மேல் விசுவாசம் இருக்கிறதோ, அவர்களுடைய வாழ்க்கையிலும், அந்த அற்புதத்தைச் செய்கின்றார். அநேகர்

என்னுடைய வியாபாரம் மந்தமாய் இருக்கிறது என்று சொல்லி ஜெபிக்க வருவார்கள். இன்னும் சிலர் நஷ்டப்பட்டு விட்டோம் என்று சொல்லி வருவார்கள். இன்னும் சிலர் கடன் பிரச்சினையைத் தாங்க முடியவில்லையே என்று சொல்லுவார்கள். கர்த்தருடைய பெயரால் அவர்களை ஆசீர்வதித்து அனுப்பும் போது, அவர்கள் மிகுந்த முன்னேற்றமடைந்து தாங்கள் பெற்ற ஆசீர்வாதங்களை மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருவேளை நீங்கள் கடன் பிரச்சினையில் தவிக்கலாம். ஆசீர்வாதம் இல்லாதபடி கஷ்டத்தில் இருக்கலாம். நான் ஒன்றை உங்களுக்குத் திட்டமாய் சொல்ல விருப்பப்படுகிறேன். நீங்கள் கர்த்தருடைய ஊழியங்களுக்கு மனப்பூர்வமாய் கொடுத்துப் பாருங்கள். கர்த்தருக்குச் சேர வேண்டிய தசம பாகத்தில் உண்மையுள்ளவர்களாய் இருங்கள். கர்த்தர் நிச்சயமாகவே உங்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார். நீங்கள் முதலாவது கர்த்தரிடத்தில் காணிக்கையை சரி செய்து கொள்ளும்போது அவர் உங்களை ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். நான் இப்படி எழுதுகிறேன் என்பதற்காக நீங்கள் எனக்கு பணம் அனுப்ப வேண்டுமென்று சொல்லவில்லை. கர்த்தருக்கு சேர வேண்டியதில் நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதே என்னுடைய நோக்கம். மல்கியா 3:10ஐ கவனியுங்கள்.

இந்தப் புத்தகத்தை எழுத ஆயத்தம் செய்ய உதவி செய்த ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளும் தசம பாகத்தை கர்த்தருக்கு என்று கொடுத்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டார்கள். கர்த்தர் அவர்கள் குடும்பங்களையும், தொழில்களையும், ஆசீர்வதிப்பாராக. தேவனை நேசித்து வந்ததினால், அவர்களுக்கு வருகிற ஆசீர்வாதத்தை தேவனுக்கு கொடுத்து அவருடைய ஊழியங்களை தாங்கி வருகிறபடியினால் இந்தப் புத்தகம் வெளிவர ஏதுவாகிறது.

இன்னும் அநேகக் குடும்பங்களில் கர்த்தருக்குக் கொடுக்க விருப்பப்படாமல், டாம்பீகமாக செலவு செய்ய விருப்பப்படுவார்கள். பேர் புகழுக்காக பல ஆயிரங்களை கொட்டுவார்கள். கல்லறைகள் கட்டுவதற்கு பல ஆயிரங்களை செலவு செய்வார்கள். ஆனால், ஏழை கர்த்தருடைய ஊழியக்காரர்களையோ புறக்கணித்து அவதூறு பேசுவார்கள். ஆகவே தான் அவர்களுடைய குடும்பங்களில் ஆசீர்வாதங்கள் ஏற்படுவதில்லை. தேவ பிள்ளையே, இன்று உறுதியான தீர்மானம் எடுத்துக் கொள். கர்த்தர் இன்று முதல் உன்னை ஆசீர்வதிப்பார். ஆமென்! அல்லேலூயா!

அத்தியாயம் 10

ஆரோனின் கோல்!

'நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார்' - மத் 14:16.

இயேசு நம்முடைய சீஷர்களை அழைத்துக் கொண்டு வனாந்தரத்திற்குச் சென்ற போது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள். கிறிஸ்து தொடர்ந்து அவர்களுக்குப் பிரசங்கித்தார்.

சாயங்காலமான போது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, 'இது வனாந்தரமான இடம். நேரமும் ஆயிற்று. ஜனங்கள் கிராமங்களுக்குப் போய் தங்களுக்குப் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி அவர்கள் போக வேண்டுவதில்லை. நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள்' என்றார்.

சீஷர்கள் அத்தனை திரளான ஜனங்களுக்குப் போஜனங் கொடுக்க எங்கே போவார்கள்? அவர்களுக்கு எந்த உதவியும் இல்லை! பணமும் இல்லை; வழியும் இல்லை.

தேவன் சீஷர்களுக்கு விசுவாசத்தை ஊட்டவும், விசுவாசத்தின் மூலமாய் அரிய பெரிய காரியங்களைச் செய்யவும் பழக்குவிப்பதற்கு சித்தங் கொண்டார். இதை வாசிக்கும் கர்த்தரின் ஜனமே, நாமே விசுவாசத்தில் வளர வேண்டும் என்பதே தேவனின் சித்தமாயிருக்கிறது!

ஒன்றுமில்லை என்கிற நிலைமையில் அற்புதத்தைச் செய்ய எப்போதும் தேவன் ஆவலாக இருக்கிறார். ஒரு சிறுவனின் கையிலிருந்த ஐந்து அப்பத்தையும், இரண்டு மீனையும் கொண்டு ஐயாயிரம் பேரை போஷிக்க தேவன் வல்லவராக இருந்தார்.

அநேகர் ஊழியம் செய்வதற்குப் பணம் வேண்டும், வசதி வேண்டும், வேன் வேண்டும், வருமானம் வேண்டும் என்று பலவாறு எதிர்பார்க்கிறார்கள். அதே நேரத்தில் கர்த்தர்

அற்புதத்தைச் செய்கிறவர் என்று விசுவாசிக்கிறதில்லை. அருமையான தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தருக்கு ஊழியம் செய்கிற எனக்கும் உங்களுக்கும் கர்த்தர் அற்புதத்தைச் செய்ய வல்லமையுள்ளவர். எங்கே இல்லாமை இருக்கிறதோ அங்கே அற்புதத்தைச் செய்ய தேவனுடைய வல்லமை வெளிப்படும். இதை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது - லூக்கா 16:21.

ஐசுவரியவான்களையும் செல்வந்தர்களையும் சந்திக்கும்படி கர்த்தர் இல்லாதவர்களை அபிஷேகம் பண்ணியிருக்கிறார். என்னுடைய ஊழியத்தில் நான் இப்படிப்பட்ட அதிசயங்களைக் கண்டிருக்கிறேன். பல விசித்திரமான அனுபவங்கள் இந்த ஊழியத்திலே எனக்கு ஏற்பட்டிருக்கிறது. பல பிரச்சினைகளுக்காக பலவித சூழ்நிலைகளில் என்னை ஜனங்கள் அழைத்து ஜெபிப்பதற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

விளையாத நிலங்கள், பட்டுப்போன மரங்கள், காய்க்காத தோட்டங்கள், திருமணமாகாத குடும்பங்கள், செழிக்காத வியாபாரங்கள், பில்லி சூனியக் கட்டுகள் இப்படி பல காரியங்களுக்கு ஜனங்கள் அழைத்துச் சென்று என்னை ஜெபிக்க வைத்திருக்கிறார்கள்.

சாத்தூர் என்ற இடத்தில் அருமையான சகோதரர் முத்துக்கனி, சகோதரி சுலோச்சனா அவர்கள் கர்த்தரின் ஊழியத்திற்கு மிகவும் உதவியாய் இருக்கிறார்கள். எனக்கு அருமையான குடும்பம். அவர்களுடைய வீட்டில் பல வருடங்களாக ஒரு மாமரம் காய்க்காமலேயே இருந்தது. முடிவாக, அதை வெட்டிப் போடவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அந்த வேளையில் நான் எதிர்பாராமல் அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். என்னைப் பார்த்தவுடனே அவர்கள் இதோ, அங்கிள் வந்திருக்கிறார்கள். அவர்களை வந்து ஜெபிக்க சொல்லுங்கள். அப்பொழுது, இந்த மரம் காய்த்துவிடும் என்றார்கள். சிறு விசுவாசம் தான். குழந்தையைப் போல் விசுவாசிப்பதைத்தான் கர்த்தர் எதிர்பார்க்கின்றார்.

நான் அந்த மரத்தை நோக்கிப் பார்த்த போது, மரத்தை வெட்டுவதைப் பார்க்கிலும் மரத்தை காய்க்க வைப்பதே விசுவாசத்தை செயல்படுத்தும் வழி என்று உணர்ந்து கொண்டேன்.

கர்த்தர் ஆரோனின் கோலை எனக்கு நினைப்பூட்டினார் –எண் 17:9. ஆரோனின் கோல் அன்று துளிர்த்திருக்குமானால், இன்றைக்கு இந்த மாமரம் ஏன் துளிர்த்து காய்க்காது? நம் தேவன் ஜீவனுள்ளவர். ஏன் நாம் அவரிடம் ஜெபிக்கக் கூடாது என்று தீர்மானித்தேன்.

அந்தக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் அழைத்துக் கொண்டு அந்த மரத்தின் அருகில் நின்று ஆண்டவரே, பல வருடங்களாகக் காய்க்காமல் இருந்த இந்த மரம் இனி காய்க்கட்டும். உம்முடைய நாமத்தின் மகிமைக்காக கனி கொடுக்கட்டும். உம்முடைய நாமத்தினால் இந்த மரத்திற்கு நான் கட்டளை கொடுக்கிறேன் என்று சொல்லி ஜெபித்தேன்.

அது மாமரம் காய்க்கக் கூடிய காலமும் அல்ல. கனி வரக் கூடிய காலமும் அல்ல. என்றாலும் நான் ஜெபித்த சில நாட்களுக்குள் இந்த மாமரம் பூத்து காய்த்தது. அது பூத்திருக்கிறது என்ற செய்தியைக் கேட்டவுடன் நான் ஆண்டவரைத் துதித்தேன். கொஞ்ச நாட்களில் அதிலே பிஞ்சு வந்தது. அதிலுள்ள முதல் மூன்று காய்களை பறித்து 84ஆம் வருடம் நவம்பர் மாதத்தில் என்னிடத்தில் கொண்டு வந்தார்கள். அந்த வருடம் முதல் இப்பொழுதும் அந்த மரம் தொடர்ந்து காய்த்துக் கொண்டே இருக்கிறது. கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

மாமரம் காய்ப்பது பெரிய காரியமல்ல. ஆனால் கர்த்தர் தம்முடைய வசனத்தை எப்படி உறுதிப்படுத்துகிறார் என்பதே நமக்கு ஆச்சரியமும், அருமையுமாக இருக்கிறது. எப்போதும் தேவன் தம்முடைய வார்த்தைகளை உறுதிப்படுத்துகிறார். அவருடைய வசனம் ஒரு போதும் பொய்யாய்ப் போவதேயில்லை. அவருடைய வார்த்தைகளை நாம் பரிபூரணமாய் விசுவாசிப்போமானால், நம்முடைய வாழ்க்கையிலும் அவர் அற்புதத்தையும், அதிசயத்தையும் நிச்சயமாகவே செய்வார்.

ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றி ரோமர் 4:17இல் நாம் வாசிக்கிறோம். அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாகிய தேவனுக்கு முன்பாக நமக்கெல்லோருக்கும் தகப்பனானான்.

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிற தேவன் நம் தேவன். வெறுமையில் இருந்து உலகத்தை சிருஷ்டித்தார். அவர் இன்றைக்கும் ஜீவனுள்ளவராக இருக்கிறார். நமது ஜெபத்தைக் கேட்கிறார். அற்புதங்களைச் செய்கிறார். தேவ பிளளையே, அவர் மேல் விசுவாசம் வைப்பாயா?

ஒருமுறை பொதிகையடி என்ற இடத்திற்குச் சென்றேன்.

அது பாபநாசத்திற்கு அருகில் இருக்கிறது. அங்கே சகோதரர் தாமஸ் என்னை ஜெபிக்க அழைத்துக் கொண்டு சென்றார். இவர்கள் குடும்பத்தில் கர்த்தர் அநேக அற்புதங்களை செய்திருக்கிறார். அங்கே ஒரு பலாமரம் காய்ந்து போய் நின்றது. அந்த பலாமரத்தை வெட்டப் போனார்கள். நான் அதைப் பார்த்து வெட்ட வேண்டாம். நான் ஜெபித்து தண்ணீர் ஊற்றப் போகிறேன். அற்புதத்தைச் செய்கிற தேவன் ஜீவனோடு இருக்கிறார். ஆண்டவர் அதை துளிர்த்து விளையச் செய்வார் என்றேன்.

நான் கொஞ்சம் தண்ணீர் எடுத்து ஜெபித்து ஆண்டவரே, இந்த மரத்தை நீர் உயிர்ப்பிக்க வேண்டும். விளையச் செய்ய வேண்டும் என்று சொல்லி ஜெபித்து அந்த தண்ணீரை ஊற்றினேன். கர்த்தர் அற்புதத்தைச் செய்ய வல்லமையுள்ளவராக இருந்தார். இன்றைக்கும் நீங்கள் அங்கே சென்றால், அந்த மரத்தைக் காணலாம். அந்த மரம் பசுமையாய்ச் செழித்துப் பலன் தருவதைப் பார்க்கலாம்.

இவ்விதமாக ஒருமுறை கன்னியாகுமரி மாவட்டத்தில் நான் ஊழியத்திற்கு போய் இருந்த போது, சென்னையிலிருந்து ராஜு சாம்ராஜ் ஆகிய சகோதரர்களும், என்னோடு கூட வந்திருந்தார்கள். அங்கே ஒரு புளிய மரம் பட்டுப் போயிருந்தது. அதற்காக நான் ஊக்கமாய் ஜெபித்தேன். ஆண்டவரே சமுத்திரத்திலிருந்து மீன்களை வரவழைத்துக் கொடுத்த தேவன் நீரல்லவோ? சகல விதைகளையும், பூண்டுகளையும், புல்களையும் உண்டாக்கினவர் நீரல்லவோ? உலகத்தையும், உலகத்திலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்த கர்த்தர் நீரல்லவோ? இப்பொழுதே அற்புதத்தைச் செய்யும் என்று மன்றாடினேன். கர்த்தர் அந்த மரத்தை துளிர்க்கச் செய்தார். விளையச் செய்தார். தம்முடைய வாக்கை உறுதிப்படுத்தினார். இப்பொழுது அந்த வீட்டார் பழங்களைப் பறிக்கின்றார்கள்.

தேவபிள்ளையே, உங்களுடைய விசுவாசம் உறுதிப்படுவதாக, கர்த்தர் மேல் முழு நம்பிக்கையையும் வையுங்கள். அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறவர். இன்றைக்கும் மாறாதவராய் இருக்கிறார். அவர் உன்னுடைய

வாழ்க்கையிலே அற்புதத்தைச் செய்வார். நம்முடைய விசுவாசம் பெருகவே இந்த சிறு அற்புதங்களை எடுத்துச் சொல்கின்றேன்.

நான் எழுதிக் கொண்டிருக்கும் போதே கர்த்தர் அடியேனுடைய ஊழியத்தில் செய்த எண்ணில்லாத அற்புதங்கள் ஞாபகத்திற்கு வந்து கொண்டேயிருக்கிறது. அநேகக் குடும்பங்கள் சாபத்தினாலும், சத்துருவினுடைய போராட்டத்தினாலும், விருத்தியில்லாமலும் பட்ட மரங்கள் போல் இருக்கும் போது கர்த்தர் அவர்களுடைய வாழ்க்கையில் அற்புதத்தைச் செய்து கொண்டேயிருக்கிறார். ஒரு குடும்பத்தார் என்னை வந்து சந்தித்தார்கள். அவர்களுக்கு பல ஆண்டுகளாக குழந்தைகள் இல்லை. அந்த சகோதரன் பெயர் சாம்ராஜ். அவர் என்னிடம் வந்து ஒரு குழந்தையை எடுத்து வளர்க்கலாம் என்று நினைக்கிறோம். உங்களுடைய ஆலோசனையை எதிர்பார்க்கிறோம் என்று சொன்னார்கள்.

நான் அவர்களுக்காக ஊக்கமாய் ஜெபித்தேன். ஒரு குழந்தை படம் உடைய ஒரு காலண்டரை எடுத்து அவர்கள் கையில் கொடுத்து கர்த்தர் இதுபோன்ற ஒரு அழகிய குழந்தையை உங்களுக்குக் கொடுக்கப் போகிறார். ஆகவே நீங்கள் இதைக் கொண்டுபோய் உங்கள் வீட்டில் மாட்டுங்கள் என்றேன்.

நான் சொல்லியபடியே அந்தக் குழந்தை காலண்டரை கொண்டு போய் அவர்கள் வீட்டில் மாட்டினார்கள். கர்த்தர் எங்களுக்கு குழந்தை பாக்கியம் கொடுக்கும் வரையிலும், இந்த காலண்டரை இங்கேதான் வைத்திருப்போம் என்று உறுதியாகச் சொன்னார்கள். எங்களுக்கு நெருங்கின உமா என்ற ஒரு சகோதரி ஒரு தொட்டிலைக் கொடுத்து இந்த தொட்டிலையும் உங்களுடைய வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களுக்கு கொடுக்கப் போகிற குழந்தை இந்த தொட்டிலில் வளரட்டும் என்று சொன்னாள். அது கேலி செய்வது போல் இருந்தாலும் நானும் அதை விசுவாசத்திற்கு அடையாளமாக இருக்கட்டும் என்றேன்.

அந்த சகோதரனை டாக்டர்கள் முன்பு முழுவதுமாக பரிசோதனை செய்துவிட்டு, அவருக்கு குழந்தை இருக்காது என்று சொல்லியிருந்தார்கள். ஜெபித்த பின்பு அவர் மீண்டும் டாக்டரிடம் சென்றார். மீண்டும் பரிசோதனை செய்துவிட்டு இப்பொழுது உங்களில் எந்தக் குறையும் இல்லை. குழந்தைப் பாக்கியம் உங்களுக்குக் கிடைப்பதற்கு நீங்கள் தகுதியுள்ளவராக இருக்கிறீர்கள் என்று சொன்னார்.

ஒன்பது ஆண்டுகளாக அவர்கள் குழந்தையில்லாமல் இருந்தார்கள். ஜெபித்த அந்த ஆண்டிலேயே லலிதாவிற்கு

கருத்தரித்தது. கர்த்தர் ஒரு ஆசீர்வாதமான பெண் குழந்தையைக் கொடுத்தார். முதல் குழந்தையின் பெயர் டெபில்லா. இந்தப் பெயருக்கு எபிரேய மொழியில் 'ஜெபம்' என்று அர்த்தம். இப்பொழுது அந்த வீட்டில் ஒரு மகனும் துருதுரு என்று ஓடிக் கொண்டிருக்கிறான். அவனுடைய பெயர் தீமோத்தேயு.

இப்படியாக தேவன் அநேக அற்புதங்களை ஏராளமான குடும்பங்களில் செய்திருக்கிறார். அவற்றையெல்லாம் எழுத வேண்டும் என்றால் இந்தப் புத்தகம் போதாது. ஆனால் ஒன்றை மாத்திரம் அறிவேன். யார் யார் விசுவாசத்தோடு தேவனை நோக்கிப் பார்க்கிறார்களோ, யார் அவரிடத்தில் மன்றாடுகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் கர்த்தர் அற்புதத்தைச் செய்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையின் அற்புதங்கள் மற்றவர்களை கர்த்தரிடம் நடத்த ஏதுவாக அமைகின்றது. இன்று அவர்கள் வீட்டில் ஒரு நல்ல ஜெபக் கூட்டம் ஒழுங்காக நடக்கின்றது.

சாராளுக்கு முதிர் வயதிலே கர்ப்பத்தைத் திறந்து குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டார். நிச்சயமாகவே கர்த்தரைத் தேடுகிற ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் அற்புதத்தைச் செய்ய வல்லமையுள்ளவராக இருக்கிறார். அன்றைக்கு சாராளின் பிரசவம், இயற்கையான பிரசவமாக இருந்திருக்கும் என்றே நான் விசுவாசிக்கிறேன். நிச்சயமாக அது அறுவை சிகிச்சை பிரசவமாக இருந்திருக்காது. பிரசவத்திற்காகப் பயன்படுத்துகிற சகோதரிகளிடத்தில் நான் விளையாட்டாக சொல்வது உண்டு. அப்படியே கர்த்தரிடம் ஜெபிக்கும் போது சுக பிரசவத்தைத் தந்தருளுகிறார்.

இதை வாசிக்கின்ற சகோதரிகளே, ஒருவேளை உங்களுடைய குடும்பத்தில் நீண்ட நாட்களாக குழந்தையில்லாமல் இருக்கிறேனே என்று கவலைப்படுகிறீர்களா? இன்றைக்கு ஒரு பொருத்தனை பண்ணி ஜெபம் செய்யுங்கள். குழந்தையில்லாத அன்னாள் ஒரு பொருத்தனையோடு ஜெபித்தாள். கர்த்தர் ஆசீர்வாதமான சாமுவேலையும், இன்னும் ஐந்து குழந்தைகளையும் தருவதற்கு வல்லமையுள்ளவராக இருந்தார். அந்த தேவன் உங்களுடைய தேவனும் கூட! உங்களுடைய வாழ்க்கையில் அற்புதத்தைச் செய்ய அவர் இன்றைக்கும் என்றென்றைக்கும் வல்லமையுள்ளவராகவே இருக்கிறார்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் - 11

[illegible]

'என் கண்கள் கண்டவைகள்' என்று நான் கண்ட சில அனுபவங்களை மாத்திரமே இதில் குறிப்பிட்டேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் கர்த்தரின் கிருபையை ருசித்துக் கொண்டிருக்கிறேன்.

என்னால் செய்ய முடியாத ஊழியங்களை என்னோடு கரம் கோர்த்து உதவிச் செய்ய தேவன் பரிசுத்தவான்களை இங்கும் அங்குமாய் தெரிந்து கொண்டிருக்கிறார். நான் காண்கின்ற கிருபைகளை அவர்களும் காண்கிறார்கள். நீங்கள் அனைவரும் இப்படிப்பட்ட வல்லமையைப் பெற்றுக் கொண்டு கிறிஸ்துவின் கிருபையை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மத்தேயுவில் கடைசி அதிகாரத்தில் அருமை இரட்சகர் '**வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் (இந்த அதிகாரத்தைப் பெற்ற நீங்கள்) புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, ஞானஸ்நானம் கொடுங்கள். உங்கள் முடிவு பரியந்தம், சகல நாட்களிலும் (அதை வாசித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலும்) உங்களோடு இருக்கிறேன்**' என்று வாக்களித்துள்ளார்.

ஆகையால் இந்த அற்புதங்களைக் காண்கின்ற நாம் எல்லோரும் பாக்கியவான்கள். ஆனாலும் பரலோகத்தில் நம்முடைய நாமங்கள் எழுதப்பட்டிருப்பதற்காகத்தான் நாம் சந்தோஷப்பட வேண்டும். அவர் சித்தத்தைச் செய்யாமல் அற்புதங்களையும் அடையாளங்களையும் மாத்திரம் செய்து கொண்டு இருப்போமானால் தேவன் நம்மைப் பார்த்து, '**உங்களை அறியேன், நீங்கள் அக்கிரமக்காரர்**' என்று கை விட்டு விடுவார். அப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் நமக்கு வராதபடி கர்த்தரை மனதாரப் பற்றிக் கொள்வோமாக. இத்தனை பெரிய ஊழியங்களைச் செய்ய நான் பெலனற்றவன் என்பதை உணருகிறேன். தேவன் என்னுடைய ஊழியங்களின் மூலமாக தொட்ட தேவ பிள்ளைகளை வரங்களினால் நிரப்பி அவர்களையும் உபயோகப்படுத்துகிறார்.

எனக்கன்பான சிவகாசி சகோதரன் ராபின்சன் என் ஊழியங்களின் பாரங்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். 1978 ஆம்

ஆண்டு ஜூலை மாதம் நான் அவருடைய வீட்டுக்குப் போனபோது அவர் வியாதியுள்ளவராகவும், நஷ்டப்பட்டவராகவும், அழிவுக்கு நேரானவராகவும் இருந்தார். தேவனை அறியாதவராக பயங்கர உலக பந்தங்களுக்குள் சிக்கி இருந்த அவரை கர்த்தர் தூக்கி எடுத்து, நிலை நிறுத்தி, ஓர் அற்புத சாட்சியாய் வைத்திருக்கிறார். அது மட்டுமல்ல, எந்தெந்த வியாதிகள் இருந்ததோ அவை எல்லாம் அன்றே நீக்கப்பட்டது. அது கர்த்தரின் அநுக்கிரகம். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. அவர் மூலமாக எத்தனையோ ஆத்துமாக்களை தேவன் சந்தித்தார்.

இப்படியே எனக்கன்பான தர்மராஜ் குடும்பத்தாரும் சிவகாசியில் உண்டு. அவர்களும் தங்கள் வீடுகளில் ஜெபம் நடத்தி அநேகருடைய கண்ணீரைத் துடைக்கின்றார்கள். சகோதரன் டிஜிஎஸ் தினகரன், சிவகாசிக்கு சென்ற போது, அவர்களின் இல்லத்தில் தங்கினார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

அப்படியே மதுரையில் காலஞ்சென்ற சகோ. ஜேம்ஸ் சாமுவேல் ஏராளமான ஜெப ஊழியத்தில் எனக்கு துணை நின்றவர். அதன் மூலமாக தேவனால் தொடப்பட்டவர்கள் அநேகர். யோவான் 14:1இல் அந்திரேயாதான் பேதுருவை ஆண்டவருக்கு அறிமுகம் செய்கிறான். வாசிக்கிற ஆண்டவருடைய பிள்ளைகளே எத்தனை பேருக்கு இந்த இயேசுவை அறிமுகம் செய்யப் போகிறீர்கள்?

என் அருமையான சகோ. சாம் ஜெபத்துரை இரவும் பகலும் பாடுபட்டு கர்த்தருடைய ஊழியம் செய்வதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். எனக்கு இசை வாசிக்க அழைக்கும் போதெல்லாம் உதவும் திருச்சி ஜெபக்குமார் இன்னும் பாடல்கள் பாட ஒத்துழைக்கும் மகள் டாக்டர் மாலினி ஜெயசிங் இப்படி அநேகர் கிறிஸ்துவின் ராஜ்யம் கட்டப்பட தங்களால் முடிந்ததை மனதார செய்கின்றார்கள்.

சிலர் தங்கள் காணிக்கைகளினாலும், கர்த்தர் ஊழியத்தை தாங்குகிறார்கள் – லூக்கா 8:3. அன்பான ஆண்டவருடைய பிள்ளைகள் ஊழியத்திற்கென்று கொடுக்கும் காணிக்கைகளை கூடுமானவரை ஊழியத்திற்கே உபயோகப்படுத்துகிறேன். எத்தனையோ ஆலயங்கள் எழுப்ப, எத்தனையோ குடும்பங்களை அழிவிலிருந்து தூக்கி விட கர்த்தர் கிருபை செய்தார். என் சொந்த சொத்துக்களை விற்று பல கிராம ஊழியங்களையும், ஆலயங்களையும் எழுப்ப கர்த்தர் கிருபை செய்தார்.

கத்தோலிக்கர் மத்தியில் ஊழியம் செய்யும் டாக்டர் சுரேஷ் குழுவினரும், நாகர்கோவில் திரு. சுதாகர் குடும்பமும் அநேக

ஊழியங்களில் இணைந்து செய்கிறார்கள். பத்திரிக்கையோ, டி.வி. நிகழ்ச்சிகளோ இல்லாமல் தமிழ்நாடு, ஆந்திரா, வடநாடு பகுதிகளில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்கிறார். கற்பனைக்கு எட்டாத அநேக அற்புதங்களை என் கண்கள் கண்டு கொண்டிருக்கிறது. காரணம், உங்கள் ஜெபமும், கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கும் காணிக்கையுமே. என் வயது 82. வாலிபனைப் போல் ஓடி, ஆடி ஊழியம் செய்வதற்கு அநேக அன்பான பிள்ளைகளை கர்த்தர் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

என் அருமையான கர்த்தரின் பிள்ளைகளுக்கு நான் கூறுவது இதுதான். நாம் எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக்கே அதைச் செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தை சகலருக்கும் அறிவிக்கப்பட பாடுபடவேண்டும். அதற்காக கர்த்தர் ஆவியின் வரங்களையும் - 1 கொரி 3:7–10, அற்புதங்களையும் வைத்திருக்கிறார். நீங்கள் எத்தனை ஆத்துமாக்களை, ஆதாயம் செய்திருக்கின்றீர்கள்? உங்கள் வரங்களை, உங்கள் நேரங்களை யாருக்காக செலவழிக்கின்றீர்கள்? கர்த்தர் சீக்கிரம் வரப் போகிறாரே! அடையாளங்கள் எல்லாம் நிறைவேறுகின்றதே. ஆத்தும ஆதாயம் செய்ய மாட்டீர்களா? கையில் இந்த புத்தகத்தை வைத்திருக்கும் உங்களைத்தான் அவர் தேடி அலைகின்றார். ஏற்றுக் கொள்வீர்களா?

நான் எழுதிய புத்தகங்கள் இரண்டு தான். பல மொழிகளில் வெளிவர கர்த்தர் உதவி செய்தார். கடந்த சில ஆண்டுகளில் கண்ட ஏராளமான அற்புதங்களையும், அதிசயங்களையும் தொகுத்துக் கொண்டு வருகிறேன். சீக்கிரம் வெளியிட முயற்சிக்கிறேன். ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்த புத்தகத்தின் மறுபதிப்பை வெளியிடும் பொறுப்பை சுவிசேஷகர் எஸ்.தாயப்பன் அவர்கள் ஏற்று செய்துள்ளார்கள். அவரும் அருமையாக 73 வயதிலும் ஓடி ஓடி ஊழியம் செய்கிறார்கள். நான் செல்லும் இடங்களிலெல்லாம் அவரைப் பற்றி கேள்விப்படுகிறேன். அவர்கள் வீட்டிற்கும் சென்று ஜெபித்து வந்தேன். கர்த்தர் அவர்களையும், அவர்கள் குடும்பத்தாரையும் அதிகமதிகமாய் ஆசீர்வதிப்பாராக!

சமாதானத்தின் தேவன், சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென் - 1 ரோமர் 16:20.

பதிப்பாசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 72 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும். பின்னர் பென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம் மற்றும் இவரின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும் 3000க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும் மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777